www.tamilarangam.net

VAISHNA SUPERFO...
0208 399...

# எரிமலை

ஜூன் 2004



வலிந்து கரையும் பொழுதின் மயக்கத்தில்
உறையும் வாழ்விலும்..
பொதிந்திருக்கின்றது ஒரு காத்திருப்பு!

காத்திருப்பு என்பது..
ஒரு புலர்விற்கானது!
வசந்த காலம் ஒன்றின் துளிர்ப்பிற்கானது!
இருள் கரைந்த ஒரு காலையின்
ஆர்வம் மிக்க தொடுகைக்கானது.. இக்காத்திருப்பு!
பிரபஞ்ச இயக்கத்தில் பொய்த்துப்போகாதது விடிவு
என்ற நம்பிக்கையிலானது இக்காத்திருப்பு!!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அட்டைப்படக் கவிதை
ஜெயா



ஓய்வுபெற்றும் ஓய்வில்லை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# எரிமலை

உள்ளே...



06 யாழ் நூலகமும் செம்மணி வெளியும்





10 இன்றொரு காலம்



12 பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்துடனான நேர்காணல்

## கட்டுரைகள்


தென்னாபிரிக்க விடுதலைப்போராட்ட வரலாற்றில் பெண்களின் பங்கு - கலைத்தமிழ் ........ 30

தன்னிறைவான பொருளாதார அபிவிருத்தியில் பனை, தென்னை உற்பத்தியில் இன்றைய பங்கு ........ 36

சோவியத் இராணுவப் புலனாய்வு - கலாநிதி க. சோமாஸ்கந்தன் ........ 38


## அணையாத தீபங்கள்


மேஜர் தணிகா ........ 46


## உண்மைப் பதிவு


மண்ணை நேசித்த குடும்பங்கள் - மணலாறு விஜயன் ........ 42

தீச்சுடர் - தமிழ்க்கவி ........ 48


## சிறுகதை


உடைவு - தேஜோமஜன் ........ 18

அழிவு நாள் - சு.மகேந்திரன் ........ 22

கடலம்மா - சாந்தினி வரதராஜன் ........ 32


## கவிதை


விசாரணைகள் மூன்று - புதுவை இரத்தினதுரையின் கவிதைகள் ........ 04

துகிலுரிதல் - தா.பாலகணேசன் ........ 09

வீதிபற்றியதான குறிப்புக்கள் - கருணை ரவி ........ 21

எனதுதான் - பொன்.காந்தன் ........ 27

அழகிய மனங்கள் வேண்டும் எங்களுக்கு - அம்புலி ........ 28

யாவும் கற்பனையோ? - சாந்தினி வரதராஜன் ........ 41

மன்னித்து விடு - இத்தாவில் க.சிவராசா ........ 45


## தொகுப்பு


நினைவுக்குறிப்பு ........ 52

மீள்பார்வை ........ 53

பதிவுகள் ........ 54




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





"நாம் சுதந்திர மனிதர்களாக, எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் உரிமைபெற்றவர்களாக, இறைமை பெற்றவர்களாக இருந்தால்தான், கல்வி உட்பட சகல சமூக அமைப்புக்களையும் ஒரு உன்னதமான வளர்ச்சிப்போக்கில் உயர்நிலைக்கு நகர்த்திச் செல்ல முடியும்."

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு **வே.பிரபாகரன்** அவர்கள்

தமிழீழ மாணவர் எழுச்சிநாள் ஜூன் 6



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

இருபத்திமூன்றாம் ஆண்டு

ஜூன்
**2004**

திருவள்ளுவர் ஆண்டு **2035**


ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு


**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

C/O T.C.C-France,

341, Rue des Pyrenees,

75020 Paris.

Tel: 01 - 43 58 11 42

Fax: 01 - 43 58 11 91

e.mail:editor@erimalai.com

www.erimalai.com


# தலைவாசல்

## மரக் குதிரை

அவதானமாக இருங்கள்! கிரேக்கர்கள் அன்பளிப்புக்களோடு வருகின் றார்கள், என்ற பழமொழி ஆங்கிலத்தில் உண்டு. இதற்கு ஒரு பின்னணிச் செய்தி இருப்பதால் அது பற்றிப் பார்ப்போம். புராதன கால கிரேக்கர்கள் தமது எதிரி நாட்டின் கோட்டைச் சுவர்களை முற்றுகை இட்டனர். பத்துவருட கால முயற்சி பயனளிக்காத நிலையில் அவர்கள் ஒரு சூழ்ச்சியைச் செய்தனர். நான்கு சக்கரம் பூட்டிய பிரமாண்டமான மரக்குதிரையைச் செய்து அதற்குள் இருக்கைகளை அமைத்து, தமது போர்வீரர்களைக் குதிரைக்குள் இருத்தினர்.

பின்பு மதில் சுவர்களுக்கு வெளியே குதிரையை நிறுத்திவிட்டுத் தோல்வியை ஒப்புக்கொண்டு வெளியேறுவது போல் பாசாங்கு செய்தனர். சூழ்ச்சியை இனங்காண முடியாத எதிரிகள் மரக்குதிரையைத் தமது கோட்டைக்குள் இழுத்துச் சென்றனர். அன்று அவர்கள் ஆழந்த உறக்கத்தில் இருக்கும்போது குதிரைக்குள் இருந்து வெளியேறிய கிரேக்கப் போர்வீரர்கள் கோட்டையைத் தாக்கிக் கைப்பற்றினர். இது பல பாடங்களைப் புகட்டும் வரலாறு, நாமும் பலமுறை படிக்க வேண்டிய வரலாற்று நிகழ்ச்சி.

அன்பளிப்புக்களையும் நன்கொடைகளையும் மிகவும் அவதானமாகக் கையாள வேண்டும் என்பது முதல் பாடம். அவை 'மரக் குதிரையாக' இருக்கலாம். மே 25ஆம் நாள் ஒரு தொகுதி இசைக் கருவிகளை யாழ் நுண் கலைக் கழகத்திற்கு அன்பளிப்புச் செய்த பின் இந்தியத் தூதர் நிருபம் சென் சில புரட்சிகரமான கருத்துக்களை தெரிவித்தார் "புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களிலும் இந்தியா உதவி செய்யத் தயாராக இருக்கின்றது. புலி களுடன் பேச வேண்டிய தேவை எழாது. இந்தியாவின் தனியார் நிறுவனங்கள் ஊடாக இதை நாம் செய்யலாம்" என்று அவர் கூறியதோடு "இந்தியா வழங்கும் உதவிகளுக்கு பிழையான அர்த்தங்களைக் கற்பிக்கக் கூடாது" என்றார்.

பிழையான அர்த்தங்கள் கற்பிக்கக் கூடாது என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை, ஆனால் சொல்லி விட்டார். தமிழ் மக்களுக்கும் அவர் களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் புலிகளுக்கும் எதிர்நிலை எடுப்பதையே தனது இராசதந்திரமாகக் கொண்டுள்ள சென்னின் நடவடிக்கைகளை சந் தேகக் கண்கொண்டு பார்ப்பதில் தவறில்லை. புலிகளுக்கு எதிரானவர்களை அரவணைக்கும் போக்கை அவர் கைவிடாதவரையில் அவருடைய ஒவ்வொரு நகர்வையும் அவதானமாக எதிர்கொள்ள வேண்டிய நிலையில் தமிழ் மக்கள் இருக்கின்றனர்.

தமிழ் மக்கள் நிராகரித்த ஆனந்தசங்கரி, டக்ளஸ் தேவானந்தா போன் றோரைத் தூதரகத்திற்கு அழைத்து உபசரிப்பதோடு தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளைச் செய்யும்படி தூண்டுபவராகவும் நிருபம் சென் விளங்குகின்றார். இராசதந்திரியின் எல்லையைக் கடந்து அரசியல்வாதி போன்று நடப்பது இவர் இயல்பு. சென்ற மாதம் யாழ் விஜயம் மேற்கொண்ட சென் தமிழப் பத்திரிகைகள் தம்மைக் கடுமையாக விமர்சிப்பதாக புகார் செய்தார். தமிழ்ப் பத்திரிகைகளுக்கு முதுகெலும்பு இருப்பதை அவர் ஒத்துக் கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







# விசாரணைகள் மூன்று

புதுவை
இரத்தினதுரையின்
கவிதைகள்

## பூனை மயிர்களின் காலம்



கிழவனுக்குப் பெரிய மீசை
கொடுவாக்கத்தி போல
சிறுவனுக்குப் பூனைமயிர்
பூஞ்சனம் மாதிரி.

கோழியொன்று ஏறிற்று தலைவாசல்
கல்லெடுத்து எறிந்தது பூனைமயிர்
கொல்லடா என்றது கொடுவாக்கத்தி.

நாயொன்று வந்தது முற்றம்
பார்த்திருந்தான் சிறுவன்.
அடியடா என்றான் கிழவன்.

ஊரை வளைத்து
ஆங்காங்கு முள்பரவி
நானுன் ஆண்டையெனும் மிதப்பில்
வேலி புகுந்து வளவுள்ளே வந்தன
கொம்பேந்திய எருமைகள்

கல்லெடுத்தான் சிறுவன் எறிய
அட, பேயா போடடா கீழேயென்று
பதறினான் கிழவன்.

ஏனப்பு என்றது பூனைமயிர் பலமாக

குழுமாடுகளடா குத்திக் கிழிக்கும்
பதுங்கினால் தப்பிவிடலாமென



கொடுவாக்கத்தி குசுகுசுத்தது.

வலியதை வணங்கி
எளியதை இடிக்கிறான் பாரென
பெரிய மீசையைப் பார்த்து
புறுபுறுத்தது பூனைமயிர்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net









# இறப்பெனப்படுவது பிறப்பே



இந்த இரவைப் போலவே
நேற்றுச் சாவடைந்த இரவும்
இருந்தது இறுதி மூச்சை எறியும்வரை.
மெல்லிய பனிபூசிக்கொண்டு
முதலிரவுக்குப் பரபரக்கும் மணப்பெண்போல
சந்தோஷத்தில் தலைவாரிக்கொண்டது
இருப்புக்கொள்ளாமல்
நிலவைப் பொட்டிட்டு
முகிலைப் போர்த்திக்கொண்டு
சில்வண்டின் பாட்டுடன் இணைந்து
மோகனம் வழிந்தொழுகப் பாடிற்று
மெல்லியதாய்.
நாணம் மீதுர இடைக்கிடை சிரித்து
தன்னைச் சரிபார்த்தும் கொண்டது.
தனித்திருக்கும் பீதியற்று
முளைத்திருக்கும் காவலரண்களையிட்டும்.
கொல்லாயுதமேந்தி
உலாப்போவோரையிட்டும்
எந்த அச்சமுமின்றி
எதையும் எடுத்தெறியும் பாவனையில்
பாடிக்கொண்டிருந்தது சாமம்வரை.
அதிகாலை சந்தியாகாலமிருக்கும்
அதுக்கு மூச்சுத் திணறியது.
முகம் வெளிறி
ஏதோ முணகிற்று.
அவ்வளவுதான்
சடலமெடுத்தெரிக்கும் சிரமமும் தராது
காணாமற் போயிருந்தது காலையில்.
இந்தோ இன்றைய இரவிருந்தும் பாடுகிறது
எத்தனை புளகிதமாய்.
ஐயோ பாவம்.

# மனதில் அழித்தெழுதல்

வேலியில் கூவிற்று சேவல்
விடிந்தது எனச்சொல்லி.
எழும்புவதாய் காணோம் எவரும்
போங்கடா
நீங்களும் உம் தூக்கமுமெனச் சொல்லி
கீழிறங்கிக் கிளறத் தொடங்கிற்று.
கனவுடனும்,
சுமையுடனும் மனிதர்
எழும்பவா முடியும்?
மகிழ்வுடனும்,
வயிறுடனுமே கோழிகள்
தூங்கவா முடியும்?
ஆச்சரியம் என்னவெனில்
எல்லாவற்றுக்கும் ஒன்றாகவே
விடிவதும்
இருள்வதும் தான்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாழ் நூலகமும் செம்மணி வெளியும்

சிவா சின்னப்பொடி





புனரமைப்புச் செய்யப்பட்ட யாழ் நூலகம்

ஒரு இனத்தை அழிக்க வேண்டும் என்றால் அந்த இனத்தின் கலாச்சார மற்றும் பண்பாட்டுக் கூறுகளை அழிப்பதென்பது பேரினவாதிகளும் இனச்சுத்திகரிப்பாளர்களும் காலாகாலமாக கடை பிடித்துவரும் ஒரு நடவடிக்கையாகும்.

இந்த அடிப்படையிலேதான் சிறீலங்காவின் பௌத்த சிங்களப் பேரினவாதிகளும் 1981ம் ஆண்டு மே மாதம் 31ம் திகதி யாழ்ப்பாணம் பொது நூலகத்தை தீக்கிரையாக்கியிருந்தார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் ( ஐக்கிய தேசியக் கட்சி) ஆட்சிக்காலத்தில் அமைச்சர் களாக இருந்த சிறில் மத்தியூ மற்றும் காமினி திசநாயக்கா ஆகியோரின் மேற்பார்வையில் இந்த நூலகம் அரசபடைகளால் தீக்கிரையாக் கப்பட்டதென்பது வரலாறு.

இந்த நூலக எரிப்பென்பது பின்னால் நடந்த பல இன அழிப்பு மற்றும் இனப்படு கொலைச் சம்பவங்களோடு ஒப்பிடும் போது சிறிய சம்பவமாக மாறிவிட்டாலும், சர்வ தேசத்துக்கு பௌத்த சிங்களப் பேரினவாதத் தின் கோரமுகத்தை அடையாளப்படுத்தும் சாட்சியாக எரியுண்டு போன நூலகக் கட்டிடம் இருந்தது.

இந்த நூலகம் எரியுண்ட போது அங்கி ருந்த நூல்கள் அதாவது வெறும் கடதாசிக் கட்டுகள் மட்டும் எரியுண்டு போகவில்லை. அந்த நூல்களோடு உறவாடிய இலட்சக் கணக்கான தமிழ்மக்களின் ஆன்மாவும் அவர் களது கலாச்சாரத் தளமும் எரியுண்டு போனது.

இந்த இலட்சக்கணக்கான மக்களின் ஆன்மாவுக்கு, கலாச்சாரத்தளத்துக்கு ஏற்பட்ட பாதிப்பை - இழப்பை நாங்கள் தனித்தனியே அழைத்துவந்து பட்டியலிட்டுக் காண்பிக்க முடியாது.

ஆனால் எரிந்த நெருப்பில் எரியாமல் எஞ்சியிருந்த நூலகக்கட்டிடம் இந்தப் பாதிப் பின் நேரடிச்சாட்சியாக இருந்தது.

இனஅழிப்பு அல்லது ஆக்கிரமிப்புப் போர் ஒன்றில் மக்களுக்கும் அவர்களது பண்பாட் டுக் கலாச்சாரத் தளங்களுக்கும் ஏற்பட்ட பாதிப்பை, அழிவை நினைவூட்டுவதற்காகவே இன்றும் மேற்குலக நாடுகளில் மக்களோடு நெருக்கமான உறவைக்கொண்ட கட்டிடங் கைகளை நினைவுச் சின்னங்களாக வைத்துப் பாதுகாத்து வருகின்றார்கள்.

பிரான்சில் ஹிட்டலரின் ஆக்கிரமிப்பின் போது அழிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மக்கள் தொடர்பாடல் கட்டிடங்கள் இன்றும் நினைவுச் சின்னங்களாக வைத்துப் பராமரிக் கப்பட்டுவருகின்றன.

தங்களது அழகான நகரங்களில் - கிரா மங்களில் இடிந்துபோன எரிந்து போன ஒரு கட்டிடம் இருப்பதையிட்டு பிரான்ஸ் மக்கள் பெருமை அடைகின்றார்களேயன்றி கவலைப் படுவதில்லை.

ஒரு இனம் தனது கடந்தகால வரலாற்றை எதிர்காலச் சந்ததிக்கு எடுத்துச் சொல்ல



வில்லை என்றால் அந்த இனம் அழிந்து போகும் இது வரலாறு.

யாழ் நூலக விடயத்தில் சந்திரிகா அரசு அவசர அவசரமாக முடிவெடுத்து சில துரோகத்தமிழர்களின் துணையோடு யாழ் நூலகத்தை மறுபடியும் பூசி மெழுகிக் கட்டி எழுப்பி திறந்து வைத்து தமிழர்களுக்கு ஐக் கிய தேசியக் கட்சி அரசால் இழைக்கப்பட்ட அநீதிக்குப் பரிகாரம் செய்துவிட்டதாக பரப் புரை செய்து கொண்டிருக்கிறது.

இந்த நூலகத்தை கட்டி எழுப்பியதன் மூலம் எரியூட்டப்பட்ட தமிழ் மக்களின் ஆன்மா குளிர்ச்சியடைய வைக்கப்பட்டதா? சிதைக்கப்பட்ட கலாச்சார பண்பாட்டு தளங் களுக்கு ஏற்பட்ட இழப்பு ஈடுசெய்யப்பட் டதா? இவை விடைகாணப்படவேண்டிய கேள் விகள்?

தமிழர் தாயகமெங்கும் எத்தனை பாடசா லைகள், எத்தனை நூலகங்கள், எவ்வளவு மக்கள் குடியிருப்புக்கள், எத்தனை மாவீரர் துயிலும் இல்லங்கள் எல்லாம் சந்திரிகா ஆட்சியில் அவரது படைகளால் அழிக்கப்பட் டன. எத்தனை ஆயிரம் தமிழர்கள் கொல்லப் பட்டார்கள். எத்தனை ஆயிரம் குழந்தைகளின் வாழ்வு சிதைக்கப்பட்டது.

புதுப் பொலிவுடன் சந்திரிகா அம்மை யாரின் நல்லெண்ணத்தை காட்டி நிற்பதாக சொல்லும் யாழ் நூலகம் இருக்கும் இடத் திலிருந்து சில கிலோ மீட்டர் தூரத்திலி ருக்கும் செம்மணி வெளியில் உறங்கும் உண்மைகள் எத்தனை எத்தனை?

800க்கும் மேற்பட்ட உயிர்கள் துடித்த துடிப்பு, கடைசி நிமிடத்தில் அவர்கள் எழுப் பியிருக்கக் கூடிய அவலக் குரல்கள்...

எப்படி மறக்கமுடியும்?

எத்தனை குழந்தைகள் இன்னும் அப்பா வருவாரா? அம்மா வருவாவா? என்று ஏங்கிக்கொண்டிருக்கின்றன.

எத்தனை தாய்மார்கள் பாசத்திற்குரிய தங்கள் பிள்ளைகள் வருவார்களா? என்று தவித்தக் கொண்டிருக்கிறார்கள்.

எத்தனை மனைவிமார் தங்கள் அன்புக் குரிய கணவன்மாருக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் வாழ்வைத் தொலைத்து விட்டு நிற்கிறார்கள்.

இத்தனைக்கும் காரணமான சந்திரிகா அம்மையார், யாழ் நூலகத்தை புதுப்பித் ததிலும் ஒரு பேரினவாத நோக்கம் இருக் கிறது


சிறீலங்காவில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த பௌத்த சிங்களப் பேரினவாத அரசு கள் தமிழ் மக்கள் மீது கணக்கிலடங்காத இனஅழிப்பு மற்றும் இனச்சுத்திகரிப்பு நட வடிக்கைகளை கட்டவிழ்த்து விட்டிருக் கின்றன.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




இவற்றில் பலவற்றிற்கு சாட்சிகள் கிடையாது. நவாலி, நாகர்கோவில், மடுத்தேவலயம், கொக்கட்டிச் சோலை, மயிலந்தனை படுகொலைகளுக்கு சாட்சிகள் இருந்தாலும் அவற்றை சட்டத்தின் துணை கொண்டும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அரசு என்ற கவசத்தை தாங்கியும் சிங்களப் பேரனவாதிகள் உலகின் கண்களுக்கு மூடிமறைத்து வந்தனர். செம்மணிப் புதைகுழிகளுக்கும் இதுதான் நடந்தது.

ஆனால் சிறீலங்கா பேரினவாதத்தின் இனவெறித்தாண்டவத்தின் அழிக்க முடியாத மறைக்க முடியாத சாட்சியாக எரிந்த அந்த யாழ் நூலகம் இருந்தது.

எரிநெருப்பில் எரியாமல் எஞ்சியிருந்த அந்த நூலகக் கட்டிடம் சிங்களப் பேரின வாதத்துக்குப் பலியான அத்தனை தமிழ் மக்களினதும் ஆன்மாவைச் சுமந்து நின்றது. அந்தக் கட்டிடத்தை தரைமட்டமாக்கி விட்டால் கூட, அங்கேயுள்ள மண்ணும், அதனருகேயுள்ள ஒரு கருகிப்போன கல்லும் கூட, சிங்களப் பேரினவாதம் எமக்கு இழைத்த அநீதியை சொல்லிக் கொண்டிருக்கும்.

இதையெல்லாம் தடுக்கும் விதத்தில் அந்தநூலகத்தை புனரமைப்புச் செய்து மெருகூட்டிக் கட்டிவிட்டால், பழசெல்லாம் மறந்து போகும். அவர்கள் எரித்தார்கள், இவர்கள் கட்டித்தந்தார்கள் என்று ஏதோ கட்சிச் சண்டை, குழுச் சண்டை நடந்தது போல காட்டப்பட்டு பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் கோர முகம் மறைக்கப்பட்டுவிடும்.

இதைத்தான் சந்திரிகா அம்மையார் இதன் புனரமைப்புக்கு செங்கல் வாங்குவதாக, நூல்வாங்குவதாக சினிமா காட்டி இனவுணர்வு மற்றும் வரலாற்றுப் பெறுமதி தெரியாத சில தமிழுகளையும் இணைத்து செய்து முடித்திருக்கிறார்.

இந்த நூலகத்தை புனரமைப்பு செய்து திறந்து வைப்பதற்கு காட்டிய கரிசனத்தையும் அக்கறையையும் செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் காட்டியிருந்தால் எத்தனையோ குடும்பங்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டிருக்கும்.

ஆனால் அப்படி நடந்திருந்தால் அம்மையாரின் நிம்மதி குலைந்திருக்கும். தற்போது புது மெருகூட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருக்கும் இந்த நூலகத்தை பார்க்கும் ஒவ்வொரு தமிழனுக்கும் செம்மணி புதையுண்டு கிடக்கும் அப்பாவிகளது அவலக்குரல் கேட்க வேண்டும்

சிங்களப் பேரினவாதத்துக்கு இரையான அத்தனை தமிழர்களதும் ஆன்மாவின் குரல் கேட்க வேண்டும்.

வரலாற்றை மறந்த, வரலாற்றை இழந்த எந்த இனமும் வாழ்ந்ததாக வரலாறு இல்லை என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# துகிலுரிதல்

தா.பாலகணேசன்

24.05.2004



மரங்களின் எல்லா வர்ண ஆடைகளையும்
உருவிக்கொண்டு போகிறான் துச்சாடனன்
தீரா வெறிகொண்டு

மர உச்சிகளில்
அனாதரவாய் அலைகிற
பறவைகளின் கூடுகள் பற்றியும்
அவன் அலட்டிக் கொள்ளப்போவதில்லை.

மொட்டை அடித்து
கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி
ஊரின் எல்லைக்கப்பால்
துரத்தப்பட்டவளைப் போன்று நிற்கும் மரங்களில்
நிலவின் ஒளி இறங்கி மீட்டுகிறது
பிரபஞ்சத்துக்கான புதிய கீதத்தை

பருவகாலங்கள் எல்லாம்
தலை கீழாக மாறியிருந்த நாள் ஒன்றில்

பல வர்ண ஆறுகள்
மரங்களின் உச்சிகளில் புரண்டதைப் பற்றிய
கதையாடல்கள்
ஒரு புறமும்
பறவைகளின் காதல் போதை ஏறிய
சங்கீதத்தை ரசித்த
நாட்கள் பற்றிய நினைவாடல்களுமாய்
கிழவர்கள் களைத்துப் போய் இருந்தார்கள்

இருளும் ஒளியுமான
நிழல் கோலங்களை பூமியில் விழுத்தி
அகதிக் கிழவன் ஒருவனின்
வயலின் இசையை ஏந்தி வரும் காற்றில்
அசைந்தன மரக்கிளைகள்

நிர்வாண நிலை எய்திய மரங்கள்
பூமியை நோக்கி வேர்களும்
பிரபஞ்சத்தை நோக்கி பல்லாயிரம்
தூரிகைகளும் கொண்டேகின.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இன்றொரு காலம்

மனநடை

02

ஞானரதன்

அளவெட்டி குருக்கள் கிணற்றடிப் பிள்ளையார் கோவிலைக் கண்டபோது மனம் திடீரெனச் சறுக்கி இளமைக்காலத்துக்குக் கொண்டுபோய்விட்டது. சிறுவனாக உலாவித் திரிந்த ஊரல்லவா? ஊரின் ஒழுங்கைகள், பனைவடலிகள், அதனை ஊடறுத்துச் செல்லும் ஒற்றையடிப் பாதைகள், அவற்றின் கரையோரங்களில் இராணுவத்தின் முட்கம்பிச் சுருள்களாகத் தடைசெய்த ஈச்சமரங்கள் எல்லாமே உருத்தெரியாமல் மாறிப்போயிருந்தன.

ஒரு தலைமுறை இடைவெளிக்குப் பின் ஊரின் அடையாளத்தைத் தேட முற்படுவதும் முட்டாள்தனம்தான். கோவில் மட்டும் பூகோள அமைவிடத்தைச் சுட்டியது. எனது இளமைக் கால நண்பர்கள் யாராவது நடமாடுகிறார்களா எனப் பார்த்தேன். திருவிழாக் காலங்களில் சனம் விலத்துகிற சண்டியன் அப்பாத்துரை நரைத்த தலையுடனும் நடுங்கல் நடையுடனும் பொல்லூன்றி நடக்கிற பரிதாபத்தைக் காண முடிந்தது. தவில், நாதஸ்வரக் கச்சேரியின் இடையே கயிற்றில் தொங்கவிடப்பட்ட 'பெற்றோமக்ஸ்' விளக்குகளைக் கீழே இறக்கிக் காற்றடித்து மேலே உயர்த்துவது அப்பாத்துரைதான். காற்றடிக்கும்போது கறுத்துத் திரண்ட கருங்காலிக்கட்டை போன்ற அவரின் உடலைச் சனம் பார்க்கக் கூடியதாக இருக்கும். கணேசிடம் தவில் பழகிய தட்சணாமூர்த்தி, தந்தையாரான கந்தசாமியிடம் நாதஸ்வரம் பழகிய பத்மநாதன் இளைஞனாகக் கச்சேரி நடத்திய காலமது. (பிற்காலத்தில் தவில், நாதஸ்வர மேதைகளாக புகழ் பெற்றது நீங்கள் அறிந்தவை)

சின்னமேளக் கச்சேரி தொடங்குமுன் மண்டபத்தூண்களைக் கயிற்றினால் பிணைத்துச் சனத்தைக் கட்டுப்படுத்துவதும் பெரும்பாலும் அப்பாத்துரைதான். சின்ன மேளக்கச்சேரியில் பிரபலமான சோடி இந்திரா-சந்திரா புழுதி பறக்க வட்டஞ் சுற்றிச் சுற்றி ஏதோ நடனம் ஆடுவார்கள்.

விடியப்புறச் சரிவு நேரத்தில் வாய்பிளந்து சனம் பார்க்கும். பெரும்பாலும் ஆண்கள்தான். இந்தச் சதுர்க்கச்சேரி இல்லாமலே போய்விட்டது. இல்லாவிட்டால் அதுவும் எமது பண்பாட்டுக் கூறுதான் என்ற வாதப் பிரதிவாதங்கள் விரிவுரையாளர்கள் மட்டத்துக்குப் போயிருக்கும். கிடுகுத் தட்டிகளுக்குள் மறைத்து வைத்து தேரின் முதல்நாள் கிடுகு பிரிக்கிற வேலை இப்பொழுது இல்லைப் போலிருக்கிறது.

தேர் இப்பொழுது நாகரிகமாகக் குடிபுகுந்திருக்கலாம். குருக்கள் கிணற்றடிப் பிள்ளையார் நல்ல வேளையாகப் பாதுகாப்பு வலயத்தனுள் மாட்டுப்படவில்லை. இல்லாவிட்டால் மாவிட்டபுரக் கந்தன் போல நீண்ட சிறைவாசத்தில் அகப்பட நேர்ந்திருக்கும். பிள்ளையார் மூளைசாலி. சிவன் பார்வதியிடம் மாம்பழம் வாங்கியதிலிருந்து இன்றைவரை மூளைசாலிதான். இந்தச் சங்கதி சிங்களவருக்கும் தெரிந்திருக்கிறது போலும்.

"ஞானவந்த தெவியோ" என்று இப்பொழுது வலு மரியாதை. கடந்தகால இனக் கலவரங்களின்போது பிள்ளையார் விக்கிரகங்கள் சிங்கள ஊர்களின் குளங்களுக்குள் வீசப்பட்டன. யானைக்கும் குளிக்க விருப்பம், பிள்ளையாருக்கும் குளிக்க விருப்பம் என்று நினைத்தார்களோ? ஆனால் மீண்டும் பிள்ளையார் வணக்கம் சிங்களப் பகுதிகளில் தொடங்கிவிட்டது.

தமிழனுக்குக் கொடுத்த நுட்ப மூளையை எங்களுக்கும் தாரும் பிள்ளையாரே என்று நினைக்கிறார்கள் போலும். பிள்ளையார் பால் குடிக்கிறார் என்று பிள்ளையார் விக்கிரகங்களுக்கு கரண்டியால் பால் கொடுக்கும் அற்புதம் இந்தியாவிலிருந்து இங்கும் பரவி பரவலாகத் தமிழ்ப் பகுதிகளிலும் பிள்ளையார் பால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குடிக்கின்ற அற்புதம் நடக்கிறதாகச் சனம் ஓடுப்பட்டது. அப்பொழுது தமிழனின் மூளைக்கு என்ன நடந்தது என்பது பிள்ளையாருக்குத்தான் வெளிச்சம்.

முருகனைப் பொறுத்தமட்டில் நிலைப்பாடு வேறு. நல்லூர் முருகன், சந்நிதிமுருகன், மாவிட்டபுர முருகன் என அழைப்பதிலும் பார்க்க பணக்காரக்கந்தன், அன்னதானக் கந்தன், பிச்சைக்காரக்கந்தன் என்ற காரணப் பெயர்களைச் சூட்டியுள்ளனர் பக்தர்கள். மூவருக்கும் இராணுவத்தோடு சமரசம் செய்து வாழ முடிவதில்லை. சூரனிலும் பார்க்க இராணுவம் பெரிய கொம்பா என எண்ணியதால் வந்த வினைபோலும், சந்நிதி தேர் எரிந்தது.

நல்லூர் கோவில் பிரதேசமே அகதி முகாமாக மாறியது. இந்திய இராணுவத்தால், மாவிட்டபுரக் கந்தனுக்குச் சதாகால மறியல் வழங்கியிருக்கிறது சிறீலங்கா இராணுவம். ஆனால் கதிர்காமக்கந்தன் தமிழர்களுக்கு அந்நியபட்டுக்கொண்டே போகும் நிலை. சிங்கள பைலாவுடன் ஆண் பெண் காவடியாட்டமும் பரவாயில்லை என்று சகித்துக்கொள்கிறாரா? இந்தக் கதிர்காமத்துக்கு முன்னைய காலத்தில் கால்நடையாக வடக்கிலிருந்து வருடம் தோறும் போவார்கள். தென்மராட்சியிலுள்ள பன்றித்தலைச்சி அம்மன் கோவில் பொங்கலோடு பாதயாத்திரை தொடங்கும்.

தாடிச் சாமியார்கள், வயோதிப ஆண்களும் பெண்களும் அழுக்கு உடைகளுடன் நெற்றி நிறைந்த வீபூதி சந்தனப்பொட்டு, உருத்திராக்க மாலை, கயிறு கட்டிய தகரப்பேணி (இயற்கைக் கடன் கழிக்க உதவுகிறது போலும்) 'அடைப்பம்' என்றழைக்கப்படும் உடமைப் பொட்டலம் என்பனவற்றுடன் புறீசல்கள் போல புறப்படுவர்.

முக்கியமான ஒரு தாடிச்சாமியார் தலைமை தாங்கிச் செல்வார். 'அரோகரா'ச் சத்தத்துடன் நடை தொடங்கும். இதன் பின்பு வற்றாப்பளை அம்மன் கோவிலின் வைகாசிப் பொங்கலில் ஒன்றுகூடி கிழக்கு மாகாணத்தின் கரையோரமாக நடைதொடரும். ஒரு நாளைக்கு இருபது, முப்பது மைல்கள் நடப்பார்கள். கிழக்கு மாகாணத்துப் போடிமார்கள் வழங்கும் பாற்கஞ்சியையும் உபசரிப்பையும் பக்தர்கள் இலேசில் மறந்துவிடமுடியாது.

உகந்தை முருகன் கோவில்வரை பயணம் தொடரும். கிழக்கு மாகாணத் தமிழர் விருந்தோம்பலை வடக்குக்குச் சொன்னவர்கள் இவர்கள். இப்போது நடைப்பயணம் ஒன்றுமே இல்லை. வடக்கும் கிழக்கும் நீண்ட தரைத் தொடர்புடைய தமிழர் பிரதேசம் என்பதைச் சொன்ன இந்த கதிர்காம யாத்திரை மறந்து போன விடயமாகிவிட்டது.

கிழக்கில் கரையோரம் நெடுகிலும் இராணுவ வலயங்கள். கதிர்காம யாத்திரைக்குப் புறப்பட்டால் வெருகல் ஆற்றுப்பாலத்திலிருந்து தவறிவீழ்ந்து முதலைக்கு இரையாவதுக்குச் சமன் என்பதை அறியாதவர்களா முருக பக்தர்கள். உளவு பார்க்க சாமியார் வேடத்திலா வந்திருக்கிறாய் என்று விசாரணை மட்டுமா படையினர் செய்வார்கள்? கதிர்காமம் போகாமலே சுவர்க்கத்ததுக்கு அனுப்பி விடுவார்கள்.



இந்தக் கொக்குத்தொடுவாய், மணலாற்றுப் பிரதேசமென்று படைகள் ஆட்சிசெய்வது இந்த கதிர்காம நடைப் பயணத்தைத் தடுக்கத் தானோ? இவர்கள்தான் இந்த பாரம்பரியத் தமிழர் பிரதேசமென்ற சங்கதிக்கு வாழும் சாட்சிகளாக இருக்கிறார்கள் என்பதாலா என்பது புரியவில்லை.

சிங்கள அரசியலுக்குள் பௌத்தமதம் புகுந்ததால் வந்த வினை இது. இந்த அரசியலுக்கு மகாத்மாகாந்தி ஆன்மிகத்தைப் புகுத்திப் பரிசோதனை நடத்தியது வரலாறு. ஈற்றில் மத அடிப்படைவாதியின் துப்பாக்கிக் குண்டுக்கு மகாத்மா காந்தி இரையாகியது, மத அடிப்படைவாதம்தான் எதிர்கால அரசியல் ஒழுங்காக வரப்போகிறது என்பதைத்தான் கட்டியம் கூறியதா? அது சரி, எமது நாட்டில் பௌத்த ஆன்மிகக் கோட்பாடுகளைப் பௌத்த மதவாதத்திற்குப் பதிலாக பிரயோகிக்க எந்த பௌத்த அரசியல்வாதியும் முன்வரவில்லை. மகாத்மா காந்தியாக மாற விருப்பம் இல்லைப்போலும். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் குறிப்பாகக் குடாநாட்டு மக்கள் சீட்டுப்பிடிக்கவும், வேலி அடைக்கவும், எல்லைக்கதியால் சண்டை பிடிக்கவும்தான் லாயக்குள்ளவர்கள் என்ற பொதுவான பேச்சுண்டு. ஆனால் இந்த மண்ணில் உதித்த ஆன்மிக வெளிச்சம்பெற்ற, மகான்கள் யாழ்குடாவில் வாழ்ந்த பெருமை உண்டு.

'எப்பொழுதோ முடிந்த கதை, யாவும் உண்மை, நாமறியோம்' என்ற யோக சுவாமிகளைக் குருவாகக்கொண்ட வெள்ளைக்காரச் சுவாமியார் தனது பெயரைச் சுப்பிரமணிய சிவாய என மாற்றி அமெரிக்காவின் கலிபோர்னியாவில் சிவாலயமும், ஆச்சிரமமும் நடத்தியதை நினைவு கொள்ளலாம். அன்றொருநாள் யாழ்ப்பாண நகர மத்தியில் 'வி.எஸ்.எஸ்.கே' கடை முகப்பில் நின்றுகொண்டிருந்தார் யோக சுவாமிகள். நரைத்த தாடி, கையிடுக்கில் பழங்குடை, வேட்டி, குடுமி முடிந்த தலை அவரைக் கண்டதும் மக்கள் சூழ்ந்துகொண்டனர்.

"இவங்களுக்கு மருந்து சொல்லவேணும், சாத்திரம் சொல்ல வேணும்.... ஓடுங்கோடா" எனக்கூறிக் குடையால் விரட்டுகிறார். சனம் கலைந்தபின் அருகில் நின்ற யோகர் சுவாமிகளின் விருப்பத்துக்குரியவரிடம் திரும்பி "எல்லாரும் போட்டாங்களே", எனக் கேட்டுவிட்டு விறுவிறென நடக்கத் தொடங்கினார் யோக சுவாமி. வழமையான தரிப்பிடத்தில் வந்தமர்ந்து கொண்டார். சீடர்கள் பலர் - வைத்திலிங்கம் துரைசாமி, வேலுப்பிள்ளை, இரத்தினராசா எனப்பலர் முன்னால் அமர்ந்திருக்கின்றனர். சங்கானை நாகலிங்கசுவாமி அங்கு வந்தார்.

"நாகலிங்கம் வா... வா... வந்து தேவாரம் திருவாசகம் பாடு. அப்பதான் பொற்காசு வரும்" நாகலிங்கசுவாமி பாடினால் அவரின் கண்களிலிருந்து மட்டுமல்ல கேட்பவர்களின் கண்களிலிருந்தும் கண்ணீர் வருமாம். அவ்வளவு இனிமையான, உருக்கமான குரல். நாகலிங்க சுவாமி காவி வேட்டியுடன் நின்றவாறே பாடினார்.

அப்பொழுது கொழும்பு கறுவாக் காட்டிலிருந்து பிரபல அப்புக்காத்துமார்களான சொக்ஸி, வீரரத்தின காரில் வந்திறங்கி யோக சுவாமியை வணங்கி, அவர் முன்பாக தங்க நாணய முடிச்சை முன்னால் வைத்தனர். யோக சுவாமி அம்முடிச்சிலிருந்த தங்க நாணயமொன்றை எடுத்துக் கார்ச் சாரதிக்குக் கொடுத்தார். ஏனைய நாணயங்களை நாகலிங்க சுவாமியிடம் கொடுத்து "உன் வறுமை வாழ்க்கையைப் போக்கிக்கொள் யாரிடமும் இரங்கத் தேவையில்லை" எனக் கொடுத்தார்.

அப்பொழுது "நாகலிங்கம் பாடினால் சும்மாவா" என நகைக்கிறார் யோகசுவாமி. இது யோகசுவாமியின் சித்துவிளையாட்டோ அற்புதமோ அல்ல. முக்காலத்தையும் உணரக்கூடிய மௌனவெளியின் அதிர்வலைகள் யோகசுவாமியை முன்கூட்டியே பேசவைத்திருக்கிறதா?

(பிறகு...)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்துடனான நேர்காணல்




கார்முகில்

சிறீலங்கா அரசின் கொடூரமானதும், கண்மூடித்தனமானதுமான இந்தக் கடும்போர் சற்று ஓய்வு நிலையில் இருந்தாலும் கூட, அந்தக் கொடூர யுத்தத்தின்போது அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களும் குழந்தைகளும்தான்.

அப்படிப்பட்ட யுத்தத்தின் பாதிப்புக்குள்ளானவர்கள் மன நோய்க்குள்ளாகியதும், கணவனை, தாயை, தந்தையை. உறவு களை இழந்து ஆதரவற்று அநாதரவாக வீதியோரத்தில் அலைந்து திரிந்தனர். இவர்கள் அனைவருக்கும் ஆதரவுக்கரம் கொடுத்து தவும் முகமாகவே, பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு என்ற பெயருடன் ஒரு புனர்வாழ்வு நிறுவனம் 1991ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் நோக் கம் வளர்ச்சி, செயற்பாடுகளை அறியும் ஆவல் எனக்கு மட்டு மல்லாமல் அனைவருக்குமே இருக்கும்தானே! அதன் பொருட்டு நிறுவனத்தினுள் சென்ற என்னை வரவேற்றவள் நிறவனத்தின் பயனாளியில் ஒருத்தியாகிய சிறுமியே.

நான் சென்ற விடயம் அறிந்து நிறவனத்தின் பொறுப்பாளர் அவர்கள் என்னை அழைத்து, விடைதெரியாத வினாக்களுக்கு அவர் விளக்கமளித்தபோது...





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"வடக்குக் கிழக்குப் பகுதியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டது அதிகம் ஆண்களைவிட பெண்களும் குழந்தைகளும்தான்.

இவர்களுக்குப் பெருமளவில் நாம் உதவிகளைச் செய்யவேண்டியிருக்கிறது. இதற்கான நிதியினை எமது நாட்டிலோ அல்லது வெளிநாடுகளிலோ வாழும் தமிழ் பேசும் மக்களும் நலன் விரும்பிகளும் தந்துதவி செய்வார்களாக இருந்தால் நாம் அந்தப் பெண்கள் குழந்தைகளின் வளர்ச்சியையும், பாதுகாப்பையும் ஏற்படுத்துவோம். அவர்களை ஒரு சுயபொருளாதாரத்துடன், சுயபலத்துடன் வாழ வழிவகுப்பதுடன், அதற்குரிய பூரண நம்பிக்கையையும் ஏற்படுத்துவோம்"




1995ஆம் ஆண்டு வன்னிக்கு இடம் பெயர்ந்து வந்து புதுக்குடியிருப்புப் பகுதியில் ஒரு சிறு குடிசை அமைத்து இப்பெண்கள் அனைவரையும் பராமரித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

கிளாலிப்பகுதிக் கடற்கரையில் அதிகம் பெண்கள் எம்மால் உள்வாங்கப்பட்டனர். அனைவருமாக 90 பேர் புதுக்குடியிருப்பு (வன்னி) வந்தனர். இவர்களில் பலதரப்பட்ட, அதாவது போரினால் பாதிக்கப்பட்டவர்கள் மனநோய்க்குள்ளானவர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் என யாவரும் இருந்தனர். இதனைக் கருத்தில் எடுத்து ஐந்து பிரிவாகப் பிரித்து ஐந்து இல்லங்களை உருவாக்கினோம்.

அவ் ஐந்து இல்லங்களாக நிறைமதி இல்லம், வெற்றிமனை, மேரி இல்லம், மலர்ச்சோலை, செந்தளிர் இல்லம் என்பனவாகும்.

'வெற்றிமனை' பற்றி சொல்வதேயானால் இங்குள்ள பெண்கள் மனநோயால் பாதிக்கப்










தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




பட்டவர்களே. இங்குள்ள 75 பேருமே கணவனால் கைவிடப்பட்டவர்கள். இராணுவத்தின் நேரடிப் பாதிப்புக்குள்ளானவர்கள். கணவரை (உறவுகளை) இராணுவம் சுட்டு எரிக்கும் போது அதை நேரடியாகப் பார்த்து மன நோயால் பாதிக்கப்பட்டவர்கள், சொந்த இடம், வீடு, உறவுகளை விட்டு வந்ததன் பாதிப்பு போன்ற யுத்தத்தின்போது பாதிக்கப் பட்டவர்களையே இங்கு பராமரித்து வருகின் றோம். அனைத்து மாவட்டப் பெண்களும் இங்கு உள்ளனர்.

இவர்களுக்கான வைத்திய வசதி கூட இல்லாத நிலையில் அக்கராயன் மருத்துவ மனை வைத்தியர், வைத்திய கலாநிதி விக் னேஸ்வரன் என்பவர் பெரும் உதவியாக இருந்து வந்தார். அத்துடன் அருட்தந்தை ரெஜினோல்ற் அவர்களின் வழிகாட்டலில் அன்னை இல்லத்தின் துணையாளர்களின் உதவியும் இருந்து வந்தமை குறிப்பிடத் தக்கது. இவர்களின் உளச்சிகிச்சை மூலம் குணமடைந்து தற்போது 14 பேர் எமது தொழிற்பயிற்சிக் கல்லூரியில் தங்க வைக்கப் பட்டுள்ளனர். இயல்பு நிலையை அடைந் துள்ள இவர்களுக்கு எதிர்கால நல் வாழ்க்கை, கடன் வசதி, சுயதொழில் முயற்சி போன்றவற்றைச் செய்து ஒத்துழைப்போம்.

"அடுத்து நிறைமதி இல்லம் இங்குள்ள வர்கள் யாரெனில் பிறப்பிலேயே மனவளர்ச்சி குன்றிப் பிறந்தவர்கள். அவர்கள் பெற் றோரால் கவனிக்கப்படாமல் பொருளாதார வளமின்றி கவனிப்பாரற்றதொரு நிலையில் வீதியோரங்களில் காணப்பட்டனர். பெரியவர் கள்கூட குழந்தைத்தனத்துடன் நடப்பதை அவதானிக்க முடிந்தது. போதிய பராமரிப் பின்மையும்கூட இவர்களின் இந் நிலைக்குக் காரணமாக இருக்கலாம்.

இவ்வாறு பெண்கள் சமூகத்தில் உலா விவரும்போது பெரும் சமூகச் சீர்கேடுகளுக்கு ஆளாக நேரிடும். இவ்வாறான பாதிப்புக் களை தடுக்கும் நோக்குடன் இப்படியானவர் களையும் எமது நிறுவனத்தால் உள்வாங்கி, பராமரித்து வருகிறோம்.

"19 வயதிற்கும் 42 வயதிற்கும் இடைப் பட்ட 46 பேரை தன்னுள்கொண்டு இயங்கி வருகிறது மேரி இல்லம். இவ் வில்லத்தில் உள்ளவர்களைப் பற்றி சொல்வதேயானால், யுத்தகாலத்தின்போது தமது உறவுகளை இழந் தவர்கள். தவறவிடப்பட்டு, தனித்து விடப்பட்ட வர்கள்தான்.

தற்போது சமாதான காலம் என்பதால் இவர்களில் 12 பேரை உறவினருடன் தொடர் புபடுத்தி, அவர்கள் உறவுகளுடன் வாழ வழி செய்து கொடுத்துள்ளோம். ஏனையோரில் வயது வந்த பெண்களுக்கு திருமணம் செய்து வைத் துள்ளோம்.

இவ்வில்லத்துப் பெண்களுக்கான தொழில் ஊக்குவிப்பாக கூட்டுப்பண்ணை ஒன்றை 'உதயதாரகை' என்ற பெயரில் அமைத்துக் கொடுத்துள்ளோம். இதில் வரும் வருமானத்தை அவர்களே பிரித்தெடுத்து ஒவ்வொருவரும் தமது எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு சேமித்து வருகின்றனர்.

இப்பெண்களில் சிலர் எமது தொழிற் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை மேற் கொண்டு வருகின்றனர். மேலும் சிலர் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பணி புரிந்து கொண்டு இருக்கின்றனர். இவர்களின் எதிர் காலம் கருதிய இச்செயற்பாடுகள் தற்போது முன்னேற்றகரமானதாக உள்ளது"

"அடுத்து மலர்ச்சோலை. கணவனால் கைவிடப்பட்ட, கணவனை இழந்து உறவுகள் ஏற்காமல் தள்ளி விடப்பட்ட நிலையில் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள தமது குழந்தைகளுடன் புகலிடம் தேடி வந்தவர்களே இம் 'மலர்ச் சோலை'யில் இருக்கின்றனர்.

இவர்களுக்கும் கூட தொழில் முயற்சி யாக எண்ணெய் உற்பத்தி, கோழி வளர்ப்பு, சிறு தோட்டம் ஆகியவற்றைச் செய்ய வசதிகள் செய்து கொடுத்துள்ளோம்."

"செந்தளிர் சிறுவர் இல்லத்தில் 09 மாதம் தொடக்கம் 16 வயதிற்கிடைப்பட்டவர்கள் இருக் கின்றனர். யுத்தத்தின்போது உழைப்பாளரை இழந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களே இச் சிறுவர்கள்.

வறுமையினால் கல்வியற்று, பாதுகாப்பற்ற நிலையில் இருந்த இவர்களை நாம் உள்வாங்கி இவர்களுக்கு கல்வி, பாதுகாப்பு போன்றவற்றை வழங்கிவருகின்றோம்."

நிறுவனத்தின் நோக்கம் குறிக்கோள் யாதெ னக் கேட்க நினைக்கையில், "எமது நிறுவனத் தின் நோக்கம்..." எனக் கூறத்தொடங்கி, "ஆதர வற்ற, உறவுகளற்ற நிலையில் இருக்கின்ற






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்களின் நலன்களைப் பேணுவதும் ஒவ்வொரு பெண்ணும் சுயபொருளாதாரத்துடன், சுய பலத்துடன் சமூகத்தில் தானும் ஒரு நற்பிரசையாக வாழக்கூடியவாறு அவர்களை உருவாக்குவதும், அவ்வாறானதொரு நம்பிக்கையையும் ஊட்டுவதுமே யாகும்".

தொடர்ந்து இவர் கூறுகையில், "எமது நிறுவனம், முக்கிய நான்கு பகுதிகளான நலன்காப்பகப்பகுதி, தொழிற்பகுதி, தொழிற்பயிற்சிக் கல்லூரி மற்றும் மாவட்ட வேலைத் திட்டங்கள் என இயங்கி வருகின்றது.

"இங்கு மேற்குறிப்பிட்ட கட்டமைப்புக்கள் ஒன்றுக்கொன்று தொடர்புகொண்டே இயங்கி வருகின்றன. முதலில் எமது நிறுவனத்தால் உள்வாங்கப்படும் பெண்கள், குழந்தைகள் தொழிற்பயிற்சிக் கல்லூரி, நலன்காப்பகப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு பின் அங்கிருந்து தொழிற்பகுதியில் அதாவது நிலையங்கள், கூட்டுப்பண்ணை போன்றவற்றை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்ததில் அங்கங்கு பணிபுரிந்து வருவதும் தமக்குத் தாமே சேமித்தும் வருகின்றனர்.

"இவ்வாறான பயிற்சித்திட்ட முயற்சியின்போதே இப்பெண்களில் சிலருக்கு மோட்டார் சைக்கிள் திருத்தவும் கற்பித்து, அவர்களுக்கு 'எழுகை தொழிற்கூடம்' என்றொரு நிலையமும், போட்டுக்கொடுத்துள்ளோம்.

இப்பயிற்சியின் ஆரம்பத்தில் பெண்கள் தம்மால் இவ் வேலையைச் சிறப்பாகச் செய்ய முடியுமா? எனச் சற்றுத் தயங்கினர். பின்னர் துரிதகதியில் நாமே அதிசயிக்கும் அளவுக்கு பயிற்சியை முடித்தனர். இவர்களுக்கு நாம் நிலையம் திறந்து கொடுத்து வேலை தொடங்கியபோது பல கேலி, கிண்டல்கள் அவ்விடத்து இளைஞர்களிடமிருந்தே வந்தன. பின்பு நாம் கொடுத்த நம்பிக்கையில் இவர்களின் திறமையைப் பார்த்துவிட்டு, அதே இளைஞர்கள் எமது பிள்ளைகளின் நிலையங்களில் திருத்தத்திற்கென தமது ஊர்திகளைக் கொடுத்துவிட்டு திருத்துவதை வாய்பிழந்து நின்று பார்த்தனர்.

இப்பயிற்சித்திட்டத்தை 'கெயர்' நிறுவன உதவியுடன் நடாத்தி வெற்றிகண்ட நாம் மேலும் பல பயிற்சிகளை (கட்டடம் கட்டுவது, மரவேலை) வழங்க முயற்சிகள் எடுத்து வருகின்றோம்."

சமூகத்தில் பெண்களினால் செய்ய முடியாது என கருதப்படும் வேலைகளை இப்பெண்களுக்கு செய்ய முடியும் என நம்பிக்கை அளித்து அதற்குரிய பல பயிற்சிகளை வழங்கி அவ்வேலைகளைச் சிறப்பாகச் செயற்படுத்திவரும் இந்நிறுவனத்தின் பணி பெரிதே.




சமூகத்தில் உள்ள பெண்களின் விழிப்புணர்விற்காக நீங்கள் மேற்கொள்ளும் வேலை பற்றிக் கூறுவீர்களா? என்று கேட்க,

"கிராமரீதியாக பெண்கள் அபிவிருத்திக் குழுக்களை உருவாக்கியிருக்கிறோம். இக்குழு, பெண்களின் பிரச்சினைகளை இனங்காண்பதுடன் கருத்துக்கள் மூலம் அவர்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தி, சமூகத்தில்







தன்னம்பிக்கையுடன் வாழ வழி செய்து வருகிறோம்.

இவ்வாறு, பெண்களின் அறியாமை, மூடநம்பிக்கையைக்களையும் முகமாக மூன்றுமாதத்திற்கு ஒரு தடவை விழிப்புணர்வு கருத்தரங்குகளையும், தேவை ஏற்படுமிடத்து வீடுகள் ஒவ்வொன்றுக்கும் சென்று இவ்வாறான கருத்துக்களை வழங்கி வருகின்றது இக்கிராம அபிவிருத்திக்குழு"

"இக்குழுச் செயற்பாடுகளுக்கு தற்போது பலாபலன்கள் சிறிது சிறிதாக கிடைத்து வருகின்றபோதிலும். நாளடைவில் இன்னும் சில வருடங்களில் முழுப் பலனையும் பெற்று இச்சமூகப் பெண்களினிடத்தே நல்லதொரு விழிப்புணர்வை ஏற்படுத்துவோம் என்ற நம்பிக்கையை தற்போதே உணர ஆரம்பித்துவிட்டோம்"

"இதன் இன்னொரு புதிய திட்டமாக, முயற்சியாக 'சீதன ஒழிப்பு' தொடர்பான விழிப்புணர்வு நாடகங்கள், துண்டுப் பிரசுரம் போன்ற செயற்பாடுகளில் தீவிரமாக முனைப்புப் பெற்று வருகின்றோம்"

"இவ்வாறாக எமது செயற்பாடுகளை தொடர்ந்து செய்வதற்கு வெளிநாடுகளில் இருந்தும், எமது நாட்டிலிருந்தும் தமிழ்பேசும் மக்களும், தமிழ் மகளிர் அமைப்புக்களும் நிதியுதவிகளை அவ்வப்போது வழங்கி வருகின்றபோதிலும், அந்த நிதி எமக்கு இப்பெண்களுக்கான செயற்திட்டங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களை விரிவாக்கம் செய்வதற்கு போதாமையாகவுள்ளது என்பதே உண்மை.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில், "இப்படியான சில திட்டவரைபுகளை எமக்குதவி வழங்கும் நிறுவனங்களிடம் கையளிக்குமிடத்து அவை அத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவ தற்கான நிதியுதவிகளை மட்டுப்படுத்தப்பட்டளவில் செய்து வருகின்றனர்"

தற்போது இவ்வாறாக இரண்டு திட்டங்களுக்கு நிதியுதவியை உலக தொழிலாளர் நிறுவனம்

(ILO)செய்ய முன்வந்துள்ளது. மட்டக்களப்பில், செங்கல் செய்தல், உணவு பதனிடல், விவசாயம், பன்பாய் செய்தல் போன்றவை ஒரு திட்டச் செயற்பாடாகவும், கிளிநொச்சியில் உழைப்பாளரை இழந்தவர்களுக்கான ஊக்குவிப்புத் திட்டத்திற்கெனவும், அப்பளத்




தொழிற்சாலையை விஸ்தரிப்பதெற்கெனவும் நிதியுதவி செய்திருப்பது குறிப் பிடத்தக்கது".

இப்படியாகத் தொடர்ந்து நாம் மன்னார் மாவட்டத்திலும், வவுனியா மாவட்டத்திலும் உழைப்பாளரை இழந்த குடும்பங்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்பும், கடன் உதவியும் வழங்கி வருகின்றோம்"

"இதன் ஒரு சில எடுத்துக்காட்டுக்களாக, மட்டக்களப்பில் நான்கு பெண் பிள்ளைகளுக்கு கொக்கட்டிச்சோலைப் பகுதியில் 'அரைக்கும் ஆலை' ஒன்று போட்டுக்கொடுத்துள்ளோம். மற்றும் சிறு பலசரக்கு நிலையம் ஒன்றும் மகிழடித்தீவில் உணவு பதனிடல் பயிற்சியைக் கொடுத்து சிற்றுண்டிகள் செய்து விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்து கொடுத்துள்ளோம்".

" ஊக்குவிப்பு, கடனுதவி எனச் செய்துவரும் தாங்கள் பொதுவாக இந்நாட்டில் வாழும் பெண்களுக்கு கூற விரும்புவது" என்ற வினாவுக்கு உடனேயே மின்னல் தெறித்தாற்போல் பதிலும்

"வடக்குக் கிழக்குப் பகுதியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டது அதிகம் ஆண்களைவிட பெண்களும் குழந்தைகளும்தான்.

இவர்களுக்குப் பெருமளவில் நாம் உதவிகளைச் செய்யவேண்டியிருக்கிறது.



இதற்கான நிதியினை எமது நாட்டிலோ அல்லது வெளிநாடுகளிலோ வாழும் தமிழ் பேசும் மக்களும் நலன் விரும்பிகளும் தந்துதவி செய்வார்களாக இருந்தால் நாம் அந்தப் பெண்கள் குழந்தைகளின் வளர்ச்சியையும், பாதுகாப்பையும் ஏற்படுத்துவோம். அவர்களை ஒரு சுயபொருளாதாரத்துடன், சுயபலத்துடன் வாழ வழிவகுப்பதுடன், அதற்குரிய பூரண நம்பிக்கையையும் ஏற்படுத்துவோம்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உங்களுக்காக ஆதரவாகச் செயற்பட்டு வரும் சர்வதேச பெண்கள் அமைப்புகளுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்? இது எனது அடுத்த கேள்வி.

"மிகவும் கஸ்ரப்பட்டு எமக்கு உதவிகள் செய்து வருகிறார்கள். இருந்தும் கூடுதலான மேலும் சிறு உதவிகளைச் செய்வார்களே யானால், வடக்கு கிழக்கில் உள்ள பெண்கள், குழந்தைகளைக் கவனித்து, எமக்கு கிடைக்கும் உதவிகளைச் சரியான முறையில் மக்களுக்குச் சென்றடைய முழுமுயற்சியும் எடுத்து எமது செயற்பாட்டினை முழுமைப்படுத்துவோம் என்று நம்பிக்கையாகக் கூற விரும்புகிறோம்"

உங்கள் நிறுவனத்தின் மாவட்ட பெண்கள் அபிவிருத்திக் குழுக்களின் செயற்பாடு பற்றி சற்று விளக்கிக் கூறுவீர்களா? என்று எனது ஆதங்கத்தை வெளிப்படுத்த, அவரோ,

இவ் உபகுழுவின் செயற்பாடுகளாக,

1. எழுத்தறிவற்ற பெண்களுக்கு எழுத்தறிவு ஊட்டுவது.

2. திருமணப் பதிவு இல்லாதவர்களுக்கு திருமணப் பதிவு மேற்கொள்ளல்.

3. இடைவிலகிய மாணவர்களுக்கு மாலை நேரக் கல்வியை ஊட்டுவது.

4. சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவது.

5. சுகாதார பழக்கவழக்கங்கள் சொல்லிக் கொடுப்பது.

6. வியாபாரத்தில் ஈடுபடும். பாடசாலை செல்ல வசதியில்லாத பிச்சையெடுக்கும் சிறுவர்களை பெற்றோருடன் பேசி பாடசாலைக்கு அனுப்புவது.

போன்ற செயற்பாடுகளைச் செய்து வருகின்றது இப்பெண்கள் அபிவிருத்திக்குழு.

பராமரிப்பற்ற, போசாக்கற்ற சிறுவர்களை எவ்வாறு இனங்காண்கிறீர்கள்? கேட்டேவிட்டேன் இதையும்.

"இவ்வாறான சிறுவர்களை எமது கிராம அபிவிருத்திக் குழுவே இனங்காண்கின்றது. இவர்களை உள்வாங்கும்போது அவர்களின் உடல்நிலை கவனிக்கப்பட்டு உடனேயே போசாக்கான உணவுகள் வழங்கப்படுகின்றன"

குறிப்பிடும்படியாக ஒரு சிறுவர் இல்லத்திலேயே போசாக்கற்று, உடல்நிலை, உடை, உணவு, கவனிக்கப்படாமல் சிறுவர்கள் இருப்பார்களேயானால் அவர்களை என்ன செய்வீர்கள்?

"எமது இல்லங்களில் அவ்வாறு இல்லை. வெளி மாவட்டங்களில் சில தனியார் இல்லங்களில் இப்படியான குறைபாடுகள் காணவே செய்கின்றன.

அங்குள்ள சிறுவர்களுக்கு போதிய உணவின்றி மாற்றுடுப்பின்றி முக்கியமாக சுகாதாரப் பழக்கவழக்கம் சிறிதேனும் இல்லாமல் இருக்கிறார்கள். சமயலறைக்குள் காலடி வைத்தபோது, துப்புரவற்ற மலசலகூடத்தினுள் செல்வது போன்ற உணர்வு இருந்தது மிகவும் கொடுமை.

மொத்தத்தில் இப்படியான சிறுவர்கள், மற்றும் ஆதரவற்ற குழந்தைகள், வறிய வேலையற்றிருக்கும் பெண்கள் போன்றோருக்கு உங்கள் பெண்கள் புனர்வாழ்வு நிறுவனம் பற்றி....?

"நாம் உறுதியாகச் சொல்வது என்னவென்றால் இப்படியானவர்கள் தமது பாதுகாப்புக்கு எங்கே போவது என்று தெரியாமல் இருக்கும்போது எமது மாவட்டச் செயலகங்களில் தொடர்பு கொள்வதன் மூலம் அவர்களுக்குரிய பாதுகாப்பை நாம் வழங்குவோம்.

வறிய, வேலையற்ற பெண்களுக்கு



தொழில்சார் ஊக்குவிப்பையும் வழங்குவோம். தாங்கள் ஒவ்வொருவரும் இந்நாட்டில் வாழும் உரிமையுள்ள குடிமக்கள்தான் என்ற நம்பிக்கையையும் ஊட்டத் தவறமாட்டோம்.

குறுகியதொகை உறுப்பினரைக் கொண்டு பரந்து விரிந்து பணியாற்றிவரும் இந் நிறுவனத்தை மெச்சியவாறே விடைபெற்றேன்.



இந் நிறுவனத்தினால் உள்வாங்கப்பட்ட பெண்களும், குழந்தைகளும். அவர்களினால் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களும், வளர்ச்சியும் அதன் மூலம் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக வித்திட்ட 'தலைவரை' மனதினுள் வாழ்த்தியவாறே எனது துவிச்சக்கர வண்டியை உழக்கினேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உடைவு

*விம்மல் பெரிதாயிற்று தொண்டை அடைத்தது. அழுவதற்கு குரல் எழவில்லை. மூக்கினுள் நீர் கோர்த்துக்கொண்டது. அழுதபடி படுக்கையறைக்கு ஓடினான். அழுகை அழுகையாய் வெடித்தது. மூச்சுவிட முடியாமல் இருந்தது. கண்கள் சிவந்து போயிற்று. தலையணைக்குள் புதைந்துகொண்டு அழுதான். யாரோ தலையைக் கோதுவது போல் இருந்தது. முகத்தைத் திரும்பிப் பார்த்தான். பக்கத்தில் அம்மா கருணையோடு பார்த்தபடி இருந்தாள்*



தேஜோமஜன்

பாபுவிற்கு ஆசை ஆசையாய் இருந்தது.

ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறத்தில் ஒரே மாதிரியாய்ச் செய்யப்பட்ட விசில்கள் முனையில் சக்கரம் பொருத்தப்பட்டிருந்தது. விசிலை ஊதும் போதெல்லாம் வீர்ல்... என்ற சத்தத்துடன் துவாரத்தால் வெளிப்படும் காற்று சக்கரத்தை சுழற்றிவிடும் சக்கரம் சுழலும் வேகத்தில் சிறிய காற்று முகத்தில் படும் அவனது வயதொத்த பெரும்பாலான பையன்களின் கைகளிலும் வீர்ல்.. வீர்ல்... என விசில் கத்திக்கொண்டிருந்தது. நீண்ட நேரமாய் ஏக்கத்துடன் ஒவ்வொரு பையன்களின் விசில்களையும் அதன் ஒலிகளையும் ரசித்த வண்ணம் இருந்தான். தானும் அவ்வாறான விசில் ஒன்று வாங்க வேண்டும் எனத் தீர்மானித்துக்கொண்டான். வீதியோரமாய் பரப்பப்பட்டிருந்த கடையில் அழகழகாய் பல பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஓர் இடத்தில் விசில்கள் குவிக்கப்பட்டிருந்தன.

"அண்ணே அந்த விசில் என்ன விலை"

"ஐஞ்சு ரூபா"

தன் உள்ளங்கையிலிருந்த நாணயக் குற்றிகள் இரண்டு இரண்டு ரூபாய்களை மீண்டும் எண்ணிக்கொண்டான். சீ... இன்னும் ஒரு ரூபா காணாது ஒரு ரூபா இருந்தா...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனதினுள் எண்ணிக்கொண்டு மீண்டும் விசில்களை நோட்டம் விட்டான். சிவப்பு, மஞ்சள், பச்சை, நீலம் பல வண்ணங்களில் விசில்கள் குவிக்கப்பட்டிருந்தன.

ஒரு விசில் மட்டும் பாபுவின் கண்ணில் உறுத்தியது. ஊதா நிறமுடைய அந்த விசில் அழகாய் இருந்தது.

"அண்ணே அத எடுங்கோ"

சுட்டிக்காட்டிய இடத்தில் கிடந்த விசிலை எடுத்துக் கொடுத்தான் கடைக்காரன்.

மிக அழகாய் செய்யப்பட்டிருந்த விசில்.

ஊதிப்பாக்கலாமா வேண்டாமா. கடைக்காரர் ஏசுவாரா யோசித்தான்.

நான் வாங்கத்தானே போறன் ஒருக்கா ஊதிப்பாப்பம்

ஆனா ஒரு ரூபா காணாமல் இருக்கே!

பாபுவிற்கு மனது சுருங்கிப்போனது. மிக ஆவலுடன் பார்த்து ரசித்தவண்ணம் நின்றான். என்ன தம்பி தரட்டே?

"காசு காணாது நாலு ரூபாதான் கிடக்கு..."

"உத வச்சிட்டுபோ ஒரு விசில் ஐஞ்சு ரூபா"

கடைக்காரன் பாபுவின் கையிலிருந்த விசிலை வாங்கி வைத்துவிட்டு வியாபாரத்தில் மும்மரமானான். எல்லா விசில்களையும் விட அந்த ஊதாநிற விசில் மிக அழகாய் இருந்தது.

உண்மையில் அதை ஊதினாக்கூட நல்ல சத்தம் வரும்.

பாபுவின் மனம் விசிலைச் சுற்றியே வட்டமடித்தது.

"சாமான் வாங்கிறாக்கள் வாங்குங்கோ, மற்றவ அங்காலப் பக்கம் போங்கோ"

கடைக்காரன் சத்தமாய் விரட்டினான்.

பாபு அப்படியே பின்னால் போய் சனக்கூட்டங்களுக்கிடையே நின்று, அந்த விசிலையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டு நின்றான்.

கடையைச் சுற்றி கூட்டம் அதிகமாயிற்று. "லொத்தர்.... லொத்தர்......ரெண்டு ரூபா"

கடைக்காரன் பெரிதாய்க் கூவினான்.

"கிளிப்பின், ஒட்டுப்பொட்டு, பம்பரம், காப்பு, கண் மை, ஊசி, விசில் எல்லாப்பொருளும் ரெண்டு ரூபா".

பாபுவிற்கு ஆச்சரியமாய் இருந்தது.

"அப்ப அண்ணெ அந்த ஊதாக் கலர் விசிலும் ரெண்டு ரூபாவே"

"ஓம் விழுகிற சாமான் தருவம்"

பாபு சந்தோஷமானான். நாலு ரூபா இருக்கு ரெண்டு தரம் எடுக்கலாம்.

ஆனா அதில விசில் விழவேணுமே

ஊசியோ அல்லது கிளிப்பினோ விழுந்திட்டா. சின்னமண்டைக்குள் சிந்தனை ஓடியது. லொத்தர் போடுவமோ வேண்டாமோ மனம் போராடியது.

போட்டு விசில் விழுந்தா ரெண்டு விசில்

ஒரு விசில் ஐஞ்சு ரூபாப்படி இரண்டு விசில் பத்துரூபா

இரு கைகளையும் விரித்து கணக்கிட்டான் ஆன என்னட்ட நாலு ரூபா இருக்கு நாலு விரலை மடக்கினான்.

மற்றவிரல்களை எண்ணினான் ஆறு வந்தது.

அப்ப ஆறு ரூபா லாபம்

ஆனா.. விசில் விழ வேணுமே.

ஒட்டுப்பொட்டு விழுந்திட்டா என்ன செய்யிறது. அம்மா ஒட்டுப்பொட்டும் வைக்கிறேல்ல குங்குமந்தான். அப்ப என்ன செய்யிறது. கன நேரமா யோசித்தான்.

சீ.... லொத்தர் வேண்டாம். காசு கொடுத்தே வாங்குவம்.

ஆனா ஒரு ரூபா காணாதே.

அம்மாட்ட கேப்பம்.

பாபு வீட்டிற்கு மூச்சைப் பிடித்துக்கொண்டு தன் குட்டிப்பாதங்களால் ஓடினான்.

"அம்மா அம்மா...."

"என்ன..." என்ன கத்துறே?" அப்பா அதட்டினார்.

ஒன்றுமில்லையாய் தலையாட்டிவிட்டு அடுப்படிப் பக்கம் ஓடினான்.

"அம்மா அம்மா...."

"என்னடா..." தாய் மென்மையாய்க் கேட்டாள்.

"ஒண்டு கேப்பன் தருவியே...." என்ன சொல்லு

"கட்டாயம் தரோணும்...." "சரி சொல்லு"

கோயில் வாசல்ல நல்ல நல்ல விசில் விக்குதம்மா எனக்கு ஒண்டு வாங்கித்தாவனம்மா மிக மிக மென்மையாய் கெஞ்சினான்.

"சும்மா போ அது கன காசு வரும்"

"இல்லையம்மா இல்லையம்மா ஐஞ்சு ரூபாவாம்"

"நான் நாலு ரூபா வச்சிருக்கிறன்...", "சரி போய் அப்பாட்டைக் கேள்"

அப்பாவிடம் தன் பேச்சு எடுபடாதென்று தெரிந்து தாயின் சேலையைப் பிடித்தபடி கெஞ்சினான். அவன் கெஞ்சலுக்கு இரங்கி தேயிலைச் சொப்பிற்குள் கிடந்த ஒரு ரூபாயை பாபுவிடம் தாய் கொடுத்தாள்.

அவ்வளவு தான் பாபுவிற்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. கண்கள் வெளியே வந்துவிடும்போல் இருந்தது.

உடனே போய் வாங்கவேண்டியது தான்

ஆனா....ஆனா வேறயாரும் வாங்கிட்டா அந்த ஊதா நிற விசிலை யாரும் வாங்கிட்டா மிக வேகமாக ஓடினான். ஆ... அவனுக்காகவே அந்த விசில் காத்துக்கிடந்தது.

வேகமாய் வந்தது மூச்சிரைத்தது. கழுத்து முழுதும் வேர்வை வடிந்திருந்தது. சனக்கூட்டத்திற்குள் ஊர்ந்துகொண்டு "அண்ணே... அண்ணே... அந்த விசிலைத் தாங்கோ...."

கடைக்காரன் காசை வாங்கிக்கொண்டு கொடுத்தான். இல்ல அண்ணே சிவப்பு நிறம் இல்லை. அந்தநிறம்.

மீண்டும் சுட்டிக்காட்டி ஊதாநிற விசிலை வாங்கிக்கொண்டான். மனம் பூரித்துப்போய் இருந்தது.

கையில் இருந்த விசிலை அழகாய் ரசித்தான் முகம் முழுதும் சிரித்தது.

விரல்களால் காற்றாடியைத் தட்டிவிட்டான்.

சர் என் சுழன்றது. சட்டை முனையில் வடிவாய்த் துடைத்துக்கொண்டு ஊதினான்.

வீர்ல்... வீர்ல்.... மிக இனிமையாய் இருந்தது.

முன் காற்றாடி வேகமாய் சுழன்றது.

மிகப் பெரிய சத்தம் எல்லா பையன்களின் விசிலை விட மிகப் பெரிய சத்தமாகக் கத்தியது. பாபுவிற்கு அளவில்லா மகிழ்ச்சி.

வீர்...ல்... வீ....ர்ல்

தெரு முழுக்க ஊதிக்கொண்டே ஓடி வந்தான். வீட்டு வாசல் வந்ததும் காற்சட்டை பொக்கெற்றுக்குள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒழித்துக்கொண்டான்.

அம்மாவுக்கு ஊதிக்காட்டோணும்.

"அம்மா... அம்மா....." வீர்ல்..... வீர்ல்....

"சனியனே காதுக்க வந்து ஊதுறெ"

அம்மாவுடன் கதைத்துக்கொண்டிருந்த அப்பா வாயிலிருந்த விசிலைப்புடுங்கி சுவரோடு அடித்தார். 'பட்' விசிலின் விசிறி உடைந்து ஒரு பக்கம் விழுந்தது. விசிலின் மறு பகுதி வெடித்திருந்தது.

பாபுவிற்கு மனமே வெடித்தது.

கண்ணுக்குள் நீர் முட்டி விம்மலாய் வெடித்தது.

"போ போய்ப் படி" அப்பா மீண்டும் அதட்டினார்.

கண் உடைந்து கண்ணீர் வழிந்தது.

விம்மல் பெரிதாயிற்று தொண்டை அடைத்தது. அழுவதற்கு குரல் எழவில்லை. மூக்கினுள் நீர் கோர்த்துக்கொண்டது. அழுதபடி படுக்கையறைக்கு ஓடினான். அழுகை அழுகையாய் வெடித்தது. மூச்சுவிட முடியாமல் இருந்தது. கண்கள் சிவந்து போயிற்று. தலையணைக்குள் புதைந்துகொண்டு அழுதான். யாரோ தலையைக் கோதுவது போல் இருந்தது. முகத்தைத் திரும்பிப் பார்த்தான். பக்கத்தில் அம்மா கருணையோடு பார்த்தபடி இருந்தாள்.

"நீ ஏன் கதைக்கேக்க வந்து ஊதினீ"

"எனக்குத் தெரியாது அப்பா இருக்கிறார் என்று நல்ல விசில் ஆசை ஆசையா உன்னட்ட காட்டவேணுமெண்டுதான் ஓடி வந்தனான். ஆனா அப்பா அதை உடைச்சுப்போட்டார்"

தாயின் மடியில் முகம் புதைத்து அழுதான்.

"சரி சரி அழாத நான் காசு தாறன் வேற ஒரு விசில் வாங்கு"

தாய் ஆசுவாசப்படுத்தினாள்.

பாபுவிற்கு முகம் மலர்ந்தது ஒரு பெரிய புன்னகையுடன்.

தாயின் காசை வாங்கிக்கொண்டு கடைக்கு ஓடினான்.

சரியாய் சனக்கூட்டம் சேர்ந்திருந்தது. ஒவ்வொரு பெரிய மனிதர்களையும் புகுந்து முன்னால் போய் நின்றான்.

"அண்ணெ விசில் என்ன விலை?"

மறுபடியும் கேட்டான்.

"ஐந்து ரூபா"

பச்சை, சிகப்பு, நீலம், மஞ்சள் விசில்கள் நிறைந்திருந்தன.

ஒரு பையனுக்கு லொத்தரில் சிவப்பு நிற விசில் விழுந்திருந்தது.

அவன் அதை ஊதியபடியே ஓடினான்.

நானும் லொத்தர் போடுவமோ

கிளிப்பினோ, ஒட்டுப்பொட்டோ வந்திட்டா

பேசாமல் காசு கொடுத்து வாங்குவம்.

பல நிறங்களில் விசில்கள்

சிவப்பு, மஞ்சள், பச்சை, நீலம் எல்லாம் அழகாய் இருந்தது. ஆனால் ஊதா நிற விசில் இல்லை. அதுதான் மிக அழகானது. தேடித்தேடிப் பார்த்தான்.

ம்... ஒன்று கூட இல்லை கண் கலங்கிற்று.

கலங்கிய கண்ணுக்குள் அந்த ஊதா நிற விசில் வந்து போனது காதுக்குள் அதன் வீர்ல் என்ற ஒலி ஒலித்துக்கொண்டே இருந்தது. வீட்டை நோக்கி ஓடினான்.

இப்பொழுது இவனுக்காய் அம்மா காத்திருந்தாள்.

"என்ன வாங்கிட்டியே?"

மௌனமானான்.

"என்ன வாங்கேல்லையே?"

இல்லை என்பதாய் தலையாட்டினான்.

"ஏன்?"

"இல்லை"

"என்ன இல்லை?"

"ஊதா நிற விசில்"

"ஏதோ ஒரு விசில் வாங்கிறதுதானே எல்லாம் ஒரு விசில்தான்"

"போய் வாங்கிட்டு வா"

மௌனமாய் நின்றான்.

"விசில் வேண்டாமே!"

"வேணும்"

"அப்ப வாங்கிட்டுவா"

"ஊதாக்கலர்தான் வேணும்"

"அதுதானே உடைஞ்சு போச்சு நாளைக்கு உனக்கு அதுமாரி வாங்கித்தாறன்.'

"வேண்டாம்"

காசைத் தாயிடம் நீட்டினான்.

"ஏன்?"

"இல்ல, அத மாதிரி விசில் இல்ல"

"ஏனில்லை"

"அதுதான் உடைஞ்சு போச்சு"

உடைந்த விசில்துண்டுகளை பொறுக்கி கைக்குள் பொத்திக்கொண்டு கட்டிலில் உறங்கிப்போனான், பாபு.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வீதிபற்றியதான குறிப்புக்கள்



*எங்கள் தெருக்களை*
*கிண்டிச் சென்றன பீரங்கிவண்டிகள்...*

*சல்லிகள் சறுக்கி*
*சரிந்து விழுந்தாள் பள்ளி மாணவி*
*கிரவல் அடித்துக் கிழம்பும் புழுதியில்*
*இருமித்தள்ளினான் கடைக்காரக் கிழவன்*
*ஆஸ்பத்திரிக்கு அழுது நடந்தாள்*
*கர்ப்பிணிப் பெண்*
*தெருவில் செல்ல பயந்தொடிந்தாள்*
*பதினாறு வயதுக்காரி*

*இப்போது*
*தெருவைத் திருத்த*
*தார் வண்டிலை*
*தள்ளிக் கொண்டு வருகிறார்கள்.*
*மீண்டும் பீரங்கிகள் ஓடுவதற்கா....?*

கருணைரவி

# பெருக்கெடுக்கும் வலிகள்

வீட்டுச் சுவர்களில் மோதி
விழுந்தெழும்பிப் போகின்றது காற்று...
முற்றத்தில் முறிந்தழிந்த
மணற்கோடுகளில்
உக்கியலைகிறது ஒரு பொட்டுத்துணி.
வாரியெறிந்த குப்பைமேடுகளில்
பூத்துச்சிரிக்கின்றன
நொருங்கிவிழுந்த வளையல் துண்டுகள்.
வீட்டுக் கதவொன்றில்
பிசிறியடித்த
ரத்தப்பொருக்குகளில்
வலைகள் பின்னிய சிலந்திக் கூடுகளுக்கு
வாலறுந்த நாயொன்று சலமடித்துச் செல்கின்றது
விட்டுச் சென்ற வீட்டுக்கு வந்ததும்
வீங்கிப் பெருக்கிறது வேறொரு நினைவு.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அழிவுநாள்



## யங்ஷில் காங்

'யங்ஷில் காங்' இந்த நூற்றாண்டின் தொடக்க காலத்தில் கொரியாவில் ஒரு கிராமத்தில் பிறந்தார். சோலில் கல்விகற்ற இவர் பின் டோக்கியோவிலும் பயின்றவர். பதினெட்டு வயதானபோது கனடாவுக்கு வந்து பொஸ்டன்; நியூயோர்க் சர்வ கலாசாலைகளில் பயின்றவர்.

'புற்களிலான கூரைகள்'. 'கிழக்கு மேற்கிற்குச் செல்கிறது' என்பன இவர் எழுதிய நூல்கள். 'அழிவுநாள்' என்ற இந்தக் கதை 'யங்ஷில் காங்' கொரிய மொழியில் எழுதியது.

ஆங்கிலம் வழி தமிழில்:

**சு.மகேந்திரன்**

ஏறக்குறைய எனக்கு அப்போது பத்துவயது இருக்கும். அவ்வருடத்தின் பின் இலையுதிர்காலத்தின் ஒருநாளில், சுகவீனமுற்றுப் பாடசாலையிலிருந்து வீடு திரும்பினேன். அதற்குப்பின் அச்சுகவீனத்தையே சாக்காக வைத்து பாடசாலைக்குப் போகமறுத்தபடி இருந்தேன். பாட்டிக்கு எனது வயிற்றுவலி துக்கத்தை உண்டுபண்ணியது. அது ஒரு துஷ்டதேவதையின் வேலைதான் என அவள் நினைத்தாள். சாதாரணமாகப் பார்த்தால், அவள் ஒரு 'கொன்பூசியன்' போலவே தோன்றும். தனது பிள்ளைகளை அந்தத் துறவி கூறிய நெறிமுறைகளின்படியே வளர்த்திருந்தாள். ஆனால் அவளது சுபாவத்தைப் பார்த்தால், பௌத்த மதத்தைப் பின்பற்றும் ஒருத்தி போலவும் தோன்றும். தியானத்திலீடுபடுவாள். புத்தரைப்பற்றியும் அவரைப்பற்றிய கர்ணபரம்பரைக் கதைகள் பற்றியும் கூறியபடி இருப்பாள். ஆண்டவனே உலகம் முழுவதையும் ஆள்பவன் என்ற நம்பிக்கையை உடையவள். எல்லாக் கொரியர்களையும் போலவே, ஆண்டவன் ஒருவனே என்ற கொள்கையை உடையவள்தான் அவளும். ஆனால் அவளது வாழ்விலே ஏதாவது இட்டு இடைஞ்சல்கள் வந்தாலோ, அல்லது யாருக்காவது வருத்தம் வந்துவிட்டாலோ அப்போதெல்லாம் அனுஷ்டானங்களில் ஈடுபடத்தொடங்கிவிடுவாள்.

அவள் நாடும் அந்தச் சோதிடம் சொல்பவள், அழுக்கடைந்த மண்நிற உடைகளை அணியும், முதுகுவளைந்த ஒரு சூனியக்காரக் கிழவி. அவள் நடக்கும்போது ஒரு வளைந்த பிரம்பொன்றைப் பிடித்தபடி நடப்பாள். ஒருபெண் தனது இளமை வாழ்வில் உண்மையுடன் நடந்து கள்ளம் கபடமற்ற காரியங்களைச் செய்திருப்பாளானால், அவற்றின் பலா பலன்கள் அவளது முகத்தில் பதிந்து அப்பெண் மிகுந்த முதுமை அடையும்போது சொல்லொணா அழகுடன் மிளிர்வாள் என, எப்போதுமே நான் எண்ணி வந்திருக்கிறேன். மாறாக அருவருப்பைத் தரும் காரியங்களையும் ஜாலவித்தைகளையும் நடத்திவந்திருப்பாளாயின், வெட்கத்தை ஏற்படுத்தும் வகையில் உழவுக்காலைவிடக் கூடிய ஆளமுள்ள வடுக்கள் அவளது முகத்தில் உருவாகி அவளது கடந்த காலத்தைக் கூறுவதுபோல் அமைந்துவிடும். அந்தச் சூனியக்காரியைக் கண்டபின்பே 'சோங்-டுங்-சாய்' யிலிருந்த எல்லாப் பெண்களுமே (எனது தடித்த மாமி உட்பட ) அழகானவர்கள் என்ற ஒரு எண்ணம் ஏற்பட்டது.

அந்தச் சூனியக்காரி, வருத்தத்தையும் அழிவையும் கெட்ட காலத்தையும் தரும் தேவதைகளுக்கு தான் மிகவும் வேண்டப்பட்டவள் என பாவனை பண்ணிக்கொண்டு திரிந்தாள். தனது சேவைகளுக்கான வெகுமதிகளைக் கொடுக்குமிடத்து. உரியவர்களுக்கு அந்தத் தேவதைகளை இயல்புடையதாகச் செய்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தரத்தன்னால் முடியுமென்று கூறி வந்தாள்.

எங்கள் வீட்டுக்கு இரண்டு காரணங்களுக்காக அடிக்கடி வருவாள். பாட்டி பிரமாணங்களின்படி நடப்பவள்' என்பதால் அவளால் தான் அங்கீகரிக்கப்பட்டால், பின் கிராமத்துப் பெண்களெல்லாம் தன்னை நாடிவருவார்கள் என்பது ஒன்று, பாட்டி உணர்ச்சி வசப்படுவாள் என்பதால் அவளுக்கு நெருங்கிய யாருக்காவது ஆபத்து நேர்ந்தால் தன்னிலை மறந்துவிடுவாள் என்பது மற்றையது. இந்தத் தடவை, அந்தச் சூனியக்காரி நான் சுகவீனமுற்றிருந்தபோது அணிந்திருந்த சப்பாத்துக்காலுறைகள், கோட்டுகள், காற்சட்டைகள் எல்லாவற்றையும் உடனே கொடுத்துவிடவேண்டும் என்றாள். அதன் பின் அவற்றை தனது மகனுக்காக வீட்டுக்கு எடுத்துச் சென்றாள்.

அந்த சூனியக்காரி எப்போதும் விவேகம் நிரம்பியவளாகவே செயற்பட்டாள். என்னுடைய பாட்டி தனிமையிலிருக்கும்போது மட்டுமே அவள் பாட்டியுடன் கதைப்பாள். இவ்விஷயத்தில் கவனமாகச் செயற்படுவாள். எனது பாட்டியை மட்டுமே அவளால் மாற்ற முடியும். இதுகூட யாரும் இல்லாதபோதே சாத்தியப்படக் கூடியது. ஆவிபற்றிய விஷயங்களை எங்கள் வீட்டு ஆண்கள் யாருமே நம்புவதில்லை. ஆனால் மேற்குலகைச் சேர்ந்த ஒரு கனவான் 'அடிப்படைக் கோட்பாடுகள்' பற்றி தனது தாயாருடன் முரண்படுவதுபோல், எங்கள் வீட்டு ஆண்கள் பாட்டியுடன் இவை பற்றி முரண்படுவதில்லை. கிராமத்துத் தேவதைகளுக்கு தோத்திரம் செய்ய பாட்டி விரும்பும் போதெல்லாம் கவிஞரான எனது பித்துக்குளி மாமா சில நேர்த்தியான கவிதை வரிகளை எந்தவித ஆர்வமுமின்றி அவளுக்கு எழுதிக்கொடுப்பார். அவரால் செய்யக் கூடியதெல்லாம், தான் இவற்றை இயற்றும் போது மனதிற்குள் இடையிடையே 'ஓசக்' எனக் கூறிக்கொள்வது ஒன்றுதான்.

பாட்டி முழுமையாக மூட நம்பிக்கைக்கு உட்பட்டவள் எனவும் கூறிவிடமுடியாது. யாருக்குமே வருத்தம் இல்லாத போதோ அல்லது முக்கிய தேவைகள் ஏதுமே இல்லாதபோதோ எந்தவித அபத்தங்களும் இல்லாதவள் போலவே செயற்படுவாள்.

ஆயினும் அவள் எப்போதும் சோதிடம் சொல்லும் சூனியக்காரியின் பேச்சைக் கேட்பவள் என்பது ஏதோவகையில் உண்மையே. சோதிடம் சொல்பவள் எனது உடைகளை எரிக்கவேண்டும் என்று சொன்னபோது பாட்டி அதற்காக வாதிட்டாள்.

இப்படிச் செய்தால் அது 'சுங்-பா' இந்த வயிற்றுவலியை மேலும் பெரிது படுத்தாது சாத்தியமான முறையில் வருத்தம் மாறும். அப்படி எல்லாம் இருக்கும்போது இதைச் செய்து நாம் ஏன் ஆறுதலடையக் கூடாது. அவனுக்கு வருத்தம் கூடி அதை நீக்குவதற்கு என்னால் ஆன எல்லா முயற்சிகளையும் நான் செய்யாமல் விட்டால் அதை நினைத்து எவ்வளவு தூரம் வருத்த உணர்விற்குள்ளாவேன் தெரியுமா?

நான் 'சூ-மூலின்' பாடசாலைக்கு செல்வதற்கான உத்தேசமெதுவும் இல்லாத நிலையிலிருந்ததால், எனது வயிற்றுவலி என்னைவிட்டு விடைபெறவில்லை. அதனால் மீண்டும் சூனியக்காரக் கிழவி எங்கள் வீட்டுப் பக்கமாக வரநேர்ந்தது. மூங்கிலிலான கேற்றின் பக்கமாக வந்தவள், நேரே குசினிக்குள் வந்தாள். எனது துணிமணிகளை அவள் எடுத்துச் சென்றுவிட்டதால் அவள்மேல் கோபமுற்றிருந்தேன். எனக்கு எந்தவித நோயுமில்லை என்பதைக் காட்டுவதற்காக, குசினிக்குள் ஓடிவந்தேன். எனது நோயைச் சாட்டி என்னுடைய அழகிய நீண்ட ரிபனைத் தனக்குத் தரவேண்டும் என்றும், அதனை துஷ்டதேவதை ஒன்று கேட்கிறது எனவும் கூறிக்கொண்டிருந்தாள் சூனியக்காரி.

"வெளியே போ" என நான் கத்தினேன். "பேய்க் குணம் கொண்ட கெட்ட பெண்ணே வெளியே போ" என மீண்டும் கத்தினேன். அவள் உண்மையிலேயே பயந்துவிட்டாள். எந்தவித வார்த்தைகளும் பேசாமல் அங்கிருந்து அகன்றாள். ஆனால் ஒருநாள் நான் மீன்பிடிக்கச் சென்றிருந்தபோது, மீண்டும் வந்திருக்கிறாள். நிச்சயமாக நான் எங்கள் குடும்பத்துக்கு அழிவைக்கொண்டு வரப்போகிறேன் எனவும், அதனைத் தவிர்க்கவேண்டுமாயின் என்னை புத்தமதப் போதனைகளைக் கற்க அனுப்பவேண்டும் என்றும்கூறி இருக்கிறாள், இது பாட்டிக்கும் ஒரு நல்ல யோசனையாகத்தான் தோன்றியிருக்கிறது. புத்தமதப்போதனைகளில் எனது தகப்பனார் எந்தவிதமான ஈடுபாடுகளும் கொண்டவராக இல்லாவிட்டாலும்கூட, பாட்டியின் யோசனையை அவர் நிராகரிக்கவில்லை. ஐரோப்பிய கலாச்சாரத்தோடு ஒப்பிடும்போது பௌத்தம் மதிக்கப்பட்டுவந்தது. அத்துடன் பழமையானதும்கூட. வெளிப்பூச்சுக்கு அப்பாவே வீட்டின் தலைவர்போலத் தென்பட்டாலும், நடைமுறையின்படி பாட்டியே வீட்டை நடத்தி வந்தாள்.

நாம் எமது புனிதப் பயணத்திற்கான ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்த அந்த வாரம், கோடைக் காலத்தைப்போல் உஷ்ணமும் காற்றோட்டமற்றதாகவும் இருந்தது. எவருக்கும் வேலை செய்யவேண்டும் என்ற மனநிலை இருக்கவில்லை. காலக்கிரகமாக எல்லோரும் கூட்டங்களாக இருந்துகொண்டு அரசியல் விஷயங்கள் பற்றிக் கதைத்துக்கொண்டிருந்தார்கள். இந்தக் கலந்துரையாடல்கள் எனது தகப்பனாரைக் கோபமடைய வைத்தன. அவர் தனிமையாக தனது வேலைகளைச் செய்தபடி இருந்தார். பித்துக்குளிக் கவிஞரான எனது மாமா, பரந்த இலைகளையுடைய 'ஓட்டோங்' மரத்தடியில் இருந்துகொண்டு வைன் அருந்திக்கொண்டிருந்தார். அவரைப் பார்க்கத் துன்பமுற்றவர்போலிருந்தது. ஆயினும் "இல்லை, ஒருபோதும் இல்லை. யப்பான் ஒருபோதும் கொரியாவை எடுத்துக்கொள்ளாது. அது இப்போது கடைப்பிடிக்கும் எல்லாவிதமான புதியபோக்குகளுடன் பாரம்பரிய கலாச்சாரத்துக்கு மதிப்புக்கொடுக்கிறது. தவிரவும் அது அப்படிச் செய்யாது என உறுதியும் கூறிஉள்ளது"....

எங்கள் பயணத்துக்குமுன் நானும் பாட்டியும் ஞானஸ்தானம் எடுப்பது போன்று நீராடினோம். பிரகாசிக்கும் சிவப்பு நிறத்தாலான இந்த வட்டமான மரத்தொட்டி குளிப்பதற்கு நல்ல வசதியானது. ஆனால் இப்படியான தருணங்களில் நீர் மிகுந்த சூடாக இருக்கும். தூய்மையின் அறிகுறியாக இருக்கும் வகையில் எமது ஒவ்வொரு மயிர்க்காலும் கூட சுத்தம் செய்யப்படவேண்டியிருந்தது. தண்ணீர், அதனது புனிதத்தையும் துப்புரவையும் அடையும்பொருட்டு, நன்கு கொதிக்க வைக்கப்பட்டிருந்தது. நாம் போகவேண்டிய தூரமாகிய முப்பது மைலையும் நடந்தே போக வேண்டும் என்பதால், அதுவும் ஒரே சீராக நடந்தால்தான் நேரத்துக்கு போகமுடியுமாதலால், சூரிய உதயத்துக்கு முன்பே நாம் புறப்பட்டுவிட்டோம்.

காற்று, பேயினது போன்ற நிறத்துடனும், நிசப்தமாகவும் நறுமணத்துடனும் மிளிர்ந்தது. எமது பயணத்துக்காகவே அது புனிதமாக்கப்பட்டிருந்தது போலிருந்தது. எனது பாட்டியின் கண்கள் மிளிர்ந்தன. அவள் வீட்டிலிருந்து வெளியே போவதையிட்டு மகிழ்ச்சியுடனிருந்தாள். ஒரு சில காலத்துக்கு வீட்டுத் தொல்லைகளிலிருந்தும் நாட்டுப் பிரச்சனைகளிலிருந்தும் விடுபட்டிருக்கலாம் என்பதால், வெளிக்கிளம்புவதையிட்டு சந்தோசத்துடனிருந்தாள். அவளது மனநிலை கொரியக் கவிதை ஒன்றில் வரும் வரிகளின் அர்த்தத்தைப் பிரதிபலிப்பது போலிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"வளர்ந்து செல்லும் எனது
பச்சைக்கோலை எடுத்தேன்!
பற்றைகள் நிறைந்த பாதையால்
திரும்பினேன்!
சுவர்க்கம் போன்ற நான்கு
பள்ளத்தாக்குகள், தெரிந்தன!
உலகம் பற்றிய எனது
தோற்றத்தை, விட்டொழித்தேன்!
தேவதாருவின் சிவந்த
காய்களை பறிப்பதற்காக"



"வளர்ந்து செல்லும் எனது
பச்சைக்கோலை எடுத்தேன்!
பற்றைகள் நிறைந்த பாதையால்
திரும்பினேன்!
சுவர்க்கம் போன்ற நான்கு பள்ளத்
தாக்குகள், தெரிந்தன!
உலகம் பற்றிய எனது
தோற்றத்தை, விட்டொழித்தேன்!
தேவதாருவின் சிவந்த காய்களை
பறிப்பதற்காக"

(தேவதாரு மரம் தீய ஒழுக்கத்தின் குறியீடாக கீழைத் தேசங்களில் கருதப்படுகிறது)

எமது பாட்டியுடன் அவளது கைத்தடியுமிருந்தது. எனது சிறிய உடுப்பு மூட்டையும், பேனாவும் பென்சில்களும் அவளிடமிருந்தன. எங்களுக்குப்பின்னே, பாட்டியின் வேலைக்காரி ஒருத்தி சாப்பாட்டை எடுத்துக்கொண்டு வந்துகொண்டிருந்தாள். அந்த வேலைக்காரி பதினான்கோ அல்லது பதினைந்தோ வயதுடைய ஒரு சிறுமி. ஒரு ஏழைக் கைம்பெண்ணின் மகளான அவளது பெயர் கியீப்-சூன். அந்த பெயருக்கு பொன்னை ஒத்தபிள்ளை என்ற கருத்து. அவளது வீட்டில் வேலைகள் அதிகம் இல்லை என்பதால், சாப்பாட்டுக்கும் உடுபுடவைகளுக்குமாக, எங்கள் வீட்டில் பாட்டிக்கும் அவளது பெண்பிள்ளைகளுக்குமாக எந்நேரமும் வேலைசெய்தபடியே இருப்பாள். எந்நேரமும் குப்பை கூட்டியபடியோ, கழுவியபடியோ, அல்லது துணிகளை 'அயன்' பண்ணியபடியோ அவள் இருப்பதைக் காணலாம். நல்ல கோழிக்கறி சாப்பிடுவதையே குறியாகக்கொண்ட அவளது தாய் (ஒரு இலந்தை மரம் அவர்களது வீட்டில் உண்டு) மூதாதையர்களின் நினைவுநாட்களின்போது வேலை செய்யவே சிறந்தவள். விருந்துகளின்போது சமைக்க உதவக்கூடியவள். ஆனால் சாதாரண நாட்களுக்கான சமையலுக்கு ஏற்றவள் அல்ல.

காலை மிகவும் அமைதியுடன் மலரத்தொடங்கியது மடத்துக்கு இன்னும் பத்துமைல் இருக்கும்போது. யாருமற்ற ஒரு பிரதேசத்தை அடைந்தோம். இங்கு வீடுகளோ மனிதர்களோ காணப்படவில்லை. குதிரைகளைக்கூட இங்கு உபயோகிக்க முடியாது. கல்லால் ஆன படிக்கட்டுகளால், குறுகிய அப்பாதையால் மேல்நோக்கி நாம் நடந்துகொண்டிருந்தோம். பாதையின் இருபுறமும் பச்சைப்பசேலென்றிருந்தது. அந்தப் பாதை தொடர்ந்து பலமைல்களுக்கு ஏறுமுகமாகவே போய்க்கொண்டிருந்தது. சில கற்படிகளில் சீன எழுத்துக்கள் செதுக்கப்பட்டிருந்தன. இருவரும் பலமான குரலில் அவற்றிலிருந்தவைகளை வாசித்தபடி மலை ஏறினோம். போய்க்கொண்டிருந்தபோது அணிலை பருந்து பிடித்துக்கொண்டு சென்றதையும் ஒரு பெரிய பறவை அங்கிருந்த அருவியொன்றில் முழுகியெழுவதையும் கண்டோம்.

மதியத்திற்குப் பின்பு ஒரு பிக்கு பற்றைகளை விலக்கிக்கொண்டு, மலை ஏறத்தொடங்கினார். எம்மை அவர் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. மௌனமாக அவர் சென்று கொண்டிருந்ததைப் பார்த்தால், கவிதையொன்றில் வரும் பிக்குவைப்போலிருந்தது.

"பாலத்தால் ஒரு பிக்கு போகின்றார்!
தண்ணீரில் அவரது நிழல் தெரிந்தது!
"நில்லுங்கள்... ஓ, பிக்குவே!
என்னுடன் பேசி விட்டுச் செல்லுங்கள்!
"உனது வழிதான் எது?"
ஆனால் அவரது கைகள்!
முகில்களைக் காட்டின!
சலனமெதுவுமின்றி அவர்!
மேலே போகிறார்"

வழிநெடுகிலும் பாட்டி புத்தரைப் பற்றிப் பேசிக்கொண்டே வந்தாள்... அப்படியே சூரியன் மறையும்வரை, நேரம் ஆனந்தமாகப் பாட்டியுடன் கழிந்தது. வெண்மையான பனிப்புகார் மலைகளில் ஆங்காங்கே தெரிய ஆரம்பித்தது. பார்ப்பதற்கு மிருதுவாகவும், நிழலைப் பரப்பிக்கொண்டும் மலைகள் நின்றிருந்தன. போதி சத்துவர்கள் (வருங்கால புத்தர்கள்) எம்மை வரவேற்கக் காத்திருந்தது போலிருந்தது. அந்த மலைகளின் தோற்றம், நாம் நன்றாக இருட்டிய பின்னரே அந்த பௌத்த மடத்தை அடைந்தோம். பொதுவாக யாத்திரைகளில் இந்த நிலைப்பாடே காணப்பட்டது. ஏனெனில் மடங்கள், கிராமங்களிலிருந்து வெகுதொலைவிலும், அவற்றுடன் எந்தவிதத் தொடர்புகளுமற்றே இருந்தன.

அந்திக் கருக்கலில் ஒரு புத்த மடத்தை அடைவது என்பது, மிகவும் சந்தோசமான அனுபவம்தான். எனது தாய்நாட்டின் சுதேசிய இலக்கியத்தில், இவ்வகையான பல கவிதைகள் உள்ளன.

"தூரம் அதிகம் தான் என எல்லோரும் கூறினார்கள்! ஆனால் பறையிருந்து வந்த பெருமுழக்கம்! கோயில் அருகில் தானோ என எண்ணவைத்தது! அந்தப் பச்சை மலைகளிலிருந்து! அதிகதொலைவிலிருக்குமோ! முகில்களின் காலடியில் வெகு தூரத்துக்கு அப்பாலோ!... ஆனால் என்னால் பார்க்க முடியவில்லை! பனிப்புகார் எனது பாதையை, மறைக்கிறது.

முன்னாட்களில் பலநூற்றாண்டுகளுக்கு முன்பெல்லாம் பௌத்த மடங்கள் கொரியாவின் ஆட்சி அமைப்பில் முக்கிய காரணியாகத் திகழ்ந்தன. அரசன் கூட பிக்குகளின் உடையை அணியக் கட்டாயப்படுத்தப்பட்டான். மடாதிபதிகளின் அதிகாரத்தின் ஒரு சின்னமே அரசன் என்பதைக் காட்டவே, இப்படி அமைக்கப்பட்டிருந்தது. மடாதிபதிகளின் ஆட்சியில் நாடு ஊழல் மயப்பட்டது. ஒரு மேடையில் நின்றுகொண்டிருக்கும் பெண்கள் மந்திர ஜாலங்களால் தரையைக் கிழித்துக்கொண்டு பூமிக்குள் செல்வார்கள்.

பூமியின் கீழே அந்தப் பெண்கள் பிக்குகளால் வஞ்சிக்கப்படுவார்கள். கடைசியில் மடங்கள் எல்லாம் ஆள் அரவமற்ற மலைப் பிரதேசங்களுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாற்றப்பட மந்திர ஜாலங்களும் நின்றன. ஆனால் கொன்பூசின் நடைமுறைச் சித்தாந்தத்தில் திருப்திப்பெறாத எனது பாட்டியைப் போன்ற ஆன்மிகமுறையில் கடவுளின் மாயையை அறிய முற்படும் இயற்கைக்குணங்களைக்கொண்டவர்கள் வருடத்துக்கு ஓரிருமுறை புனிதப் பயணங்களை மடங்களுக்கு மேற்கொள்வர். தங்களது நம்பிக்கைக்குரிய பிரார்த்தனைகளை பிக்குகளிடம் ஒப்படைப்பர்.

மஞ்சள் நிற அந்திவேளையில், பழைமை பொருந்திய இந்த மடம் மலைகளிடையே அப்படியே அமிழ்ந்து, உருக்கி வார்க்கப்பட்டதுபோல் மிளிர்ந்தது. கற்களால் ஆன புலிகளும், பளிங்காலான சிங்கங்களும் பாடும் சுனைகளும் புனிதமான சோலைகளும் இந்த மடத்தைச் சூழ்ந்து காணப்பட்டன. இந்த வினோதமான சிலைகள் மனிதர்களால் ஆக்கப்பட்டவை, என எனக்குத் தெரிந்திருந்தாலும்கூட, இங்கே காணப்பட்டவை எதையுமே செயற்கையானவை எனக்கூற முடியாதிருந்தது. இவை நிலத்தைக் கிழித்துக்கொண்டு தானாகவே வெளியே வந்தவை போலிருந்தன. செழுமை நிரம்பிய மங்கிய நிறத்திலமைந்த வழிபாட்டு இடங்கள், மலையிலிருந்து தோன்றும், புயலாலும், மழையாலும், காற்றாலும், சூரிய ஒளியாலும் பல எண்ணற்ற நூற்றாண்டுகள் குளித்துக்கொண்டிருந்தன. எல்லாமே இயற்கையாக, படிக்கட்டுகளின் சாம்பல் நிறமும், தூண்களின் கரும் சிகப்பு நிறமும், உண்மையான பாறைகளினதும் மரங்களின் நிறத்துடனும் ஒரே சுருதியில் ஒன்றுபட்டு, பார்ப்பதற்கு பிரித்துணரவே முடியாதபடி, ஒன்று போலவே தோன்றின. மாலைநேர பறவை ஒன்றின் பாடும் குரல், ஓடும் அருவியின் ஓசைக்குள் அமிழ்ந்து போனது. பின் அழும் தேவதாரு மரங்களுக்கிடையே அவ்வொலி முழுமையாக அற்றுப்போனது. இவை எல்லாம் சூட்சுமமானவை போலவும், உண்மையற்றவை போலவும், புரிந்துகொள்ள முடியாத ஒரு கனவு போலவும் இருந்தன.

ஒரு குறுகிய காலமேயான, மூன்று மாதங்களில் நான் தங்கியிருந்த 'புத்தரின் தியானப் பள்ளி' என அழைக்கப்பட்ட அந்த மடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள், தொடர்ச்சியாக ஆனால் பனிப்புகார் படர்ந்த படங்கள் போல் தெளிவற்றதாக எனது மனத்திரையில் வருகின்றன - மலைப்பள்ளத்தாக்குகளில் இருளும் வேளைகளிலும் சந்தி வெளிச்சத்திலும், நிசப்தத்தில் புதையுண்டு போய், எதுவுமே ஆடாமல் அசையாமல் இருக்கும் பகல் வேளைகளிலும், புத்தபிக்குகள் தமக்கிடையே பூடகமாகக் கூறும் வார்த்தைகளான, நான் உன்னையே மதித்து உன்னையே நம்புகிறேன், அமித்தபா, அல்லது இறை வணக்கமாகிய எல்லா உயிரினங்களும் காப்பாற்றப்படுவதாக, என்பனவற்றை நானும், கூறக் கற்றுக்கொண்டு விட்டேன். பூதங்களால் ஆக்கப்பட்டது போன்ற குளிர்ச்சி பொருந்திய அறையில் எனக்குரிய பாடங்கள் நடந்தன. அதனது சுவர்களில் பகட்டான முறையில், முன்னாளில் வாழ்ந்த தலைவர்களினதும், துறவிகளினதும் படங்கள் வரையப்பட்டிருந்தன. நான் புத்தமதப் புத்தகங்களை நூல் நிலையத்தில், மீண்டும் மீண்டும் படித்தேன். எனது குருவான நரைவிழுந்த மடாதிபதியின் உடை, துயரத்தை பிரதிபலிப்பதுபோல் சேற்றின் நிறத்தில் இருந்தது. அவரது நிர்மலமான முகத்தில் உலகத்தைப் பற்றிய ஆசைகளிலிருந்தும், பொறுப்புக்களிலிருந்தும், விடுபட்ட தன்மை தெரிந்தது.

அவர் எனக்கு 'நிர்வாண நிலை' பற்றி விளக்க முயன்றார். "ஒரு மெழுகுவர்த்தியை அணைப்பது போன்றது அது" என்றார். அவரது வெறுமையான பெரிய அறையில் நாம் இருவரும் அமர்ந்திருந்தோம். அங்கிருந்த தூண்களில் பின்வருமாறு செதுக்கப்பட்டிருந்தது.

"எந்தவித பாவச் செயல்களும் செய்யாதே! நல்லகாரியங்களை அடிபணிந்து செய்! உனது மனதை தூய்மைப்படுத்து!"

இதுவே புத்தரது போதனைகள்.

நான் அழகிய பூந்தோட்டத்துக்குச் சென்றபோது, இரத்தம் குடிக்கும் ஈ ஒன்று எனது காதிலோ அல்லது மூக்கிலோ தெரியவில்லை வந்தமர்ந்தது. அதனை நான் அடித்துக் கொன்றதற்காக எனக்கு நல்லதிட்டுக்கிடைத்தது.

"இந்த கொடிய ஈக்களில் கூட புத்தர் இருக்கலாம்" என்றார் எனது குரு. அது கூட நிர்வாணத்தை அடைய கூடும். அதுதான் திரும்பவும் பிறவி எடுக்காதநிலை. பிரயத்தனம் செய்து அமைதியுடன் இருக்கப் பழகிக்கொள். எந்த ஒரு உயிரினத்தினதும் கெட்டவிதியாக இருந்துவிடாதே" எலிகளையோ, பேன்களையோ அல்லது மாடுகளையோ பௌத்தர்கள் கொல்வதில்லை என எனக்கு அங்கு போதிக்கப்பட்டது.

ஒகஸ்ட் மாதத்தின் கடைசிவாரத்தில், நான் மீண்டும் வீடு வந்து சேர்ந்தேன். அந்த புரிந்துகொள்ளவே முடியாத மாய உலகிலிருந்து அப்போதுதான் வந்து சேர்ந்தவனுக்கு அதற்கு நேர் எதிரிடையாக எல்லாம் இருந்ததைக்காண அதிர்ச்சியாக இருந்தது.

தூர கிழக்கு நாடுகளின் அரசியல் பற்றி அதிகம் தெரியாத வாசகனுக்கு, நாற்பத்தி இரண்டு நூற்றாண்டு காலமாக சுதந்திரமாக இருந்த கொரியா இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்து ஆண்டுகளில் எப்படி புதிய யப்பானின் முன்பு, அதனது திருட்டுத்தனமானதும் ஆனால் விடாப்பிடியானதுமான ஆக்கிரமிப்பின் முன் செய்வதறியாது நின்றதை விளங்கிக்கொள்ள முடியாது. கிழக்கில் யப்பான் தனது பலத்தை, விரைவாக மேற்குலக கலாச்சாரத்துக்கு மாற்றியதால் பெற்றது. குறிப்பாகத் தனது படைபலத்தை மேற்குலகப்பாணியில் மாற்றியது. இளைய நாடுகளிடையே இயல்பாகவே இருக்கும் சுறுசுறுப்புடன் பலவகையான மாறுதல்களில் யப்பான் ஈடுபட்டது. அதற்கு இந்தவகைப் போலியான மாறுதல் இயற்கையாகவே வாய்க்கப்பெற்றிருந்தது. யப்பானுக்கு பாம்புதோலை உரிப்பதுபோல், ஒரு கடன் வாங்கிய நாகரிகத்தை உதறித் தள்ளிவிட்டு, அதனிடத்தே வேறொன்றை எடுத்துக்கொள்வது சுலபமான ஒன்றாகவே இருந்தது. பழமை பொருந்திய சீனாவுக்கும் கொரியாவிற்கும் இருப்பதைப் போலன்றி ஒப்பிட்டுப் பார்க்கும் போது யப்பானுக்கு இவ்வகை மாறுதல் சுலபமாக இருந்தது என்னவோ உண்மையே தங்களது நிலையில் தளர்ந்திருந்த அந்தக் காலகட்டத்தில், கொன்பூசியன் கலாச்சாரத்தால் பின்னிப்பிணைக்கப்பட்டிருந்த சீனாவும் கொரியாவும் இந்த நூற்றாண்டின் முதற் பத்தாண்டுகளில் ஏற்பட்ட உலக ரீதியான தொடர்புகளுடன் எவ்வாறு தம்மை சரிப்படுத்திக்கொள்வது என செய்வதறியாது திகைத்து நின்றன.

புத்திசாதுரியம்மிக்க மில்லியன் கணக்கான மக்களைக்கொண்ட சீனாவின் உட்பகுதிகளை, யப்பான் கைப்பற்றிக்கொண்டது. அந்த வெற்றிகளின் பின் கொரியாவில் தமக்கு உரிமை உள்ளதாக அதிகாரத்துடன் கேட்கத் தொடங்கியது. அது யப்பானிய-ரஷ்ய யுத்தத்தின்போது இது வெளிப்பட்டது. அது துருப்புகள் போய் வருவதற்கான பாதை ஒன்றைத் தரவேண்டும் என கொரியாவிடம் கோரி, அதற்கான ஒப்பந்தம் ஒன்றையும் செய்து, கையொப்பமும் இட்டது. அதில் கொரிய நாட்டை முழுமையாக எடுத்துக்கொள்ளும் எண்ணம் தமக்கு இல்லை எனவும் எழுதப்பட்டிருந்தது. ஆனால் வந்த துருப்புக்கள் வெளியேறவேயில்லை. துருப்புக்களின் பின்னே தேனீக்களைப்போல் வந்த சில்லறைப் புத்தி கொண்ட யப்பானியர்களின் குதூகலங்களுக்கு பாதுகாப்புக் கொடுப்பதற்காக, படையினர் அங்கேயே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*பயத்துடன் கூடிய இறுகிய முகங்களுடன் பிள்ளைகள் நின்றிருந்தனர். கிராமம் நிசப்தத்திலிருந்தது. எவருமே கதைக்காமல் மௌனமாக இருந்தனர். பின்னர் மதியநேரம் வரவே, பொதுவான அழுகுரல்கள் கேட்டன. புலம்பல் ஒலி எங்கும் கேட்டது. கிராமத்திலிருந்த எல்லோரது வீடுகளிலும், குடும்பத்தில் யாரோ இறந்துவிட்டது போன்று, புலம்பலுடன் கூடிய அழுகுரலும் ஒப்பாரியும் கேட்டது*



நிறுத்தப்பட்டிருந்தனர். அவர்கள் செய்த எல்லா தீய செயல்களுக்கும் பாதுகாப்பாக அவை செயற்பட்டன. சோலில் இருந்த குழப்பமும் செயற்திறனுமற்ற அரசாங்கத்தை யப்பான் முதலில் கூச்சலெதுவும் ஏற்படுத்தாமல் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது. இது 1907 இல் நடந்தது. ஒற்றர்களையும் யப்பானிய இராணுவ அதிகாரிகளையும் வைத்துக்கொரியாவின் வயோதிப அரசனை செயலிழக்கச் செய்து அரியணையிலிருந்து இறக்கி அவரின் பருவமடையாத மகனை அரசனாக்கியது. கடைசியில் உடைத்துப் பேசத்தொடங்கியது. 29 ஒகஸ்ட் 1919 இல் எல்லா ஒப்பந்தங்களையும் இரத்துச்செய்து, பகிரங்கமாக கொரியாவைத் தன்னுடன் இணைத்துக்கொண்டதாக அறிவித்தது.

இந்தச் செய்தி புல்லால் வேயப்பட்ட கூரைகளைக் கொண்ட 'சோங்-டுங்-சாய்' கிராமத்தை அடைந்தபோது, எனது தகப்பனாரின் முகம் கடும் சிவப்பு நிறமானது. மௌனியானார் அவர். தன்னைக் கொரியாவின் பிரதமர் போல பாவனை பண்ணிக்கொண்டு திரியும் எனது மாமா சடுதியாக வயதானவர் போலானார். மனதால் சுருங்கிப் போய்விட்ட அவர் மயக்கமடைந்து விழுந்தார். கவிஞரான எனது பித்துக்குளி மாமா, தனக்கு முன்னே தெரிந்த நட்சத்திரங்களை இரவு முழுவதும் பார்த்தபடி இருந்தார். இச்செய்தியைக் கேட்டதும் " இனிமேல் இந்த நாட்டின் பிரதமராக வரமுடியாது" என்ற முதிர்சியற்ற ஆனால் தன்னல மற்ற எண்ணமே, எனக்கு முதலில் ஏற்பட்டது.

நான் மனம் உடைந்துபோய் அழுதேன். எங்களின் மூத்தவர்கள் இதுவரை அழத்தொடங்கவில்லை. நான் அழுதபடி வீட்டுக்கு வெளியே ஓடினேன். ஆகாயத்தை நோக்கினேன். அங்கு அழிவைத் தரும் கருமையுடன் கூடிய ஏதாவது தென்படுகிறதா எனப் பார்த்தேன். இறுதிமுடிவைத் தரக்கூடிய புயலும் வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டு எங்கள் எல்லோரையுமே அள்ளிக்கொண்டு போகப் போகிறதா? ஆனால் வானம் தெளிவான நீல நிறத்துடன் இருந்தது. பளிங்குபோல் சூரிய ஒளியில் மின்னிய ஆற்று நீர், நுரைதள்ளியபடி ஓடிக்கொண்டிருந்தது.

பயத்துடன் கூடிய இறுகிய முகங்களுடன் பிள்ளைகள் நின்றிருந்தனர். கிராமம் நிசப்தத்திலிருந்தது. எவருமே கதைக்காமல் மௌனமாக இருந்தனர். பின்னர் மதியநேரம் வரவே, பொதுவான அழுகுரல்கள் கேட்டன. புலம்பல் ஒலி எங்கும் கேட்டது. கிராமத்திலிருந்த எல்லோரது வீடுகளிலும், குடும்பத்தில் யாரோ இறந்துவிட்டது போன்று, புலம்பலுடன் கூடிய அழுகுரலும் ஒப்பாரியும் கேட்டது.

சில ஆண்கள் தொடர்ந்து குடித்த வண்ணமிருந்தனர் "அழிவு நாள் வந்துவிட்டது நாம் எல்லோரும் நரகத்துக்குள் தள்ளப்பட்டுவிட்டோம்" என அவர்கள் கத்தினர்.

காலையிலிருந்து எனது தகப்பனார் எதுவும் சாப்பிடவோ குடிக்கவோ இல்லை. தள்ளாடியபடி வீட்டிற்கு வெளியே வந்தார். அவரது கண்களிலிருந்து கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தது. அப்போது நாங்கள் எல்லோருமே அவருக்குத் தமது மூத்தபிள்ளைபோல் தோற்றம் அளித்தோமோ என்னவோ, தனது கைகளை எம்பக்கமாக நீட்டினார்.

"நாம் எல்லோரும் அழிவைத் தரப்போகும் பட்டினிக்குள்ளாகப் போகிறோம். முடிவே இல்லாத பஞ்சம் வரப்போகிறது. நாங்கள் இதிலிருந்து மீளப்போவது எப்போது என்பதை யார்தான் அறிவார்" அவரது முகம் கண்ணீரால் தோய்ந்துபோனது. வழிந்தோடிய கண்ணீர் அவரது தாடிவரைகூட வந்திருந்தது. எங்கள் வீட்டின் வாசற் பக்கமாக கொரிய நாட்டின் கொடியை ஏற்றி அதற்குத் தாழ்பணிந்தார் அப்பா.

அன்று, இரவு வேளைக்கான உணவு வீட்டில் சமைக்கப்படவில்லை. காலையில் அணிந்த உடைகளை மாற்றாமலேயே, எனது பாட்டி மெழுகுவர்த்தியின் பக்கமாக அமர்ந்திருந்தாள். பாட்டி அரிசியிலான கஞ்சியை எடுத்துக்கொண்டு, அடிக்கடி அப்பாவை நாடிப் போய்க் கொண்டிருந்தாள். ஆனால் அவரோ பாயில் ஆணி அறைந்ததுபோல் படுத்திருந்தார். கஞ்சியை அருந்த மறுதலித்துக்கொண்டேயிருந்தார்.

காலையில் பார்த்த போது இரவு முழுவதும் குடித்துக்கொண்டே இருந்த இளைஞர்களில் பலர், தற்கொலை செய்து கொண்டிருந்தது தெரிந்தது. பகல் நேரங்களில் கிராமத்துப் பெண்கள் சுத்திகரிப்பு வேலைகளில் ஈடுபடும் நீரோடையின் கரைகளில் அவர்களின் சடலங்கள் கிடந்தன.

வெளிர்நீல நிறத்தையுடைய உடைகளை அணிந்த யப்பானியர்களைக் கொண்ட கோஷ்டியொன்றிற்கு தலைமை தாங்கியபடி, ஒரு யப்பானியப் பொலிஸ்காரன் எமது கிராமத்துக்குள் வந்தான். எல்லோரது கைகளிலும் வாள்களிருந்தன. அவர்கள் எங்கள் 'கேற்றை' அடித்துத் திறந்தனர். ஏற்ற வேண்டிய யப்பானின் சூரிய கொடிக்குப் பதிலாக, ஆண்-பெண் உறவின் முக்கியத்துவத்தைக் குறிக்கும் (கொன்பூசியன் தத்துவப்படி) சூரியனும் சந்திரனும் அமையப் பெற்ற சிவப்பு, வெள்ளை நிறங்களில் அமைந்த கொரிய நாட்டின் கொடியை ஏன் ஏற்றியிருக்கிறாய்? என, அந்தப் பொலிஸ்காரன் கேட்டான். அலட்சியம் தெரியும் வண்ணம் தோளைக் குலுக்கி, தனக்கு அவன் கூறுவது எதுவும் விளங்கவில்லை என்பது போல் அப்பா நடித்தார்.

அந்த யப்பானியப் பொலிஸ்காரன் எனது தகப்பனாரின் மேல் பாய்ந்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கால்களால் அவரை உதைத்தான். இது நடைபெறுவதை யன்னலால் கண்ட எனது பாட்டி, தலைக்கு மேலாக்கைப் போட்டுக் கொள்ளாமலும், முகத்தை, இழிகுணம் கொண்ட கண்களுக்கு தெரியாமலிருக்க துணியால் மறைத்துக்கொள்ளாமலும்?, அவசரமாக சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு ஓடோடி வந்தாள் “எனது மகனைத் தொடாதே” என அவள் - கிரீச்சிட்டுக் கத்தினாள். அப்பாவுக்கும் பொலிஸ்காரனுக்குமிடையே வந்தாள். “இந்த இரண்டு நாட்களாக எதுவுமே அவன் சாப்பிடவில்லை. அதனால்தானோ என்னவோ அவனுக்கு, தான் என்ன செய்கிறேன் எனத்தெரியவில்லை” என்றாள்.

அப்போது அந்தப் பொலிஸ்காரன் பாட்டியை கீழே தள்ளினான். மிகவும் கொடூரமான முறையில் ஐரோப்பிய பாணியில் அமைந்த சப்பாத்துக்களால் அவளை உதைத்தான். இதைக்கண்ட அவளது பிள்ளைகள் பெருமூச்சுவிட்டபடி நின்றனர்.

கொரியர்களின் கண்களுக்கு ஒரு வயது முதிர்ந்த மூதாட்டியை அடிப்பது என்பது, மரணதண்டனையை பெற்றுத்தரக்கூடிய குற்றமாகும். ஒரு மூதாட்டியின் பாவாடைக்குப் பின்னே, கடும் குற்றவாளிகள் கூட மறைந்து கொள்ளலாம். எமது அப்பா அந்தப் பொலிஸ்காரனின் குரல்வளையை நெரித்துக்கொன்றிருப்பார். ஆனால் எனது பாட்டி வலி தந்த துன்பத்தால் மயங்கி விட்டதைக் கண்ணுற்றவர், அவளைத் தூக்கி எடுத்துக்கொண்டு சந்தைப் பக்கமாக இருந்த (ஓரளவு திறமையுள்ளவர் எனப் பேசப்பட்ட) டொக்ரர் ஒருவரிடம் சென்றார். பாட்டியின் கெண்டைக்கால் முறிந்ததால், பலவார காலமாக அவள் சுகவீனமுற்றிருந்தாள்.

பித்துக்குளிக் கவிஞரான எனது மாமாவின் ‘ஸ்ருடியோ’ வுக்குள் அன்று இரவு சென்றேன். பாயில் படுத்தபடி பரிதாபகரமான முறையில் அழுதுகொண்டிருந்தேன். பித்துக்குளிக் கவிஞர் அடுத்த அறையில் நடைபயின்றுகொண்டிருந்தார். இடையிடையே வாய்க்குள் ஏதோ முணுமுணுப்பதும் கேட்டது. கடதாசியாலான கதவில் எனது ஈரம் தோய்ந்த விரல்களால் ஒருதுளை செய்து, அவர் இருந்த அறையைப் பார்த்தேன். வெளிக்கதவினருகே நின்று கொண்டு, ஆகாயத்தை நோக்கி கை முஸ்டியை உயர்த்திக் காட்டிக்கொண்டிருந்தார்.

“ஓ, சந்திரனே நட்சத்திரங்களே” ஒளிவிடுவதற்கு உங்களுக்கு எவ்வாறு மனம் வந்தது? நீங்கள் முழக்கத்துடன் கூடிய புயலை உண்டாக்கி, ஏன் எல்லாவற்றையும் அமிழ்த்தி அழித்து விடக்கூடாது. மலைகளே! பச்சை இலைகளிலும் மரங்களிலும் புற்களிலும், சலசலவென்ற ஒலியையும் ஒளிர்ப்பையும் ஏற்படுத்தும் உங்களது ஆன்மாவின் ஒளி இப்போது இல்லாமல் போய்விட்டதே, அது உங்களுக்கு இன்னும் விளங்கவில்லையா? உன்னுடனேயே வாழ்ந்துவிட்ட, உன்னுடைய மடியில் படுத்தும், தமது இரத்தத்தை உனக்கு ஈர்ந்தும், தமது காவிய தேவதையாக உன்னையே வைத்திருந்த இந்த மனிதர்களின் தேசிய நீரோட்டம், நீரிற்கான தேவதைகளே, பள்ளத்தாக்குகளைக் காக்கும் பூதங்களே, உங்களிடையே நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்த மனிதர்களின் முதல் அரசனான ‘தன்-கூன்’ அந்த வெள்ளை நிறக் குன்றுகள் கொண்ட மலையின் அருகில் இருந்த புனித மரத்தடியின் சுற்றாடலில் அமைந்த ஆட்சியின் வழிவந்த இந்த மக்களுக்கு முடிவு வந்துவிட்டதை நீங்கள் அறியமாட்டீர்களா? இந்த இரவில் கொரியாவின் ஆன்மா எங்கே, எம்மை பழைய ஆட்களைப் போல் விட்டுவிட்டு சென்றுவிட்டதை நீங்கள் அறியமாட்டீர்களா?

எனது பாட்டா இறந்தபோது, அந்த உயரமான டொக்ரர் புல்லால் மேய்ந்த எங்கள் வீட்டின் கூரைக்கு மேலாக பாட்டாவின் ஆவிக்கு விடைகொடுத்து அனுப்பியதுபோல், பித்துக்குளிக் கவிஞரான எனது மாமாவும் கொரியாவின் ஆன்மாவுக்கும் ஒரு ஆவிக்கு விடைகொடுப்பது போல் விடைகொடுத்து அனுப்பியிருக்கிறார். அப்படியாயின் கொரியாவின் தேசியம் முடிவடைந்தே போய்விட்டதா?

.... அப்படியானால் கொரியாவின் வாழ்வு முற்றாகவே அஸ்தமித்துவிட்டதா? ரோமர் காலத்தையொத்த பழமை வாய்ந்த எனது நாடு, எத்தனையோ பொற்காலங்களைக் கண்ட எனது அருமைத்தாய் நாடு-எத்தனை காலமாக, எல்லா நவீன யுகங்களின் தாக்கங்களிலிருந்தும், எட்டிய தூரத்திலிருந்தால் ரோமசாம்ராஜ்யத்தின் எழுச்சியிலிருந்துகூட எந்தவித பாதிப்புக்கும் ஆளாகாமல் இருந்ததே.... நான் அழுதழுதுபின் நித்திரையாகிவிட்டேன் வெளியே, என்றுமில்லாத வகையின் சத்தங்கள் வந்துகொண்டே இருந்தன - இரவு கட்டுக்குப் போடாமல் விடப்பட்டிருந்த மாடுகளின் சலங்கைகளிலிருந்து வந்து ‘ஜில் ஜில்’ என்ற ஒலியுடன்கூடவே, அவற்றின் ‘ம்மா’ என்ற அழுகுரல் சத்தமும் விந்தையை ஏற்படுத்தும் வண்ணம், பலமாகக் கேட்டுக்கொண்டே இருந்தது.



## எதுதான்

**சத்தியமாய்**
இவையெல்லாம்
என்னுடையது இல்லை
இந்த அழுகை
விளங்கிக் கொள்ளாதவர்கள் தந்தது
இந்தக் கோபம்
அவர்களின்
கோமாளித்தனங்கள் தந்தது
இந்தப் பேனா கூட
கொலை செய்யப்பட
வேண்டியவர்களுக்காக
என்னில் தொற்றிக்கொண்டது
பற்றைகளின் மேல் நடக்கிறேன்
பாதை தவறிய சிலர்
முன்னே நடக்கிறார்கள்
அது அவர்களின்
இறுதிக் கணம் நோக்கியதாக
இருக்கலாம்
அதைப் பார்த்துவிட நானும்.
சத்தியமாய்
இவையெல்லாம்
என்னுடையதும் இல்லை
என் சிரிப்பு
என் சாந்தம்
என் பரிசு
என் பாதை
யாரிடமாவது இருக்கிறதா?
தொல்கால
மட்பாண்டத் துண்டும் சாட்சியங்களாய்

**பொன்.காந்தன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அழகிய மனங்கள் வேண்டும் எங்களுக்கு



உட்கனன்று
பல பொழுது குளிர்ந்து
சட்டெனச் சிரித்து
பட்டாசாய் ஒளிர்ந்து
ஒட்டும் உளத்தோடு ஒன்றிணைந்து
ஜாலங் காட்டுகின்ற மனங்கள்

சற்றே ஒதுங்கி...
அதிகம் பேசாது...
முற்றும் தெளிவாய் முகம் மலர்ந்து...
கோபத்தையும் வெறுப்பையும்
வாரியிறைத்து...
இழப்புகளின் வலியால்
குலைந்து தவித்து...
எப்போதும் வலுவுடன்...
இப்படி எத்தனை எத்தனை...

ஒருவர்க்குள் ஒன்றாயும்
பலபொழுது ஆயிரமாயும்
இங்கு மனிதர்களைவிட
மனங்களே அதிகம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மானுடத்தின் உயிராய் இருக்கும்
அவற்றை யாரும் உறுத்தாதீர்கள்.
விபத்தில் சிக்கிய கண்ணாடிபோல்
அவற்றை யாரும் சிதறடிக்காதீர்.
போர்விரட்டிய போதும்
பொசுங்காமல் ஒளிர்ந்த
உள்ளங்களை ஒருபோதும்
உருக்குலைக்காதீர்.
அன்பு சுரக்காத வார்த்தைகளால்
ஆணவம் பீறிடும் காரியத்தால்
அழிவை விதைக்கும் அறிவியலால்
சிறைப்படுத்தி வருத்தும் நம்பிக்கைகளால்
மனங்களை நொறுக்காதீர்.

மானுடர்களை விட
மனங்களே எமக்கு வேண்டும்.
இந்த மனங்களின் பலத்தை நாமறிவோம்.
பயிற்சியாலும, படைப்பலத்தாலும்
முடியாததை – இந்த
மனங்கள் வென்றிருந்தன

எம் காலத்தில்,
காலுடைந்தும் கையிழந்தும்
உணர்வுகளறுந்து முடங்குபவர் என
எண்ணிய பலரும்
மனங்களால் எழுந்து
சிறகு விரித்த
காட்சிகள் இன்னமும்
எம்மிடையே வாழ்கின்றன.
ஆதலால்,
மனங்களே வேண்டும் எங்களுக்கு.

பொய்யணியாத
வேடம் புனையாத
வஞ்சனை நெருங்காத
பொறாமைத் தீ உட்புகாத
போர்க்களம் போல் பொருமாத
மானுட வாழ்வின் ஆதாரமாய்
மானுட பலத்தின் ஆத்மாவாய்
உலகத்தை இயக்கும் மந்திரமாய்
உடலைச் செலுத்தும் யந்திரமாய்
மனங்களே வேண்டும் எங்களுக்கு.

குறோட்டன் செழித்த பூங்காவில்
அருவி சலசலக்கும் அடவியிலும்
வர்ணம் பூசிய வானத்திலும்
ஒப்பனை செதுக்கிய முகங்களிலும் விட
அழகானவை மனங்கள் –இந்த
அழகிய மனங்கள் எமக்கு வேண்டும்.

நேசத்தை வளர்ப்பதற்கு
தேசத்தை செதுக்குவதற்கு
வேடத்தை விரட்டிக் கலைப்பதற்கு
பேதங்களைக் குழிதோண்டிப் புதைப்பதற்கு
அழகிய மனங்களே வாருங்கள்.
குண்டு துளைத்து
இடிந்து கொட்டுண்டு
பற்றை படர்ந்து காடாகி
சுட்டெரிக்கப்பட்டு வெளியாகி
மொட்டை மரங்களால்
நிரம்பியுள்ள இந்தத்
தாய் நிலத்தை
அன்பினால் அலங்கரிக்க வாருங்கள்.
அழகிய மனங்களே வேண்டும் எமக்கு.

■ அம்புலி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



“பெண்களின் பங்கு இல்லாமல் எந்தவொரு மக்கள் இயக்கமும் விடுதலை பெறமுடியாது. ஆகவே தேசிய விடுதலைப்போராட்டத்தில் மட்டுமல்ல சமூக மாற்றத்திலும் வெற்றிகொள்ள பெண்கள் அணிதிரள வேண்டும்”

# தென்னாபிரிக்க விடுதலைப்போராட்ட வரலாற்றில் பெண்களின் பங்கு

ஒரு சமூகமானது ஆண் பெண் பாரபட்சம், அடக்குமுறை மற்றும் ஒடுக்குமுறைகளில் இருந்து விடுதலையடையாவிட்டால் அச்சமூகத்திலுள்ள மக்கள் மத்தியில் சாதி, மதம், வர்க்கம், பால், வகுப்பு போன்ற பாகுபாடுகள் தோன்றுவதற்கான வாய்ப்புகள் மேலெழுகின்றன. வளமான வாழ்விற்கு இவை தடைக்கற்கள் என்பது வெளிப்படை. எனவே சமூகம் விடுதலையடைய வேண்டுமானால் அந்தச் சமூகத்தினைக் கொண்டுள்ள தேசம் விடுதலையடையவேண்டும். குறிப்பாக மூன்றாம் உலக நாடுகள் காலனியாதிக்கத்தின் பிடியில் இருந்ததால் அந்த நாடுகளிலேயே விடுதலைப் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன, நடைபெற்று வருகின்றன. இந்தத் தேசிய விடுதலைப்போராட்டத்தினை முன்னெடுக்கின்ற அமைப்பானது தனது தேசிய இலட்சியத்திற்குப் பின்னால் சகல மக்களையும் எழுச்சிகொள்ளச் செய்யவேண்டும். ஆகவே தேசிய உருவாக்கத்திற்கான புரட்சிகரப் பணிகளில் பெண்களும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். பெண்களின் பங்கு இல்லாமல் எந்தவொரு மக்கள் இயக்கமும் விடுதலை பெறமுடியாது. ஆகவே தேசிய விடுதலைப்போராட்டத்தில் மட்டுமல்ல சமூக மாற்றத்திலும் வெற்றிகொள்ள பெண்கள் அணிதிரள வேண்டும். சீனா, வியட்நாம், எரித்திரியா, அயர்லாந்து மற்றும் தென்னாபிரிக்கா போன்ற நாடுகளின் தேசிய விடுதலைப்போராட்ட வரலாற்றில் பெண்களும் தூண்களாய் நின்று செயற்பட்டுள்ளனர். இந்த வகையில் தென்னாபிரிக்க விடுதலைப்போராட்டத்திற்குத் தென்னாபிரிக்கப் பெண்கள் ஆற்றிய பங்கினை சற்று அவதானிப்போம்.

சிறுபான்மை வெள்ளையினத்தவரின் ஆட்சியில் தென்னாபிரிக்கா இருந்த காலப்பகுதியில், பெரும்பான்மைக் கறுப்பினத் தேசியவாதம் மேலோங்குவதை அடக்கத் தலைப்பட்ட வெள்ளையின ஆட்சியாளர்கள் 'அப்பதைட்' என்று அழைக்கப்படுகின்ற இன ஒடுக்குமுறைக் கொள்கையினைப் பிரயோகித்தார்கள். இந்த வெள்ளையினத்தவரின் இன ஒடுக்குமுறை ஆட்சியை எதிர்த்த தென்னாபிரிக்க மக்கள் 1912இல் ஒன்றிணைந்து உருவாக்கிய ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் அரசியல் ரீதியான எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்தனர். இந்த அமைப்பு உருவாக்கப்பட்ட ஆரம்பத்தில் பெண்கள் அதன் அங்கத்தவர்களாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

1913 இல் 'அப்பதைட்' ஆட்சியாளர்கள் தாம் வழங்குகின்ற கடவுச்சீட்டுக்களைப் பெண்கள் கொண்டு செல்லவேண்டும் என்ற ஒரு சட்டத்தினை அமுல்படுத்தப் போவதாக அச்சுறுத்தினர். அச்சட்டத்தினை எதிர்த்துக் கறுப்பினப் பெண்கள் மேற்கொண்ட போராட்டத்தின் விளைவால், ஆட்சியாளர்களால் அந்தச் சட்டத்தினை அமுல்படுத்த முடியவில்லை. இக்காலப்பகுதியில் சாளற் மக்ஸெத என்ற கறுப்பினப் பெண்மணி 'பன்று பெண்கள் சங்கம்' (Bantu Women's League) என்ற அமைப்பினை உருவாக்கினார். இப்பெண்மணியே 1943 இல் ஆபிரிக்கத் தேசிய காங்கிரசின் பெண்கள் சங்கம் உருவாக்கப்பட்டபோது அதன் தலைவரானார். இந்த அமைப்பு கறுப்பினப் பெண்களுக்கான இனவாத ஆட்சியாளர்களின் கடவுச்சீட்டுத் திட்டத்தினை எதிர்த்து ஒத்துழையாமைப் போராட்டத்தினை மேற்கொண்டது. இந்த அரசியல் ரீதியான நடவடிக்கைக்காக கர்ப்பிணித் தாய்மார்கள், இளம் பெண்கள் உட்பட ஆயிரக்கணக்கான பெண்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

'அப்பதைட்' அரசிற்கு எதிரான நீண்டகாலப் போராட்டத்தில் ஆண்களுடன் சேர்ந்து பெண்களும் முக்கிய பங்காளிகளாக மாறினர். 'அப்பதைட்' ஆட்சியாளர்கள் கறுப்பினப் பெண்கள் மீது பல்வேறு தடைகளைப் போட்டது மட்டுமல்லாமல் அவர்களைச் சிறையிலிட்டும் பல்வேறு சித்திரவதைகளுக்குள்ளாக்கியும், மிருகத்தனமாகக் கொன்றும் சொல்லாணா இன்னல்களை அனுபவிக்கச் செய்தார்கள். தென்னாபிரிக்கக் கறுப்பின மக்களுக்கு எதிராக நடைமுறைப்படுத்தப்பட்ட மிகக் கொடிய சட்டங்களை எதிர்த்து ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் முன்னெடுத்த கெரில்லாப் போராட்டத்தில் பங்கேற்பதிலும் பெண்கள் பின்நின்றுவிடவில்லை.

1943 இல் இடம்பெற்ற மாநாடு ஒன்றிலேயே ஆபிரிக்கத் தேசியகாங்கிரஸ் கறுப்பினப் பெண்களின் பங்கினை அங்கீகரித்தது. அந்த ஆண்டிலேயே ஆபிரிக்கத் தேசிய காங்கிரசின் பெண்கள் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டது. இனவாத அரசிற்கு எதிராக ஒன்றிணைந்து போராட்டத்தினை மேற்கொள்ள இப்பெண்கள் சங்கத்தின் மிகப் பெரிய பிரிவாக 'தென்னாபிரிக்கப் பெண்களின் சம்மேளனம்' (Federation of South African Women) என்ற அமைப்பு 1954 ஏப்ரல் 17 இல் உருவானது. பெண்கள் தாமே தலைமைதாங்கி எதிர்ப்புப் போராட்டங்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னெடுக்கத் தொடங்கினர். 1955 இல் சுதந்திர சாசனத்தினை மேற்கொள்வதற்காக மக்கள் மாநாட்டை ஒழுங்குபடுத்த ஆபிரிக்கத் தேசிய காங்கிரசானது பெண்கள் சங்கத்தினைக் கேட்டுக்கொண்டது.

1955 இல் 'அப்பதைட்' அரசாங்கம் கடவுச்சீட்டு முறையினைக் கொண்டுவரப் போவதாக மீண்டும் அறிவித்தபோது அதனை எதிர்த்துப் பெரியளவிலான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினை இப்பெண்கள் சங்கம் நடாத்தியது. நாட்டிற்குச் சொந்தமான கறுப்பின மக்கள் தமது நடமாட்டத்தின் போது 'அப்பதைட்' வெள்ளையின அரசாங்கம் வழங்குகின்ற கடவுச்சீட்டினைக் கொண்டுசெல்லவேண்டும் என்ற 'அப்பதைட்' ஆட்சியாளர்களின் சட்ட முறைமைக்கு எதிரான போராட்டத்தைப் பெண்களே முன்னின்று மேற்கொண்டனர். 1956 இல் ஆட்சியிலிருந்த பிரதமரை இப்பெண்கள் சங்கம் நேருக்கு நேர் சந்தித்து மகஜர் ஒன்றினையும் கையளித்தது.

இவ்வாறாகப் போராட்டம் தொடர்ந்தபோது ஆட்சியிலிருந்த 'அப்பதைட்' ஆட்சியாளர்களால் 1960 இல் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் தடைசெய்யப்பட்டது. இதனையடுத்து, பெண்கள் சங்க மற்றும் தென்னாபிரிக்கப் பெண்கள் சம்மேளன நடவடிக்கைகளும் தடை செய்யப்பட்டன. ஆபிரிக்கத் தேசிய காங்கிரசினதும் பெண்கள் அமைப்புக்களினதும் முக்கிய தலைவர்கள் தலைமறைவு வாழ்க்கை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டதுடன் பலர் நாடுகடத்தப்பட்டனர். பலர் சிறையிலும் இடப்பட்டனர். இவர்கள் மீது தடைகளும் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டதால் இவர்களால் மறைவிலிருந்து எதனையும் செவ்வனே மேற்கொள்ள முடியவில்லை. இதனைக் கருத்தில் கொண்ட ஏனைய கறுப்பினப் பெண்கள், புதிய வழிமுறைகளினூடாகவும் மறைமுகக் கட்டமைப்புக்களினூடாகவும் எதிர்ப்புப் போராட்டங்களை மேற்கொள்வதற்கான வழிவகைகளைக் கண்டுகொண்டனர். பிராந்திய ரீதியில் பெண்கள் அமைப்புகள் உருவாகின. நாடுகடத்தப்பட்டு வாழ்ந்த பெண்கள் ஆபிரிக்கத் தேசிய காங்கிரசின் பெண்கள் பிரிவாகத் தம்மை ஒன்றுபடுத்தி சர்வதேச பலத்தினைக் கட்டியெழுப்பினர்.

1990 இல் தென்னாபிரிக்காவில் சிறுபான்மை வெள்ளையினத்தவரின் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்து ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் மீதும் அதன் கட்டமைப்புகள் மீதுமான தடைகளை நீக்கி சிறையிலிருந்த காங்கிரஸ்காரரை விடுவித்தது. நாடுகடத்தப்பட்டவர்களை நாடு திரும்ப அனுமதித்தது. பல வருடங்களாக இடம்பெற்ற போருக்கு அமைதித்தீர்வு காணும் முகமாக சமரசப் பேச்சுக்கள் தொடங்கின.

1991 இல் இடம்பெற்ற ஆபிரிக்கத் தேசிய காங்கிரசின் பெண்கள் சங்க முதலாவது மாநாட்டில் சங்கத் தலைவர் தெரிவுசெய்யப்பட்டார். ஆபிரிக்கத் தேசிய காங்கிரசின் பெண்கள் சங்கமானது கூட்டமைப்பு

ஒன்றை உருவாக்க அனைத்துப் பெண்கள் அமைப்புகளினதும் ஆதரவை நாடியது. 1991 இல் ' தேசியப் பெண்கள் கூட்டமைப்பு' உருவாக்கப்பட்டது. இக்கூட்டமைப்பானது நாடளாவிய ரீதியில் சகலவித வாழ்வியல் முறைமைகளைச் சார்ந்த பெண்களைக் கவனத்தில் கொண்டு முன்னுரிமைப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆய்வுகளை மேற்கொண்டு பெண்கள் சாசனம் வரையும் நடவடிக்கையில் ஈடுபடத்தொடங்கியது.

1992இல் இடம்பெற்ற பெண்கள் சங்கத்தின் இரண்டாவது மாநாட்டில் வின்னி மண்டேலா இதன் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். 1994 இல் அவர்களுடைய சாசனம் பூரணப்படுத்தப்பட்டு அந்த ஆண்டிலேயே பாராளுமன்றில் வைத்து ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த சாசனத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த பெண்களின் அபிலாசைகள் 1994ம் ஆண்டு நாட்டின் புதிய அரசியல் அமைப்பிலும், உரிமைகள் தொடர்பான சட்டங்களிலும் உள்ளடக்கப்பட்டன. 1997 இல் இடம்பெற்ற மூன்றாவது மாநாட்டில் வின்னி மண்டேலாவே மீண்டும் அதன் தலைவராகத்தெரிவு செய்யப்பட்டு இன்றும் அவரே தலைவராக உள்ளார்.

'சகலவிதமான அடக்குமுறைகளில் இருந்தும் பெண்கள் விடுதலையடையாவிட்டால் சுதந்திரத்தை அடையமுடியாது என்பதை ஜனாதிபதி உட்பட அரசாங்கத்தின் எல்லாக் கட்டமைப்புக்களும் உணர்ந்து கொள்வது மிக முக்கியமானதாகும்' என 1994 மே 24 இல் தென்னாபிரிக்காவில் ஜனநாயக முறையில் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது பாராளுமன்றத்தின் ஆரம்ப அமர்வில் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா குறிப்பிட்டார்.

தென்னாபிரிக்காவின் அரசியலமைப்புக்கு அமைய ஜனநாயகத்தைப் பேணுகின்ற ஆறு அரச நிறுவனங்களில் பால் சமத்துவம் தொடர்பான ஆணைக்குழுவும் ஒன்றாகும். பால் சமத்துவத்தினை முன்னெடுப்பதும் மற்றும் பெண்களின் அந்தஸ்தினைப் பாதிக்கக்கூடிய சட்டங்கள் அல்லது சட்ட நகல்கள் தொடர்பில் பாராளுமன்றத்திற்கு அல்லது வேறு சட்டவாக்கத்துறைக்கு பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குவதும் இதன் முக்கிய பணியாகும். இந்த ஆணைக்குழுவானது இளம்பெண்கள் தொடர்பில் இளைஞர் ஆணைக்குழுவுடன் (Youth Commission) நெருக்கமாகச் செயற்படுகின்றது. தேசிய இளைஞர் கொள்கைக்கு ஆலோசனை வழங்கும் பங்கு இதற்கும் உண்டு. இந்த ஆணைக்குழுவானது பால் சமத்துவம், பால் சார்ந்த பாரபட்சங்களை ஒழித்தல் ஆகியவற்றுக்கான சட்டங்களை இயற்றும் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றது. அண்மையில் சமத்துவ நீதிமன்றம் ஒன்றும் தென்னாபிரிக்காவில் கொண்டுவரப்பட்டுள்ளது.

'அப்பதைட்' இற்கு எதிரான போராட்டம் பல்வேறு கரடு முரடான கட்டங்களைத் தாண்டிவந்தது. இந்தப் போராட்டத்தின் வெற்றிக்குத் தென்னாபிரிக்கப் பெண்களுக்கும் நிராகரிக்க முடியாத அளப்பரிய பங்குண்டு. இவர்களும் நீண்டதூரப் பயணங்களைக் கடந்து வந்துள்ளனர். 'அப்பதைட்' டிலிருந்து தென்னாபிரிக்க மக்களை விடுவிக்க வேண்டும் என்ற அபிலாசையினை இந்தப் பெண்களின் பங்களிப்பு வெளிப்படுத்தி நிற்பது மட்டுமல்லாமல், 'அப்பதைட்'டினால் பெண்கள் பட்ட அவலங்கள் துன்பங்கள் தொடர்பான தமது ஆழ்ந்த பிரச்சினைகளைப் போக்குவதற்கு பெண்கள் என்ற ரீதியில் அளப்பெரும் பணியாற்றியுள்ளனர். தமது குடும்பங்களையும் உறவுகளையும் பிரிந்து, தமது மக்களின் விடுதலைக்காக தென்னாபிரிக்காவின் கறுப்பினப் பெண்களும் அர்ப்பணிப்புக்களை மேற்கொண்டனர். இன ஒடுக்குமுறைச் சுரண்டல்களை அடியோடு அழித்து ஆண்களும் பெண்களுமாக சுதந்திரக்காற்றினைச் சுவாசிப்பதற்கே இவர்களும் இந்தப் போராட்டத்தில் பங்கு கொண்டனர்.


பெண்களின் விடுதலையானது சட்டங்களைத் திருத்தியோ அல்லது ஆண்களின் மனப்போக்கை மாற்றியோ அடைந்துவிடலாம் என்று கருதிவிடமுடியாது. மாறாக எல்லோருக்கும் சுதந்திரம் எல்லோருக்கும் நீதி என்ற இலக்கை நோக்கி சமூகத்தினை அடிப்படை மாற்றத்திற்கு உள்ளாக்குவதன் மூலமே பெண்விடுதலைக்கு அடிப்படையான சமூகவிடுதலையை அடைந்துவிடமுடியும். தென்னாபிரிக்காவைப் பொறுத்தமட்டில் கறுப்பினப் பெண்களின் சமூகமாற்றங் காண்பதற்கு 'அப்பதைட்' இற்கு எதிரான போராட்டத்தில் வெற்றிகாணவேண்டும். எனவே இப்போராட்டத்தின் வெற்றியில் தென்னாபிரிக்கப் பெண்களும் உயரிய சாதனைகளை மேற்கொண்டு அதன் போராட்ட வரலாற்றுப் பக்கங்களையும் நிரப்பியுள்ளனர்.

**கலைத்தமிழ்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### கடலம்மா !

கடலம்மா ஓ கடலம்மா
உனைதானம்மா நம்பி வாழ்ந்தோமே
உணவுக்காய் சென்ற என் தந்தை
உதவிக்காய் கூட என் அன்னை
சென்றிட்ட இடம் தெரியாமல்
தவிக்கின்றோம் இங்கு தனியாக

வேர் இல்லா பிள்ளை நாம் இன்று– உன்
சேயாக எமை வளர்ப்பாயோ ?
நோயின்றி நாமும் வளர்ந்தோமே– இன்று
யாருமின்றி வாடி தவிக்கின்றோம்

சாந்தினி வரதராஜன்
ஜேர்மனி

# கடலம்மா

எப்போதும்போல் இரவு மெல்ல மெல்ல தன்னை கரைத்துக்கொண்டிருக்க விடியலுக்கான நேரமும் விரைந்து கொண்டிருந்தது. ஆனால் எம் வாழ்க்கை மட்டும் வழமையான நிலையிலிருந்து விலகியிருந்தது. கிழிந்த பாயைப் போலவே எங்களது மனமும் நார் நாராக கிழிக்கப்பட்டபடி இந்த சிறிய குடிலில் நாங்கள் நித்திரையை தொலைத்து தவித்துக்கொண்டிருக்கிறோம் என்பது காத்திரமான உண்மை..

தம்பிக்கும் தங்கைக்கும் நாளைக்காவது தங்களுக்கு வயிறு நிறைய உணவு கிடைக்குமா? என்ற சிந்தனை. அம்மாவுக்கோ நாளைய பொழுதை எப்படி சாமாளிப்பது ? என்ற தவிப்பு. எனக்கோ தனித்து நின்று போராடும் அம்மாவுக்கு கரம்கொடுக்க அப்பா வருவாரா? இப்படி அவரவர்கள் தங்களுக்கேற்ற கேள்விகளுக்கு பதில்தேடுதலில் மூழ்க..........

நித்திரையும் எங்களை விட்டு எங்கேயோ தொலை தூரம் போய்விட்டது அப்பா மாதிரி. தொலைந்துபோன எங்களது வாழ்க்கை கேள்விக்குறியா? அல்லது ஆச்சரிய குறியா? புரியாத நிலையில் வாழ்க்கையும் கேள்விக் குறிபோல் வளைந்து நின்றது.

அப்பா எங்களுடன் இருந்த பொழுதுகளில் இந்த சின்ன குடிலில் எத்தனை மகிழ்ச்சியாக இருந்தோம். எப்போதும் ஏதாவது ஒரு பாட்டை முணு முணுத்தபடி நண்டுகள் நன்னிய வலைகளை பொத்துவதும் நேரம் கிடைக்கும் பொழுதுகளில் நடுக்கடலின் ஆழத்தில் நடந்த நிகழ்வுகளை என்னுடன் பகிரும் அப்பாவின் அந்த சிரித்த முகமும் சோகம் கக்கும் விழிகளும் எப்போதும் என் நினைவில் அலைபோல் வந்து வந்து மோதுயபடி. விளக்கு தன்னை சுற்றியுள்ளவர்களுக்கு வெளிச்சத்தை கொடுத்துவிட்டு தன் காலடியில் மட்டும் இருளை கவிழ்த்து நிற்பதுபோல்தான் என்ர அப்பாவும் எங்களையெல்லாம் மகிழவைத்துவிட்டு தான்மட்டும் ஏக்கத்தில் ஆழ்ந்து நிற்பார்.

அப்பாவின் அந்த ஏக்கம் சில சமயம் வெளிப்படும். எப்படியாவது சொந்தமாக ஒரு படகு வாங்க வேணும். எவ்வளவு காலம்தான் வாடகைக்கு படகெடுத்து தொழில் நடாத்துவது ? வாடகை கொடுத்த காசில் சொந்தமா இரண்டு தோணியாவது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாங்கியிருக்கலாமென அடிக்கடி கூறிக்கொண்டே இருப்பார். சில நாட்களில் ஆழ்கடல் சென்று மீன்களை அள்ள முடியாமல் வெறுங்கை வீசி வந்தாலும் பணத்தை மட்டும் மனக்கணக்கு பார்க்கும் அல்பிரட் சம்மாட்டியார் மனிதமனத்தை சற்றும் எண்ண மறுப்பார். அந்தப் பொழுதுகளில் அப்பாவின் அடிமனதில் மறைந்திருக்கும் ஆசை அடிக்கடி முளைவிட்டு துளிர்க்கும்.

மகன் என்னுடைய நிலமை இனி எங்கட பரம்பரைக்கே வரக்கூடாது. நீங்கள் எல்லாரும் இரவு முழுவதும் குடும்பத்துடன் இருந்து பகலில உத்தியோகத்துக்கு போகவேணும். அதுதான் என்னுடைய கனவு லட்சியம் எல்லாம் அதற்காக இந்த உலகத்தில என்ன என்ன படிப்புகள் இருக்கோ அத்தனையும் நீ படிக்கவேணும். அப்பா கஸ்ரப்பட்டு உன்னை படிப்பிப்பார். ஆனால் ஒன்று ராசா நீ படிச்சு முடிச்சதும் அப்பாவுக்கு சொந்தமா ஒரு படகு வாங்கி தரவேணும். தருவியே ராசா ? என விழிகளில் நீர் கசிய வினவும் அப்பாவுக்கு விரல்களை விரித்தும் மடித்தும் மூன்று விரல்களை காட்டி அப்பாவுக்கு ஜஞ்சு படகு வாங்கி தருவேன் என தன் மழலை குரலால் கூறும் தம்பியின் தப்பு கணக்கை பார்த்து நாங்கள் எல்லோரும் சிரித்தது நேற்று நடந்ததுபோல் உள்ளது. அந்த சிரிப்பின் சத்தம் இன்னும் காற்றில் எதிரொலித்துக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால் என்ர அப்பா மட்டும்.................... அப்பா எங்கே அப்பா இருக்கிறிங்க ?

நாட்கள் விரைவாக நகர்கின்றன. மனிதர்களும் பறவைகளும் கூடி நின்று குதூகலித்த கடற்கரை இன்று அத்தனை ஒலிகளையும் தொலைத்துவிட்டு மௌனத்தில் மூழ்கி அழுகின்றது. சுடர்விட்டெரியும் ஒளி தன் ஒளியை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து கொண்டு போவதை பார்க்க என் மனதையும் இருள் மெல்ல சூழ்ந்து கொண்டு வருவதுபோல் ஓர் பிரமை தோன்றி என்னை அடிக்கடி பயப்படுத்துகிறது. அப்பாவின் நினைவு என்னை விசனப்படவைக்கின்றது. வெடித்த சிதறி எரியும் எரிமலையில் இந்த கடற்கரை காற்று மெல்ல மெல்ல வீசி இன்னும் சுவாலைவிட்டு எரிய தூண்டுகின்றது. இதை அணைக்க இந்த கடலம்மா தன்னையே தந்தாலும் அணைக்க முடியாது என் அப்பாவை என்னிடம் தந்தால் மட்டுமே.

தன்னிலிருந்து உயிர்தெழுந்த விழுதுகளை தாங்கவந்த ஆணிவேரை எம்மிடமிருந்து பறித்தெடுத்தவர் யாராக இருக்கும்? அடிக்கடி வலம்வரும் ராணுவப்படையை பார்க்கும் பொழுது இவனா இருப்பானோ ? இல்லை இவனை பார்த்தால் முரடனாக தோன்றவில்லை. அப்போ.................யாராக இருக்கும் ? அதோ உயரமா பருமனா நெருப்பை கக்கும் விழிகளுமாய். அவனா இருப்பானோ? இருக்காது என்ர அப்பா திரும்பி வருவார்.

கடலம்மா என்ர அப்பாவை எங்க ஒளிச்சு வைச்சிருக்கிறாய் ? உன்ர மடியிலதானே கடைசியா அப்பாவை பார்த்தனான். அப்பா அடிக்கடி சொல்வார்..............

உனக்கு தெரியுமோ மோள் இவள் கடலம்மாதான் என்ர இரண்டாவது தாய்

அப்பா உங்களுக்கு கடலில போக பயமில்லையே ?

அதற்கும் அப்பா சிரிப்பார். தாயின்ர மடியில படுக்க யாராவது பயப்படுவினமோ மகள் ? அவள் எனக்கு தாய்மட்டுமல்ல என்ர நல்ல தோழியும் கூட. அவள் என்னுடன் கதைப்பாள் சிரிப்பாள், தலாட்டுவாள்.

போங்கப்பா நீங்கள் பொய்சொல்லுறீங்கள். எப்படி கதைப்பா சிரிப்பா ? ஏனக்கு தெரிய கடலம்மா கோபிப்பா சில சமயம் சீறிப்பாய்வா.

ம்..... ஏன் உங்கட அம்மாவும்தான் கோபிப்பா சீறிப்பாய்வா பிறகு அமைதியாப் போய்விடுவா அதுமாதிரித்தான்.

பௌர்ணமி காலங்களில் கடலம்மா மகிழ்ச்சியில் பொங்கிபிரவாகிப்பா. கரைக்கு அலைகளை அனுப்புவதும் அதே வேகத்தில் திருப்பி அழைப்பதுமாக. தம்பியும் தங்கச்சியும் அலைகளுடன் அலைகளாக அளைந்து விளையாடிக் கொண்டிருக்க அம்மா நெத்தலி மீன்பொரிச்சு அறக்குளாவில குளம்புவைச்சு மரவள்ளிக்கிழங்கையும் சோறையும் பிசைந்து உருண்டை உருண்டையாக உருட்டி உனக்கொரு கை உனக்கொருகை என எல்லாருக்கும் தந்திட்டு கடைசி உருண்டையைதான் சாப்பிட்டு தண்ணீரை குடித்துவிட்டு பாயை விரித்து மணலில படுத்திருந்து நிலவையும் அலையும் அலைகளையும் பார்த்து எத்தனை கதை பேசியிருப்போம். எல்லாம் தொலைந்து போச்சு. இனி அந்த காலங்கள் இறந்த காலங்களாக நினைவில்மட்டும் அடிக்கடி மோதி வலியை இன்னும் அதிகப்படுத்தும்.

இப்பவெல்லாம் கடலம்மா எனக்கும் சினேகிதியாகிவிட்டா. நானும் அடிக்கடி பேசுவது என் கவலைகளை கொட்டுவது எல்லாம் அவளுடன்தான். அப்பா காணமல் போன நாளிலிருந்து நாங்கள் பள்ளிக் கூடம் போவதேயில்லை. அம்மா கரைகளுக்கு வரும் மீன்களை வாங்கி சந்தையில கொண்டுபோய் விற்கப்போய்விடுவா.

அம்மாவுக்கு உதவிகள் புரிவதும் தம்பியையும் தங்கச்சியையும் பார்ப்பதுமாக என் பொழுதுகள் கரைந்தாலும் என் மனம்மட்டும் நான் தனிமை படுத்தப்பட்டதை சுட்டிக்காட்டியபடியே இருக்கின்றது. அந்த பொழுதுகளில் என் நம்பிக்கைகளும் ஒவ்வொன்றாய் செத்து உதிர்கின்றன. ஆனாலும் நான் ஜடமாகாமல் இருப்பதற்காக என்கைகளிலிருந்து நழுவிப்போன அந்த இனிய நாட்களை மீட்டியபடியே இருக்கின்றேன்.........

கடலுக்கு போன அப்பாவுக்காய் காத்திருக்கும் பொழுதுகளில் என் எண்ணங்கள் எப்போதும் சிறகடிக்கும் இந்தகடலை, அதன்மேல் அலையும் அலைகளை, அதோ அடிவானத்திலிருந்து மெல்ல மெல்ல எட்டிப்பார்க்கும் பரிதியை, வானமும் கடலும் முத்தமிடும் காட்சியை, அலையின் தொடுகைக்காய் காத்திருக்கும் கரையை, எல்லோரையும் தாங்கும் இந்த தரையை, ஓவென்று இரைந்தபடி முகத்தில் அறையும் காற்றை, இவைகள் எல்லாவற்றையும் விட்டு விலகி இப்போ நான் தூரப்போய்க்கொண்டு இருப்பதுபோல் எனக்குள் ஓர் உணர்வு எழுந்து கொண்டே இருக்கின்றது என்ர அப்பா போனது போல. எத்தனை கனவுகள் கற்பனைகள் என்னுள் வேர்விட்டு படர்ந்தன அத்தனையும் இந்த அலைகள் அள்ளிக்கொண்டு போய்விட்டது.

பாடசாலை வாழ்க்கைகூட எனக்கு துன்பமானதுதான் எனக்கென்று அங்கு எதுவும் இல்லை. என் அசாத்தியமான அறிவைத்தவிர. அதுமட்டும் இந்த கடல்பரப்பைபோல் பரந்து விரிந்து என்னுள் கரைந்து உறைந்து அதனால்தானோ தெரியவில்லை நான் எப்போதும் எல்லோர் கண்களையும் உறுத்தியபடி இருந்தேன். என்னுடன் படிக்கும் சக மாணவிகள் பிலோமினா என்ற அழகான என் பெயரை ஏய் பிலோ மீன் என்றழைத்து என்னை அழவைப்பதும். ஏதோ தீண்ட தகாத ஜந்துவைப்போல் என்னை ஒதுக்கிவைப்பதும் அந்த புறக்கணிப்பில் நான் வீழ்ந்து மூழ்கும் பொழதுகளில் என்னை மூழ்கவிடாமல் தூக்கி நிறுத்தும் என்ர அப்பா கடலோடுபோன பிறகு எல்லாமே என்னைவிட்டு அப்பாவோடு இணைந்து இந்த கடலோடு கலந்து கரைந்து போய்விட்டது. தனக்கு தேவையில்லாதவைகளை கடலம்மா அலையிடம் கொடுத்து கரையில் தள்ளுவதைபோல் என்னை தள்ளி ஒதுக்கியவர்கள் மட்டும் இன்றும் புத்தக பையுடன் என் பாவச்சுமையையும் சேர்த்து முதுகில் சுமந்தபடி வரிசை வரிசையாக பாடசாலைக்கு போய்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் நான் மட்டும்................

இப்பொழுதெல்லாம் என் இதயம் எத்தனை முறை துடிக்கின்றது என்பதைவிட அப்பா அப்பா என அழைப்பதே அதிகமாகி விட்டது. அதனால் என் விழிகளும் எப்போதும் ஓர் நேர் கோட்டை வரைந்தபடியே. பாவம் அப்பா இரவில் தூங்கியதை நான் பார்த்ததே இல்லை. பகலெல்லாம் விழித்து உழைத்து களைத்து பின் இரவினில் ஓய்வாக உறங்குவதற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாறாக தெரியாத எதிர்காலத்திற்காய் நிகழ்கால தேடலின் காலம் என் அப்பாவக்கு அந்த இரவு நேரம்தான். ஆனால் என் அம்மாவுக்கோ அந்த ஒவ்வொரு நிமிட நகர்வும் நரகத் துளிகள். கடலுக்கு போன அப்பாவுக்காய் ஜெபம் பண்ணியபடி எனக்கும் அம்மாவுக்கும் பிராத்தனை நேரம் என்பது ஒவ்வொரு விடியல் மட்டும்

அப்பா அடிக்கடி சொல்வார் முந்தின காலங்களில கடலுக்கபோன மனுசன்மார் திரும்பிவரும் மட்டும் விளக்கேற்றிவைத்து அது அணையாமல் பார்த்துக்கொண்டு பொம்பிளையள் இருப்பினம் என்று கேள்விபட்டு இருக்கிறன்.

காற்றுக்கு விளக்கு அணைஞ்சிட்டா ?

போன மனுசன் போனதுதான்

இது சரியான மூட நம்பிக்கை அப்பா

மூட நம்பிக்கை இல்லையம்மா ஒரு மனக்கட்டுப்பாடு என்று சொல்லலாம். கடலுக்குபோனவரின் நினைவாகவே பொம்பிளையள் இருக்கவேணும் என்டுதான் இப்படி ஒரு ஐதீகத்தை நடைமுறை படுத்தியிருப்பார்கள்.

திரும்பி வந்திட்டா மறந்திடுவினமே?

இதுக்குதான் சொல்லிறன். இவளின்ர படிப்பு இதோட காணும் சும்மா கண்டதையும் படிச்சு கண்ட மாதிரி கதைக்கிறதும். எப்ப பார்த்தாலும் மேகத்தையும் கடலையும் பார்த்து ஏதோ கதைக்கிறாள். அன்டைக்கு கூரையை கொண்டு போறமாதிரி சோளக்காற்று அடிக்குது இவள் அதுக்கு நேர நிண்டுகொண்டு காற்றை பார்த்து சிரிக்கிறாள். இதை ஆரும் கண்டா விசர் என்று சொல்லப்போகினம்

மேரி இந்த மனுசர்களோட கதைக்கிறதைவிட இயற்கையோடு கதைக்கிறது எவ்வளவோ மேல்.

அப்படி சொல்லுங்கப்பா எங்கட அம்மாவுக்கு ஒண்டும் விளங்காது. எங்களை எப்படியெல்லாம் வளர்க்க வேண்டுமென்று கனவுகளை தனக்குள் வளர்த்த எங்கட அப்பா கடைசி நாள் சொன்னது இன்னும் என்ர காதில ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

மகள் "கடலம்மாவிடம் போனால் திரும்பி வருவேன் என்ற நம்பிக்கை என்னை விட்டு கொஞ்சம் கொஞ்சமாக விலகிகொண்டேயிருக்கிது"

"ஏன் அப்பா எங்களை பயப்படுத்திறீங்கள் ?"

"இல்லை மகள் அப்பா எத்தனை புயல்களை எதிர்கொண்டவர். ஆனால் இப்ப மரணம் அடிக்கடி என்ர பாதங்களை தொட்டு தொட்டெல்ல போகிறது. இரண்டு நாளுக்கு முன்னம் அன்ரனி, நேற்று டானியல் இண்டைக்கு அல்லது நாளைக்கு நானாக இருக்கலாம் அல்லது ..............."

அப்பாவின் தீர்க்க தரிசனம் பலித்து விட்டது. அப்பா எங்க அப்பா இருக்கிறீங்கள் ?

இந்த மண்ணில் எத்தனையோ காலடி சுவடுகள் பதிந்தபடி இருக்கிறது. அதில எங்கேயாவது அப்பாவின் பாதச்சுவடுகள் எங்களைவிட்டு விலகி சென்ற அந்த கடைசி சுவடு எதுவாக இருக்கும் ? இல்லை என்ர அப்பா வருவார் மறுபடியும் வருவார் எனக்கு நம்பிக்கையிருக்கு. கடலம்மா அப்பா வருவார்தானே? சொல்லு கடலம்மா நீயும் மௌனமாய் இருந்தா நான் என்ன செய்யிறது ?

எப்படி இருந்த வாழ்க்கை காலையும் மாலையும் திருவிழா கூட்டம்போல் கூட்டம் சேருவதும் வாழ்க்கையை ஏலத்தில் கூவி விற்பதுபோல் தொண்டை நரம்புகள் புடைக்க விற்பனையாளரும் நுகர்வோரும் உறுமி மிருகமாவதும் பின் மறுபடியும் மனிதமுகம் கொண்டு சிரித்து விலகுவதும். இன்னும் சிலர்கிடைத்த லாபத்தில் கற்பனையில் மிதப்பதும் தம்பியும் தங்கச்சியும் கணவாய் ஓட்டையும் அப்பா கொண்டுவரும் அதிசய கற்களையும் சொத்தாக சேர்ப்பதுமாக ஆனால் நான் மட்டும் எப்போதும் ஏகாந்தமாய் என்னை மறந்து இயற்கையுடன் கைகோர்த்து நடந்து திரிவேன்.

இப்போது இந்த அலைகள் கூட என்னோடு மௌனித்து நிற்கிறது. சிலநேரங்களில் மட்டும் என்னை பார்த்து கைகொட்டி சிரிக்கிறது. ஆனால் எனக்கு இந்த அலை , கடல், மனிதர்கள் எல்லோர்மீதும் கோபம் கோபமாக வருகிறது. ஏன் நானும் இவைகளிருந்து விலகிவிட்டேனா? எனக்கு எதுவும் சொல்லத்தெரியவில்லை என் கண்ணீர் துளிகள்மட்டும் கடலம்மாவுடன் அடிக்கடி கலக்கின்றது.

முன்பெல்லாம் இந்த அலையும் காற்றும் எப்போதும் என் கால்களையும் உடலையும் தழுவியபடி இருக்கும். அதனால் என் உள்ளமும் உடலும் சிலிர்த்தபடி இப்போதும் அதே அலை அதே காற்று ஆனால் என் உள்ளம் மட்டும் எதிலுமே ஓட்டாமல் ஈரம் உலர்ந்தபின் மெல்ல மெல்ல உதிரும் மணலைப்போல எல்லாம் என்னைவிட்டு உதிர்ந்து கொண்டே போகின்றது.

திட்டுத் திட்டாய் முகில்கள் ஒட்டியும் ஒட்டாமலும் விலகி விலகி ஓடிக்கொண்டே இருக்கின்றன. எம் ஊர் மக்களைப்போல. கொஞ்சம் கொஞ்சமாக இந்த கிராமம் ஆணிவேரையும் பிடுங்கியபடி மெல்ல நகர மிச்சம் இருப்பவர்களோ எல்லாவற்றையும் தொலைத்துவிட்டு ஏதோ வாழவேண்டும் என்பதற்காக வாழ்கிறார்கள். ஒவ்வொரு குடிலிலும் ஏதாவது ஒரு சம்பவம் நடந்து முடிந்திருக்கும் அல்லது நடந்துவிடுமோ என்ற பயங்கரம் மனிதர்களை நடமாடும் பிணங்களாக்கி விட்டிருந்தது.

ஒவ்வொரு விடியலிலும் உயிரற்ற உடல்களை ஒவ்வொன்று ஒப்பாரி வைத்தபடி அலைகள் காவி வந்து கரையில் தள்ளி விடுகின்றது. அது யாராக இருக்கும் அப்பவாக இருக்குமோ? என்ற பயங்கர கற்பனை எழுவதும் முகம் பார்த்தபின் இவர் எப்படி செத்திருப்பார்? என்ற கேள்விகளும் மூளைக்குள் முளைத்துக் கொண்டே இருக்கும். பகலிலும் இரவிலும் கரைகளில் கோட்டை கீறியபடி ஓடித்திரியும் சின்ன நண்டுகளைக்கூட காணவில்லை. எங்கே போயிருக்கும்? அவைகளும் இடம் பெயர்ந்து விட்டனவோ? அல்லது புத்தரின் புத்திரர்கள் என தங்களை தம்பட்டம் அடிப்பவர்களின் இரைப்பையுனுள் சிறைப்பட்டு விட்டனவோ?

எதையென்று சிந்திப்பது என் எண்ணங்கள் சிதறிக்கொண்டே இருக்கின்றன. தனிமை துன்பம் இவைகளை நாடி நான் ஓட வேண்டிய தேவையே இல்லை. அவைகள் தன்னிச்சையாக என்னை தேடி வருகின்றன. எம் மனிதர்களும் விரித்தபாயை சுருட்ட மறந்து இரவோடு இரவாக ராமேஸ்வரத்தை நோக்கி பயணிக்கின்றார்கள். தங்களுடன் எம்மையும் வருமாறு வற்புறுத்தி அழைத்தார்கள். ஆனால் ஏதோ ஓர் நம்பிக்கையில் நாங்கள் இன்றும் காத்திருக்கின்றோம்.

திரைகடல் ஓடி திரவியம் தேடியவர்களில் சிலர் குடிசைக்குள் முடங்கியபடி இருக்க. படகுகளையும் கட்டுமரங்களையும் அலைகள் வா வாவென இழுக்கின்றன. ஆயிரக்கணக்கான பாதச்சுவடுகளின் மீது பெரிதும் சிறிதுமாக இரும்பு காலடிகள் பழைய சுவடுகளை சிதைத்தபடி தன் சுவடுகளை ஆளமாக பதிக்க முயல்கின்றன. சிலர் பலத்த சிந்தனையின் பின் நீட்சியான பாதையை பதிவு செய்தபடி நகர்கின்றார்கள். பிரிந்தவர்களைபற்றி புனைந்தும் அறிந்தும் பல கதைகளை காற்று உள்வாங்கியபடியே ஓடுகின்றது.

சொந்த மனிதர்களின் நகர்வும், முகமறியாத அன்னியரின் வரவும் அமைதியான இரவை பயங்கரமாக்கிவிட்டிருந்தது. ஒவ்வோர் இரவும் நீண்டு என்னை பயமுறுத்துகிறது. முன்பு என்றால் அன்னியரின் வருகையை ஆட்காட்டி குருவி அறிவித்தபடியே இருக்கும். அதுவும் ஒருநாள் கால்களை மேலே தூக்கியபடி ஆகாயத்தை பார்த்துக்கொண்டு அடிக்கும் அலைகளுக்கு இசைந்தபடி மல்லாந்து கிடந்தது. அதன்பின் நடந்தவைகள் ஏராளம்.

எம்மக்களுக்கு வாழ்விலிருந்த பிடிப்பும் கொஞ்சம் கொஞ்சமாக அவர்களைவிட்டு விலகிகொண்டே போகின்றது. ஆனால் நான்மட்டும் இந்த மண்ணில் எங்கேயாவது என் அப்பாவின் காலடி சுவடுகள் அழியாமல் இருக்கும் என்ற நம்பிக்கையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதுவாக இருக்குமோ ? இல்லை அதுவாக இருக்குமோ ? என தேடியபடி என் கால்கள் கரையில் காத்துக்கிடந்தாலும் என் மனம் மட்டும் எப்போதும் கடலின் உள்ளேதான் கரைந்து கொண்டிருக்கிறது. ஆனால் கேள்விகள் மட்டும் என்னுள் வேர்விட்டு பரந்து கொண்டே இருக்கின்றது. இதற்கான பதில் கடலம்மாவிடம்தான். ஏன் இந்த சந்திரனிடம் கூட ஆனால் தானும் மௌனித்து நட்சத்திர குழந்தைகளையும் மௌனமாக்கியபடி. தனித்து வேவு பார்த்துக் கொண்டே வலம் வருகின்றது.

காலங்கள் பூமியின் அசைவுக்கு இசைவாக தம்மை மாற்றியபடியே ஓடுகின்றது. என் மனம் மட்டும் வறண்ட பாலை வனம்போல் மழை வருமா? இல்லை இன்னும் வறண்டு வெடித்து சிதறி போய் விடுமா? என்ற கேள்விகளை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி அடுக்கி அவை ஒவ்வொன்றாய் உடைந்து விழ விழ மீண்டும் மீண்டும் முயற்சித்தபடி விடியாத விடியலில் அப்பாவின் வரவுக்காய் காரையோரத்தில் இன்றும் காத்திருக்கின்றேன். என்றும் காத்திருப்பேன்.

*கடலம்மா !*

*கடலம்மா ஓ கடலம்மா*
*உனைதானம்மா நம்பி வாழ்ந்தோமே*
*உணவுக்காய் சென்ற என் தந்தை*
*உதவிக்காய் கூட என் அன்னை*
*சென்றிட்ட இடம் தெரியாமல்*
*தவிக்கின்றோம் இங்கு தனியாக*
*வேர் இல்லா பிள்ளை நாம் இன்று- உன்*
*சேயாக எமை வளர்ப்பாயோ ?*
*நோயின்றி நாமும் வளர்ந்தோமே- இன்று*
*யாருமின்றி வாடி தவிக்கின்றோம்.*

*தென்றலாய் எமை தழுவினாயே- எம்*
*தேவையெல்லாம் அறிந்து புரிந்தாயே- என்*
*உள்ளத்தின் உணர்வோடு கலந்தாயே*
*எம் உறவை எங்கு கொண்டு சென்றாய் நீ ?*

*பாயெல்லாம் விரித்து படுத்தோமே*
*இப்பரப்பெல்லாம் எமதென்று நினைத்தோமே*
*காயும் நிலவில் நாம் குளித்தோமே- அந்த*
*நாளும் வருமோ என அழுகின்றேன்.*

*வாய் தந்த ஆண்டவனை கேட்கின்றேன்*
*வாழ்வெல்லாம் வரம் தந்த உனை வேண்டுகின்றேன்*
*என் தந்தை எங்கேயென தேடுகின்றேன்*
*என் தனிமையை தவிர்க்க வேண்டுமென அழுகின்றேன்.*

*விடியாத இரவென்று ஒன்றுமில்லை*
*விடியும் எமக்கென்று ஏங்குகின்றேன்*
*முடியாத காரியம் ஏதும் இல்லை*
*என் வடியாத சோகத்தை துடைப்பாயோ ?*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்று எமது நாட்டில் பனை, தென்னை வளமானது தன்னிறைவான பொருளாதார அபிவிருத்தியை நோக்கிய பாதையில் முன்னெடுத்துச் செல்கிறது. இந்த வகையில் பனை, தென்னை அபிவிருத்திப் பணிகளில் நாட்டில் உள்ள உயர்கல்வி நிறுவனங்கள் அனைத்தும் பலதிட்டங்களை முன்னெடுக்கவுள்ளன. இதற்கு அமைவாக வடக்கு, கிழக்கு, தால (பனை, தென்னை) மூலவள அபிவிருத்தி நிறுவனம் ஒன்று அண்மையில் வள அறிஞர் களாலும், நாட்டுப் பற்றாளர்களாலும் கிளிநொச்சியில் உருவாக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் இதனுடைய அவசியத்தையும், பயனையும் நோக்குமிடத்து இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் தால வளம் முக்கிய இடம் வகிக்கின்றது. பல்லாயிரம் ஆண்டுகளாக தமிழ் மக்களின் போசாக்கு, உணவு, உறையுள், பாவனைப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள் ஆகியவற்றை வழங்கும் கருவூலமாக இவ்வளம் எமது பயன்பாட்டிற்கு பெரிதும் உதவி வருகின்றது. அன்னியர் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட புதிய மாற்றங்கள் காரணமாக தாலவளப் பயன்பாட்டில் தாக்கங்கள் ஏற்பட்டாலும், தொடர்ந்தும் இப்பகுதியில் பெரும்பான்மை மக்கள் தமது வாழ்வாதாரமாக தாலவளத்தினையே நம்பியுள்ளார் கள். ஆயினும் கடந்தகால போர்ச் சூழல்காரணமாக பெருமளவு தாவரங்கள் அழிக்கப்பட்டு சூனியப் பிரதேசமாக மாறி இருப்பது அனைவரும் அறிந்த விடயம். இந்நிலைமையால் அழிக் கப்பட்ட எமது பிரதேசம் மீளவும் வளங்களைக் கட்டியெழுப்பும் வகையில் அதனுடைய பயன்பாட்டிற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. விஞ்ஞான ரீதியான புதிய தொழில் நுட்பங்களை உள்வாங்கவும் புதிய தொழில் வளங்களைப் பெருக்கவும், தற்கால தேவைகளுக்கு உகந்த வகையில் ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்காகவும் தற்போது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. போர் அனர்த்தங்களால் பாதிப்பு அடைந்தவர்களுக்கு புனர்வாழ்வு அழிப்பதற்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் ஏற்ற வகையில் சகல வளங்களையும் ஒன்றிணைக்கவும் நடை முறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

பொதுத் திட்டமிடலின் கீழ் சகல நிறுவனங்களையும் ஒருங்கமைத்து நெறிப்படுத்துவதற்குரிய தலைமை நிறுவனமாக வடக்கு கிழக்கு தால (பனை, தென்னை) மூல வள அபிவிருத்தி நிறு வனத்தினைக் கட்டியெழுப்புவது இன்றைய அத்தியாவசியமாகின்றது. அந்த வகையில் தால மூலவள பொருளாதார அபிவிருத்தியின் நோக்கங்கள் எவை எனப்பார்ப்போம்.

# தன்னிறைவான பொருளாதார அபிவிருத்தியில் பனை தென்னை உற்பத்தியின் இன்றைய பங்களிப்பு






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- தாலமூலவள அபிவிருத்தி சார்ந்த தேசிய திட்டங்களை தீட்டுதலும் அவற்றை வழிப்படுத்தலும்.
- தாலமூலவள தொழில் வல்லுனர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான திட்டங்களைத் தீட்டுதலும் நடைமுறைப்படுத்த உதவுதலும்.
- தால வள அபிவிருத்தி சார்ந்த மாதிரி உற்பத்திகளை மேற்கொள்வதற்கான வழிகாட்டல்களை வழங்கி உதவுதல்.
- தாலமூலவளப் பயன்பாட்டு நிறுவனங்களின் நிதி வளங்களைப் பெருக்குவதற்கான வழிகாட்டல்களை வழங்குவதுடன், ஒருங்கமைத்து செயற்படுத்துவதற்கு உதவுதல்.
- தாலமூலவளங்களின் நடுகை மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துவதுடன், பொருத்தமான ஆய்வுகளையும் மேற்கொண்டு உதவுதல்.
- தாலமூலவள உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதித்தரத்தில் உற்பத்தி செய்வதற்கான வழிகாட்டல்களை வழங்குவதுடன் சந்தைப்படுத்தல் நடவடிக்கையினை விரிவுபடுத்தி உதவுதல்.
- நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தாலவளங்களை தமது வாழ்வாதாரமாகக் கொண்ட சகல மக்களுக்கும் வாழ்வளித்தல்.
- தாலவள உற்பத்திகளை பதப்படுத்தலும், கைத் தொழிலுக்கான விஞ்ஞான உதவிகளை வழங்குவதற்கான தொழிநுட்ப பிரிவினைத் தாபித்து வழிகாட்டல், தரநிர்ணய சான்றிதழ் வழங்குதல், இவைபோன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தி தாலவளப் பயன்பாட்டில் நன்மையினைப் பெற்றுக்கொள்ளலாம்.



## தன் நிறைவான பொருளாதாரத்தின் முக்கிய பணிகள்:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட தாலவள அபிவிருத்தி தொடர்பான சான்றிதழ் டிப்ளோமா கற்கை நெறி போன்ற உயர் கல்விப் போதனைகளை நடைமுறைப்படுத்தல், யாழ்பல்கலைக்கழக பயிர் உற்பத்தி, தொழில் அதிகரிப்பு, உணவுப் போசாக்கு சம்மந்தமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல், பாடசாலை கல்வித்திட்ட பாடவிதானத்தில் தாலவியல் பாடத்திட்டத்தினையும் இணைப்பதற்கான முன்முயற்சிகளை மேற்கொள்ளல், வளம் சார்ந்த உசாத் துணைநூல்களையும், கட்டுரைகளையும், ஆய்வுகளையும் வெளியீடு செய்தல். படைப்பாளிகளை உருவாக்குதல், மக்கள் பங்களிப்புடன் கூடிய குடிசைக் கைத்தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துவதுடன், புராதன முறையிலுள்ள குறைபாடுகளை நீக்கி நவீன தொழில் நுட்பமுறைகளை அறிமுகப் படுத்தல், விஸ்தரிப்பு, சேவைக்களம், பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

விஞ்ஞான ஆராய்ச்சியின் விளைவுகளை செய்முறைக்கு உகந்ததாக்குதல், தாலவள அபிவிருத்திக்கான தகவல்களைச் சேகரித்தல், ஆவணப்படுத்துதல், மாகாண தேசிய சர்வதேச மட்டத்திலான கற்கை வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் வகையிலான வழிகாட்டல்களை வழங்குதல், சுயநிதி உதவித் திட்டங்களை கண்டறிதலும், நடைமுறைப் படுத்த வழிகாட்டுதலும், அந்நியச் செலாவணியை ஈட்டக்கூடியளவு உற்பத்திப் பொருட்களை அபிவிருத்தி செய்தலும், சந்தைப்படுத்தலும், சுயமுகாமைத்துவத்தையும் ஒன்றிணைத்து அபிவிருத்தி முறைகளையும் மேற்கொள்ளல், பனை, தென்னை வளரக்கூடிய புதிய இடங்களைக் கண்டறிந்து புதிய தோட்டங்களை உருவாக்குதல், சமுதாயத்தில் பின்தங்கியுள்ள இடங்களைத் தெரிவுசெய்து புனர்வாழ்வு அளித்தல், பனை, தென்னை வளர்ப்போரை ஊக்கப்படுத்துதல், வள உற்பத்தியில் ஈடுபட்டுள்ள வல்லுனர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான திட்டங்களைத் திரட்டுதல்.

வடகிழக்கு மாகாணத்தில் 90 வீதம் பனைமரங்கள் காணப்படுவதால் இவ்வளங்களின் பயனை முழுமை பெறச்செய்யவேண்டும். இந் நோக்கிலேயே விரைவில் பனை, தென்னை வளதொழில்நுட்பச் சான்றிதழ் பயிற்சியை யாழ் பல்கலைக்கழக விவசாய பீடம் ஆரம்பிக்கப்படவுள்ளதெனச் சுட்டிக்காட்டியதுடன், விரைவில் இத்துறையின் மேம்பாட்டை விருத்தி செய்ய தேவையான வேளைகளில் தெற்கிலும், வெளிநாடுகளிலும் இருந்து தேவையான தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும். முதலில் இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி தொழில்நுட்ப அறிவையும் வளர்த்து தரமான உற்பத்திகள் மேற்கொள்ளப் படுமானால் அதற்கான சந்தை வாய்ப்புகளை உள்ளூரிலும், வெளியூரிலும் நிறையவே பெற்றுக் கொள்ள முடியும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சோவியத் இராணுவப் புலனாய்வு

## உளவுப்படை உறுப்பினரின் கல்வி, பயிற்சி மற்றும் உரிமைகள்



குறூ அமைப்பு உளவுப்படையினரின் கல்வி மற்றும் பயிற்சியில் எடுக்கும் கவனத்திற்கு அத்தாட்சியாக பயிற்சி நிலையங்களின் சுருக்கமான பட்டியலை இங்கு தருகிறோம். அதியுயர் இராணுவத் தலைமை பீடத்தின் உளவுத்துறைக்கான பயிற்சிக் கல்லூரி, மறைந்து வாழும் உளவுப் படையினரின் பல்வேறு பயிற்சி நிலையங்கள், இராணுவ - இராசதந்திரப் பயிலகம், வேவு பார்ப்போருக்கான புருன்சே இராணுவ பயிலகம், வேவு பார்ப்போருக்கான கடற்படை பயிலகம், இராணுவ சமிக்ஞைக் கல்லூரி, அந்நிய மொழிக்கல்லூரி, பொறியியல் - தொலைத்தொடர்பு பயில்நெறிக் கல்லூரி, கடற்படையின் வானொலி இலத்திரனியல் பயிலகநெறிக் கல்லூரி, ஸ்பெற்ஸ்நாஸ் படையினரின் பயிற்சிக் கல்லூரி, இராணுவக் கட்டளை அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி, வான்படை மற்றும் உயர் தொழில்நுட்பப் பொறியியல் கல்லூரி.

வருடாவருடம் மேற்கூறிய கல்வி - பயிற்சி நிலையங்கள், இதையொத்த நிலையங்கள் என்பனவற்றில் இருந்து சிறப்புச் சித்திபெற்று வெளியேறும் வீரர்களின் எண்ணிக்கை பல ஆயிரங்களைத் தாண்டும் வழங்கப்படும் கற்கை நெறிகள் பல்கலைக்கழகத் தராதரத்திற்கும் கூடியதாக இருக்கும். குறிப்பிடத்தக்க இலக்குடன் கல்வி புகட்டப்படும் அதியுயர் இராணுவக் கல்லூரிகளில் கற்கும் வாய்ப்பைப் பெறும் மாணவர்கள் நான்கு தொடக்கம் ஐந்து வரையான வருடங்களை அங்கு செலவிடுகின்றனர். நுழைவோருக்கான ஆகக்குறைந்த வயது 17. ஆகக்கூடியது 24, நுழைவுத் தேர்வில் சித்தியடைந்தோர் மாத்திரம் அனுமதிக்கப்படுகின்றனர். மருத்துவப் பரிசோதனைகள் கட்டாயமாக நடத்தப்படுகின்றன. இதில் தோல்வி கண்டோருக்கு அனுமதி மறுக்கப்படுகின்றது.

இதன்மேல் குறிப்பிடப்பட்ட அதியுயர் இராணுவத் தலைமை பீடத்தின் உளவுத்துறைக்கான பயிற்சி கல்லூரியில் சித்தியடைவோர் உடனடியாக இராணுவ லெப்ரினன்ற் நிலைக்கு உயர்த்தப்படுகின்றனர். சித்தியடைந்ததற்கான அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படுகின்றது. பொறியியல் கல்லூரிகளில் சித்தியடைவோர் லெப்ரினன்ற் பொறியியலாளர் நிலைக்கு உயர்த்தப்படுகின்றனர். இராணுவ சேவையில் பொறியலாளர்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கின்றது. மூன்று வருடச்சேவை முடிந்தபின் ஒரு பொறியியலாளர் உயர் தொழில் நுட்பப் பயிலகத்திற்குள் நுழையும் அடிப்படைத் தகுதியைப் பெறுகிறார். நுழைவு எளிதன்று நுழையத் தவறுவோர் அதியுயர் பதவிகளை அடையமுடியாது. பயிலகத்திற்குள் நுழையாதவர்கள் பல வருடங்கள் சேவையாற்றியபின் லெப்ரினன்ற்-கேணல்-பதவியை அடையலாம். அதற்கிடையில் பயிலகத்தில் நுழைவு பெற்று வெளியேறியோர் அதியுயர் இராணுவப் பதவிகளைப் பெற்றுவிடுவார்கள். எனவே ஒவ்வொரு பொறியியலாளரின் கனவு பயிலகத்தைச் சுற்றித்தான் இருக்கும்.

மேற்கூறிய பொறியியல் பயிலகத்தைவிட இன்னும் பதினைந்து வரையிலான உயர்தர இராணுவப் பயிலகங்கள் சோவியத் ஒன்றியத்தில் காணப்படுகின்றன. நுழைவுக்கான அடிப்படைகள் பொறியியல் பயிலகத்தை ஒத்ததாக இருக்கின்றன. இப்பயிலகங்கள் யாவற்றிலும் வழங்கப்படும் கற்கைநெறி கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருக்கின்றன. உளவுத் துறையினருக்கான பயிலகத்தில் சற்று வித்தியாசமான பாடங்களும் கற்பித்தல் முறைகளும் கைக்கொள்ளப்படுகின்றன.

நுழைவுக்கான தேர்வோ போட்டியோ இல்லாத ஒரு அதியுயர் இராணுவப் பயிலகம் பற்றிப் பார்ப்போம். பொது தலைமை அதிகாரிகள் பயிலகம் (General star academy) என்ற பெயரிடப்பட்ட இந்த விசேட கல்லூரியின் மேற்பார்வை கட்சியின் கைகளில் இருக்கின்றது. இக்கல்லூரியில் நுழைவதற்கு விண்ணப்பம் செய்யவேண்டிய அவசியம் இல்லை. இராணுவத்தில் கேணல், ஜெனரல் தரத்தில் இருக்கும் அதிகாரிகள் இப்பயிலகத்தில் கற்கும் தகுதி உள்ளவர்களாகக் கணிப்பிடப்படுகின்றனர். சிறந்த சேவை, திறமையான செயற்பாடுகள் மற்றும் கட்சி உயர்பீடத்தின் நன்மதிப்பு என்பன நுழைவுக்கு வழிகாட்டுகின்றன.

சோவியத் ஒன்றிய இராணுவத் தலைமைபீட அங்கத்துவத்திற்கு ஒரு அரிய நுழைவுச்சீட்டாக பொதுதலைமை அதிகாரிகள் பயிலகத்தில் பெறும் கல்வியும் பயிற்சியும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைகின்றன. அதியுயர் பதவிவகிக்கும் தலைமை அதிகாரிகள் இப்பயிலகத்தில் தமது படிப்பை முடித்தவர்களாகக் காணப்படுகின்றனர். உளவுத்துறை அதிகாரிகளுக்கும் இப்பயிலகத்தின் வாயில் திறந்திருக்கின்றது. முதலாவதாக இவர்கள் தமது திறமையை நிரூபிக்கவேண்டும். அதாவது மிகப் பெரியதொரு அனுகூலத்தை சோவியத் ஒன்றியத்திற்குப் பெற்றுத் தந்திருக்கவேண்டும். அடுத்ததாக கட்சியின் அருட்பார்வை இவர்கள்மீது விழவேண்டும். இப்பயிலகத்தில் படித்துப் பட்டம் பெற்ற உளவுத்துறை அதிகாரிகள் வெளிநாடுகளுக்கு சோவியத் ஒன்றியத்தின் தூதராக நியமனம் பெறும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.

அந்நிய மொழிப் பயிற்சிக்கான இராணுவப் பயிலக மாணவர்கள் தேர்வும் பெருமளவில் வித்தியாசமான முறையில் நடைபெறுகின்றது. இராணுவத் தலைவர்களின் பிள்ளைகள்தான் பெரும்பாலும் அந்நிய மொழிப் பயிலகத்திற்கு தெரிவு செய்யப்படுகின்றனர். இப்பயிலக நுழைவு, பெருவாழ்வின் ஆரம்பமாக அமைகின்றது. வர்க்க பேதங்களை ஒழித்துக் கட்டிய கொமியூனிச சமுதாயத்தில் இப்படியானதொரு புதிய ரக வர்க்கபேதம் கட்டியெழுப்பப்படுகின்றது. அந்நிய மொழிப் பயிலகத்தில் வழங்கப்படும் தொடர்ச்சியான மொழிக் கல்வி ஐந்து தொடக்கம் ஏழு வருடம்வரை எடுக்கின்றது. வெளியேறும் மாணவர்களுக்கு இராணுவ லெப்ரினன்ற் பதவி வழங்கப்படுகின்றது. ஆண், பெண் இருபாலாரும் மொழிக் கல்விப் பயிலகத்தில் பட்டம் பெறுகின்றனர். பெண்கள் பெரும்பாலும் ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளைக் கற்கின்றனர். பெண்கள் பெருமளவில் வர்த்தகத்துறையில் அதிகாரிகளாக நியமனம் பெறுகின்றனர்.

உளவுத்துறை அதிகாரிகளுக்கான உயர்நிலைப் பயிலகத்தில் சித்தி பெறும் அதிகாரிகளுக்கு இளமானிப் பட்டத்திற்குச் சமமான டிப்புளோமா பட்டம் வழங்கப்படுகின்றது. இராணுவ றெஜிமென்றில் காணப்படும் வேவு அணிகள் ஒன்றிற்குத் தலைவராக சித்தி பெறுவோர் நியமிக்கப்படுகின்றனர். பதவி உயர்வு பெறும்போது அவர்கள் பிளட்டூன் வேவுப்படைக் கொமான்டராக நியமிக்கப்படுகின்றனர். இக்கட்டத்தைத் தாண்டும்போது கொம்பனி வேவுப்படைக் கொமான்டராக வரும் வாய்ப்பைப் பெறுகின்றனர். நல்ல திறமைசாலிகள் ஒரு றெஜிமென்றில் உள்ள சகல வேவு அணிகளுக்கும் கொமான்டராகப் பதவி உயர்வு பெறுகின்றனர். உயரதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்ற அதிர்ஷ்டசாலிகள் பற்றாலியன் வேவுப் படைக் கொமான்டராக இடம்பிடிக்கின்றனர்.

படிப்படியான பதவி உயர்வுகளுக்குச் சாதனைத் திறமையோடு மேலதிக கல்வித் திறமையும் தேவைப்படுகின்றது. பதவி உயர்வுகளுக்குப் பொருத்தமானவர்களாக புருன்சே இராணுவப் பயிலகத்தில் (Frunze military academy) வேவு நெறிப்பிரிவில் (Reconaissance faculty) படித்துப் பட்டம் பெற்றோர் கருதப்படுகின்றனர். பதவி உயர்வுக்கும் படிப்புக்கும் நெருக்கமான தொடர்பு உண்டு புருன்சே பயிலகத்தில் ஸ்பெற்ஸ்நஸ் படையினரும் வேவு நெறிப்படிப்பிற்காக அனுமதி பெறுகின்றனர். புருன்சேயில் எதிரி நாடுகளை நெடுந்தூரம் ஊடுருவும் பயிற்சி வழங்கப்படுகின்றது. வேவு நெறிப் படிப்பில் இது முக்கிய இடம்பிடிக்கின்றது. குறூ வேவுப் பிரிவினரும் ஸ்பெற்ஸ் நாஸ் படையினரும் ஒரே வகுப்பறையில்/பயிற்சிக் களத்தில் வேவுக் கல்வியைப் பயில்கின்றனர். பயிலகத்தைவிட்டு வெளியேறியதும் தத்தம் அணிகளுக்குச் செல்கின்றனர்.

அந்நிய மொழிப் பயிலகத்தைப் பற்றிய மேலதிக விவரங்களை இங்கு தருகிறோம். வெளி உலகத் தொடர்புக்கு அந்நிய மொழி அறிவு அவசியம் என்பது தெரிந்தவிடயமே. தூதரகங்களில் இராணுவ ஆலோசகர்களாகப் பதவி வகிப்போர் தாம் நியமனம் பெறும் நாட்டின் மொழியைக் கட்டாயமாக அறிந்திருத்தல் வேண்டும். அத்தோடு முகவர் ஆட்சேர்ப்புக்கும் மொழியறிவு அவசியமானதொன்று. இராணுவம் பற்றிய எல்லாவகை அறிவுக்கும் அந்நிய மொழித்தேர்ச்சி கைகொடுக்கின்றது. மேலும் உளவுத்துறையில் அந்நியமொழியின் துணை பற்றிச் சொல்லவேண்டியதில்லை. கே. ஜி.பி, குறூ இரட்டையர்கள் இதை நன்கு அறிவர். அந்நிய மொழிப் பயிலகத்தில் சித்தியடையும் முதற்தர மாணவர்களை இரு அமைப்புக்களும் தம்முடன் இணைத்துக்கொள்கின்றன. இதில் போட்டி கிடையாது, சமபங்காகப் பிரித்து மாணவர் தொகையை இரண்டாக்கி தம்முடன் இணைக்கின்றனர்.

அந்நிய மொழிப் பயிலகம், சோவியத் ஒன்றியத்தின் இராணுவத் தலைமை பீடத்தில் இடம்பிடிக்கச் செல்லும் பாதையில் முக்கிய மைல்கல்லாக அமைகின்றது. உயரதிகாரிகளின் பிள்ளைகளாகப் பயிலக மாணவர்கள் ஏற்கனவே இடம்பெறுவதால் தலைமைபீடம் செல்லும் பாதை இலகுவானதாகவும் கடின அம்சங்கள் நீக்கப்பட்டதாகவும் அமைகின்றது. கே.ஜீ.பி மற்றும் குறூ அமைப்பின் தலைமைத்துவத்திற்கும் அந்நிய மொழிப்பயிலகம் ஒப்பற்ற வழிகாட்டியாக அமைகின்றது.

அந்நிய மொழிப் பயிலகத்தில் நிலவும் வர்க்கபேதத்தை இங்கு கவனிப்போம். கேணல் தர அதிகாரிகள், அதற்கும் உயர்ந்த இராணுவ அதிகாரிகள் ஆகியோரின் பிள்ளைகளுக்கு புகுமுகத் தேர்வு கிடையாது. இவர்கள் விண்ணப்பம் செய்கிறார்கள், தந்தை சிபாரிசு செய்கிறார். இடம்கிடைக்கிறது. மேஜர்தர அதிகாரிகள், அதற்கும் குறைந்த அதிகாரிகள் ஆகியோரின் பிள்ளைகள் புகுமுகத்தேர்வில் மிகச் சிறந்த சித்தி எய்தவேண்டும். அது மட்டுமா? உயரதிகாரிகளின் பிள்ளைகளுக்கு தனிப்பட்ட கவனிப்பு கொடுக்கப்படுகின்றது. அவர்களுடைய வீட்டுக்குச் சென்று பாடம் சொல்லிக் கொடுக்கும்படி பயிலக ஆசிரியர்கள் பணிக்கப்படுகின்றனர். பயிலக இறுதித் தேர்வு உட்பட எல்லாவகைத் தேர்வுகளையும் தத்தம் வீடுகளில் இருந்து எழுதுவதற்கு இந்த மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். மேற்பார்வை செய்வதற்கு ஒருவரும் நியமிக்கப்படுவதில்லை.

பயிலக மாணவர்களில் பத்துவீதமானோர் அதிகார வர்க்கத்தைச் சேராத குடும்பங்களில் இருந்து திரட்டப்படுகின்றனர். இக்குடும்பங்களின் அந்தரங்க விடயங்களை குறூ அமைப்பு மிகவும் இரகசியமாக விசாரணை செய்கின்றது குறூ திரட்டிய தரவுகளின் அடிப்படையில் பயிலக அனுமதி கிடைக்கின்றது. ஆனால் புகுமுகத் தேர்வில் இவர்கள் சித்தியடைய வேண்டும். இந்த பத்துவீதத்தினரில் திறமையாகச் சித்தியடைவோரை குறூ அமைப்பு தன்னோடு இணைத்துக் கொள்கின்றது. கே.ஜி.பி. அப்படியல்ல, பத்து வீதத்தினரில் ஒருவரையாவது அது தன்னோடு சேர்த்துக்கொள்வதில்லை.

மேற்கு நாடுகளில் இராணுவ உயரதிகாரிகள் பயிற்சிக்கல்லூரிகள் காணப்படுகின்றன. சில நாடுகள் தமது அதிகாரிகளை பயிற்சிக்காக வெளிநாடுகளுக்கும் அனுப்புகின்றன. சோவியத் ஒன்றியத்தின் உயரதிகாரிகள் பயிற்சிக்கல்லூரிக்கு வெளிப்படையான பெயர் முகவரி போன்ற விடயங்கள் கிடையாது. அது ‘இராணுவப் பிரிவு எண் 35576 ’ (Military unit no 35576) என்று குறிப்பிடப்படுகின்றது. இதனுடைய மிகவும் இரகசியமாகப் பேணப்படும் பெயர் ‘சோவியத் ஒன்றிய இராணுவ - இராசதந்திர பயிலகம்’ (The military - diplomatic acadaemy of the sovit army) இப்பயிலகத்தின் குறிக்கோள் இரண்டு- இராணுவத் தலைமைப்பீடத்தினரின் பயிற்சி மற்றும் உலக நாடுகளின் அதியுயர் மட்டத்தில் இருப்போரை சோவியத் ஒன்றியத்தின் முகவர்களாக இணைப்பதற்குரிய தொழில்சார் பயிற்சி.

இந்த அமைப்பின் இருப்பு பற்றிய செய்திகள் வெளிவராமல் மிகவும் இரகசியமாகப் பாதுகாக்கப்படுகின்றன. நாட்டின் தலைமைப் பதவியில் இருப்பவர்களில் ஒரு சிலருக்கே இதுபற்றித் தெரியும். இந்தப் பயிலகம் பற்றிய செய்தியை வெளியில் கசிய விடுவோருக்கு பத்துவருடச் சிறைத் தண்டனை விதிக்கப்படும். இந்த அமைப்புடன் தொடர்புடைய யாவரும் மிகவும் எச்சிரிக்கையாக இருக்கும்படி கட்டளை இடப்பட்டுள்ளனர்.

மேற்கூறிய இராணுவ-இராசதந்திர பயிலகம் குறூவின் கிளை அமைப்பாகும். பயிலகத்தின் முழுப்பொறுப்பையும் குறூ ஏற்றுள்ளது. பயிற்சி பெறுவதற்குத் தகுதி உடையோர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சோவியத் ஒன்றிய இராணுவத்தின் அதிகார வர்க்கத்தில் இருந்து குறூ அமைப்பினால் தெரிவு செய்யப்படுகின்றனர். பயிலகத்தின் அதிபர் கேணல், ஜெனரல் தரத்தினராவர். இவர் அனேகமாக குறூ அமைப்பின் துணைத் தலைவர்களில் ஒருவராகவும் ஒப்பீட்டில் மிகவும் சக்தி வாய்ந்தவராகவும் காணப்படுகின்றார். பயிலக அதிபரின் கீழ் நான்கு லெப். ஜெனரல் தர அதிகாரிகள் பணியாற்றுகின்றனர்.

பயிலக கற்கைநெறி அனைத்துலக அரசியல், நிர்வாகக் கல்வி, பொதுக்கல்வி, மற்றும் மனித வளம் என்ற தலைப்புக்களின் கீழ் வகுக்கப்பட்டுள்ளது. பயிலக முதல்வரின் பொறுப்பில் இந்த நால்வகை கற்கை நெறிகளும் புகட்டப்படுகின்றன. நான்கு நெறிகளும் மேற்கூறிய நான்கு லெப். ஜெனரல்களின் வழிகாட்டலில் மாணவர்களுக்குப் போதிக்கப்படுகின்றன. ஒவ்வொரு லெப். ஜெனரலும் ஒவ்வோர் கற்கை நெறியின் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றுகிறார். இருப்பினும் அதிபரே மொத்தப் பொறுப்பைச் சுமக்கிறார்.

இனி கற்கை நெறிப் பங்கீடு பற்றி விரிவாகக் கவனிப்போம். பயிலகத்திற்கும், நான்கு பாடப் பிரிவுகளுக்கும், பயிலகப் பொறுப்பிலுள்ள நூலகம்/ஆவணக்காப்பகம் என்பனவற்றிற்கும் பயிலக அதிபர் முழுப்பொறுப்பேற்கிறார். இவர் உத்தரவுப்படி நான்கு லெப் ஜெனரல்களும் செயற்படுகின்றனர். நிதி, களஞ்சியம், போக்குவரத்து என்று பெயரிடப்பட்ட நான்கு திணைக்களங்கள் அதிபரின் மேற்பார்வையில் இயங்குகின்றன. ஆவணக் காப்பகத்தில் வைப்பிலிடப்பட்ட இரகசியக் கோப்புக்களுக்கும் வேறு ஆவணங்களின் பாதுகாப்புக்கும் அதிபர்தான் பொறுப்பாகச் செயற்படுகிறார்.

முதற்கண் மனித வளயியல் கற்கைநெறி பற்றிப் பார்ப்போம். கிட்டத்தட்ட பத்து வரையிலான பகுதிகளாக இப்பிரிவு வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதிக்கும் பொறுப்பதிகாரியாக ஒரு மேஜர் ஜெனரல் தர இராணுவ அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். உளவுத்துறையின் இரு முக்கிய அங்கங்களான கேந்திர மற்றும் நடவடிக்கை தகவல் சேகரிப்பு என்பன கற்கை நெறியின் முதல் இரண்டு பகுதிகளாக இடம்பெறுகின்றன. ஸ்பெற்ஸ்நாஸ் நடவடிக்கைகள், தகவல் சேகரிப்பு, எதிரியின் ஸ்பெற்ஸ்நாஸ் நடவடிக்கைகளை முறியடிக்கும் திட்டங்கள் ஆகியவை அடுத்த மூன்று பகுதிகளாக அமைகின்றன. சோவியத் ஒன்றிய இராணுவத்தின் தாக்குதல் மற்றும் தடுப்புத் தொழில்நுட்பம் ஆறாம், ஏழாம் பகுதிகளாக இணைக்கப்பட்டுள்ளன.

எட்டாவது பகுதியில் சர்வதேச உறவுகள், உலக நாடுகள் வரலாறு, அந்நிய மொழிப் பயிற்சி என்பன மூன்றும் காணப்படுகின்றன. ஒன்பதாம் பத்தாம் பகுதிகளில் முறையே இராசதந்திர நடைமுறைகளும்

கட்டுப்பாடுகளும், மாக்சிச லெனினிச கோட்பாடுகளும் அவற்றின் அரசியல் சித்தாந்தமும், என்பன கற்பிக்கப்படுகின்றன.

மேற்கூறிய முதல் இரு பகுதிகளில் சிறப்புச் சித்தியடையும் பரீட்சார்த்திகள் குறூ அமைப்பின் தலைமைபீடத்தில் பணியாற்ற அமர்த்தப்படுகின்றனர். இவ்விரு பகுதிகளும் 'விசேட சேவைகள் பிரிவு' (Special services faculty) என்றும் அழைக்கப்படுவதுண்டு. ஒன்பதாம் பத்தாம் பகுதிகளில் சிறப்புச் சித்தியடைவோர் சோவியத் ஒன்றியத்தின் இராசதந்திர சேவையிலும் பிற வெளிநாட்டுச் சேவைகளிலும் நியமனம் பெறுகின்றனர். இவர்கள் இராணுவ அணிகளில் இருந்து இராணுவ - இராசதந்திரப் பயிலகக் கல்விக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் இப்போது இவர்கள் பயிலகத்தை விட்டு வெளியேறி இராசதந்திர சேவையில் இடம்பிடிக்கின்றனர். இவர்களிற் பலர் தூதரக அதிகாரிகளாகவும், வெளிநாட்டில் வதியும் வர்த்தகப் பிரதிநிதிகளாகவும், சோவியத் ஒன்றியத்தின் விமான மற்றும் கப்பல் சேவை முகவர்களாகவும் செயற்படுகின்றனர்.

உலகின் முக்கிய நாடுகள் திறக்கும் தூதரகம் ஒவ்வொன்றிலும் மிலிற்றறி அற்றாச்சே, (Military attache) உளவுத் தகவல் சேகரிப்புடன் எல்லாவகை இராணுவ விவகாரங்களுக்கும் பொறுப்பாக நியமிக்கப்படுகிறார். மிக முக்கியமாக இவர் முகவரணிக்கு ஆட்சேர்ப்பதில் முனைப்பாக ஈடுபடுகிறார் சோவியத் ஒன்றியத்தின் இந்தவகை அதிகாரிகள் இராணுவ-இராசதந்திரப் பயிலகத்தில் படித்துப் பட்டம் பெற்றவர்களாவர். மேற்கு நாடுகளின் அதிகாரிகளும் ஏதோவொரு இராணுவ -இராசதந்திரப் பயிலகத்தில் பயிற்றப்பட்டவர்களாக அமைகின்றனர். ஒரேயொரு வித்தியாசம் சோவியத் ஒன்றியத்தின் மிலிற்றறி அற்றாச்சே அதிகாரிகள் பெரும்பாலும், குறூ அமைப்பின் அங்கத்தவர்களாக இருக்கின்றனர். மேற்கின் இந்தவகை அதிகாரிகளும் அப்படித்தான்.

மனிதவளயியல், தவிர்ந்த மிகுதியான மூன்று தலைப்புக்கள் பற்றி இப்போது பார்ப்போம். கற்கைநெறியின் நான்கு தலைப்புக்களில் மிகவும் முக்கியமானது மனிதவளயியல் என்பதை இப்போது உணர்ந்திருப்பீர்கள். அனைத்துலக அரசியல், நிர்வாகக்கல்வி, பொதுக்கல்வி (International government) (Administration studies) (General studies) என்பன ஒரு இராணுவ அதிகாரிக்கோ இராசதந்திரிக்கோ, உறுதுணையாக நிற்கும் நெறிகளாகவும், இதன் காரணமாக இராணுவ-இராசதந்திர பயிலகம் இவற்றில் முக்கிய கவனம் செலுத்துகின்றது.

சோவியத் ஒன்றிய இராணுவத்தோடு தொடர்புடைய பதினைந்திற்கும் மேற்பட்ட, பயிலகங்களில் மிகவும் முக்கியமானது இராணுவ -இராசதந்திர பயிலகம் ஒன்றுதான். யாரும் அறியாமல் மிகவும் இரகசியமாகப் பேணப்படும் நிறுவனமாகவும் இது நிகழ்கின்றது. இதனுடைய தலைமையகம் மொஸ்கோ நகரின் நாரொட்நேகோ ஒப்பல்செனியா வீதியின் (Narodnogo oppolchenia street) ஒதுக்குப்புறத்தில் காணப்படுகிறது. வெளிப்புறத்தே பெயர்ப்பலகை போன்ற அடையாளங்கள் கிடையாது. பயிலகத்தின் நாடு தழுவிய கிளைகளில்தான் முக்கிய கல்விப் பணிகள் நடைபெறுகின்றன. தலைமையகம், தலைமை அதிகாரிகளின் ஒன்றுகூடல் இடமாகப் பயன்படுகின்றது.

சோவியத் ஒன்றிய இராணுவ-இராசதந்திரப் பயிலகத்தில் படிப்பை முடித்து வெளியேறுவோருக்கு 'இராணுவ விஞ்ஞான முதுமானி' (Master of military science) பட்டம் வழங்கப்படுகின்றது. ஆனால் இந்தச் சான்றிதழை வைத்துக்கொண்டு இவர்கள் தாம் நினைத்த பணி வெற்றிடத்திற்கு மனுச் செய்யமுடியாது. இவர்களைத் தெரிவு செய்த குறூ, இவர்களுக்குப் பொருத்தமான பணியைத் தீர்மானிக்கும். குறூவின் இத்தீர்மானத்திற்கு அடிப்படையாக மாணவர்கள் காட்டிய கல்வித் திறமையும் கட்டுப்பாடும் வழிகாட்டிகளாக அமையும். பெரும்பாலான மாணவர்களின் கனவு வெளிநாட்டுச் சேவையைச் சுற்றியே இருக்கும். இதனால்தான் பெருவாரியான மாணவர்கள் மனிதவளயியல் கற்கை நெறியில் தமது முழுக் கவனத்தையும் செலுத்துகிறார்கள்.

**கலாநிதி க. சோமாஸ்கந்தன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilerangam.net



# யாவும் கற்பனையோ?

சாந்தினி வரதராஜன்

இருண்ட வானம்
மலர்ந்து சிரித்தது
மனுவறியா அந்தக்கிராமத்தில்
பட்ட மரங்களெல்லாம்
துளிர்க்கத் தொடங்கின
கோயில் மணி கேட்டு
கோபுரப் பறவைகள்
கூடு தேடி பறந்து வந்தன
இனி பரிதியின் வரவு கண்டு
பாங்கொலியும் இணைந்தே ஒலிக்கும்
இரும்புக் காலடியின் சுவடுகளை
கோழிகளும் குஞ்சுகளும்
அழித்துக்கொண்டிருந்தன
எங்கேயோ தூரப்பிரிந்துபோன
குயில்களெல்லாம் மறுபடியும்
உறவுகளை கூவத்தொடங்கின

கந்தகத்தை காவிக்காவி
களைத்த காற்று
எழுந்து எட்டிப் பார்த்தது
என்ன நடந்தது
இக்கிராமத்திற்கு ?
என
வியந்து விளித்தது.

பாம்பும் பூரானும்
பதுங்கிய வீடெல்லாம்
பூக்களும் மொட்டுக்களும்
மணம் வீசின.

காற்று நினைத்தது
இனி இந்தக் கிராமத்தில்
இடி இடிக்காது
ஒப்பாரிப் பாடல் ஊரில் எழாது
ஓ என்ற குளறல் இனியும்
காதில் எழாது
பூக்களையும் பிஞ்சுகளையும்
இனி எந்தக் கைகளும்
பறித்து முகர்ந்து கசக்காது

காற்று மெதுவாக எட்டி பார்த்தது
வீடெல்லாம் சிரிப்பொலி
வீதியெல்லாம் தமிழ்க் கொடி
வா வா என்றது

வாசல் கதவுகள்
அகலத் திறந்து கிடந்தன
வாயில் படிகளில் பல முகங்கள்
நீட்சியான பாதையில்
விழிகளை வீசியபடி
சொல்லாமல் போன புதல்வர்களுக்காய்
காற்றும் வழி பார்த்து பார்த்து களைத்தது.

அவர்களும் வந்தார்கள்
இலைகளெல்லாம் எட்டி எட்டி பார்க்க
கிளைகளெல்லாம் கை தட்டி தட்டி வரவேற்க
புல்லெல்லாம் பூத்திருக்க
பூந்தோட்டமே சிரித்திருக்க
வானம் மகிழ்வில் மண்ணை நனைக்க
அவர்களும் வந்தார்கள்
தம் தோளில் சுமந்த சிலுவையை
ஓரமாய் சாய்த்து விட்டு
தம் தாயின் மடியில்
ஒரு முறை தலைசாய்த்து
துயில் கொண்டார்கள்.

காற்று மெதுவாக படர்ந்தது
பின் முகம் கறுத்தது
இனியும் என் மீது
கந்தகம் மணக்குமோ?
என்னை உரசியபடி
குண்டுகள் சீறுமோ ?
காற்று பதிலுக்காய்
காத்திருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போரும் வாழ்வும்

மணலாறு விஜயன்

உண்மைப்பதிவு 9

## மண்ணை நேசித்த குடும்பங்கள்



கல்மடு நோக்கி மோட்டார் சைக்கிள் மிக வேகமாகச் சென்று கொண்டிருந்தது. மோட்டார் சைக்கிள் ஓடிக்கொண்டிருந்தாலும் அந்த மூத்தபோராளியின் நினைவுகள் தங்களை மறைத்துக் காத்து, தங்களுக்காகவே உயிர்கொடுத்த மக்களின் தியாகத்திலேயே நிலைத்திருந்தது.

கல்மடுக் கிராமம் சென்றடைவதற்கு இன்னும் ஒரு மணித்தியாலமாவது எடுக்கும். ஒருமணித்தியாலத்தையும் வீணாக்க விரும்பாது பேச்சினைத் தொடங்கினேன். "வவுனியா பாவற்குளம் தனிச் சிங்கள ஆதிக்கமாய்ப் போச்சு. ஆரம்பத்தில பாவற் குளத்தில வேலைசெய்ய நல்லாய் கஸ்ரப்பட்டியளெண்டு நினைக்கிறன்" அது பெரிய கதை மாஸ்ரர். பாவற்குளத்தில எங்கட நடவடிக்கைகளுக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர் நித்தியானந்தன். எங்கட மறைவிடங்களுக்குச் சாப்பாடு கொண்டு வாறது, வவுனியாவுக்குள்ள இருந்து இராணுவம் பற்றிய தகவல்களைக் கொண்டுவாறது, பாவற்குளத்தில எங்கட வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவது எல்லாமே நித்தியானந்தன்தான். ஆள் துணிஞ்ச சீவன். கூட்டணி காலத்திலே சிங்களப் படையால கைது செய்யப்பட்டு ரெண்டு மூண்டு தடவை ஜெயிலுக்குப் போய்வந்த மனுசன். பாவற்குளம் சிங்களக் குடியேற்றத்தைத் தடுக்க தனித்து நின்று கிராமத்தை அணிதிரட்டிய உறுதி படைத்தவன். இன்றைக்கு பாவற்குள உட்குளப்பகுதி 'உளுக்குள' என்ற சிங்களப் பெயரால் மாறிப் போனதையும், அழகான வாரிக்குட்டியூர் இன்று 'றன்கெக்கம' என்ற சிங்களப் பெயராய் மாறிப்போனதையும் யாருக்குச் சொல்வது. இதையெல்லாம் தடுக்க நித்தியானந்தன் பட்ட கஸ்ரம் கொஞ்சநஞ்சமல்ல.



அஞ்சாமையும், உறுதியும், நேர்மையும் இறுதிவரை இவனிடமிருந்தது. 1983ம் ஆண்டு மாசிமாதம் விடுதலைப் புலிகளுக்கு உதவுவதாக குற்றம் சாட்டி கைது செய்து இரண்டு மாதகாலம் ஜோசப் இராணுவ முகாமுக்குள் வைத்து கடும் சித்திரவதைக்குள்ளாகினார். விடுதலைப் புலிகளைக் காட்டித் தரும்படியும், அவர்கள் மறைத்து வைத்திருக்கும் ஆயுதங்களைக் காட்டித்தரும்படியும் கேட்டு கைவிரல்களிலும் கால் நகங்களிலும் குண்டூசி ஏற்றினர்.

சிறைக்கம்பிகளுக்காய் இலட்சியத்தை விட்டுக்கொடுக்க விரும்பாத நித்தியானந்தன் இரண்டு மாதங்களில் விடுதலை செய்யப்பட்டார். அன்று தொடங்கி எங்களிலிருந்த பற்றும் பாசமும் அவருக்கு மேலும் அதிகரித்தது.

1988ம் ஆண்டு ஆனிமாதம் பாவற்குளம் சோகத்தில் மூழ்கியது. சிங்களப்படைகள் மகிழ்ச்சியால் கூத்தாடின.

நடு இரவு, தெருநாய்கள் நிற்க நேரமின்றி பாய்ந்து பாய்ந்து குரைத்தன. ஊரடங்கிய நேரத்தில் இந்தியப் படைகளின் சப்பாத்து ஓசைமட்டும் தெளிவாக கேட்டுக்கொண்டிருந்தன. நித்தியானந்தன் மனைவிக்கு மனம் வேகமாக அடிக்கத் தொடங்கியது. ஏதோ நடக்கக்கூடாத விபரீதம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடக்கப் போவதை அவர் உணர்ந்து கொண்டார். குழந்தைகளை அழைத்து மெல்ல அருகே அணைத்துக்கொண்டார்.

"இஞ்சாருங்கோ ஆமிக்காரர் ஊரைச் சுற்றி வளைச்சிட்டாங்கள் போல கிடக்குது. என்ன நடக்கப் போகுதோ தெரியேல்ல"

அந்த அகால அமைதியிலும் நித்தியண்ணன் மனைவியின் துன்பப்பயத்தைக் கண்டு அசட்டையாகச் சிரித்தார்.

"பேசாமல் படு. நீ பயப்படுகிறதைப் பார்த்தால் என்னைப் பிடிக்க வந்தமாதிரியெல்லோ கிடக்குது"

கணவனின் துணிவு அவளை திருப்திப்படுத்துவதாக இருக்கவில்லை. விடுதலைப் புலிகளுடன் நேரகாலமின்றித் தன் கணவன் அலைவதும், கூட்டங்களுக்கு ஒழுங்கு



செய்வதும், உணவு சமைத்துக் கொடுப்பதும் இயக்கத்துக்கு பொடியன் சேர்த்துக் கொடுப்பதும் அவளது மனத்திரையில் ஓடியது.

துரோகிகள் யாரும் வந்தால் நிச்சயம் காட்டிக்கொடுப்பார்களெண்டு அவள் மனம் சொல்லியது.

இந்தியப்படை வந்தபின் என்றோ ஒருநாள் பாவற்குளம் சுத்திவளைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இன்று அது நிறைவேறிவிட்டது. விடிந்தும் விடியாத அந்தக் காலைப்பொழுதில் கிராமமெங்கும் அழுகைக் குரல்கள். ஆண்கள் பலரை பிடரியில் பிடித்துத் தள்ளுவதும் அடிப்பதுமாக பட்டி மாடுகள்போல் சாய்த்துக்கொண்டு வந்தனர்.

நித்தியானந்தனின் கதவு தட்டப்பட்டது. இரக்கமோ, மகிழ்ச்சியோ, விளக்கமோ அற்ற இந்தியப்படைகள் நித்தியானந்தண்ணனை வெளியே இழுத்து வந்தனர். மனைவியும் பிள்ளையளும் அவர்களின் காலைப் பிடித்துக் கெஞ்சி அழுதனர். பலன் அவளை ஒரு சிப்பாய் காலால் உதைத்துத் தள்ளினான். நித்தியானந்தண்ணனின் முகம், முழங்கால் என்பன தாறுமாறாகத் தாக்கப்பட்டன.

மூக்குடைந்தது. பற்கள் சிதறியது. உதடுகள் பிய்ந்தது. நித்தியானந்தண்ணன் வாய் திறந்து ஒருவார்த்தை பேசவில்லை. புலியள் எங்கே இருக்கிறார்கள்? இது அடுத்தடுத்துக் கேக்கப்பட்ட கேள்வி.

தெரியாது. இது அவரின் உறுதியான ஒரேபதில்.

நித்தியானந்தண்ணனுடன் நடராசா, தர்மராசா ஆகிய இளைஞர்களையும் இழுத்துச் சென்றனர். 6ம் யூனிற்றிலிருந்து 4ம் யூனிற்வரை இழுத்துவந்தனர். திடீரென துப்பாக்கி வேட்டுக்கள் முழங்கின. நடராசாவும், தர்மராசா யோகன் என்பவரும் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர்.

இந்தியாவிலிருந்து தர்ம பூமியை அழிக்க வந்த இந்தியப் படைகளுக்கு தலைமை தாங்கி வந்தவரும் மேஜர் வேணுகோபாலன் என்ற தமிழனே. சுட்டுப் பழக தமிழீழ மக்களின் உயிர்தான் இவர்களுக்குக் கிடைத்ததோ?

பாவற்குளம் அமைதியாய் மௌனமாய் அழுதது. கதறி அழவோ கண்ணீர் வடிக்கவோ பிறந்த மண்ணில் எம்மக்களுக்கு உரிமை மறுக்கப்பட்டுவிட்டது. கிராம முன்னோடிகள் நித்தியானந்தனை விடுவிக்க பெரும் முயற்சி எடுத்தனர். எல்லாம் பூச்சியமாகவே முடிந்தது.

நித்தியானந்தனை முகாமுக்கு கொண்டுசென்ற இந்தியப் படைகள் அவனைக் குதறத் தொடங்கினர்.

தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு மூக்கினுள் தண்ணீர்விட்டனர். கிணற்றுக்குள் தலை கீழாக இறக்கினர். கண்ணுக்குள் மிளகாய்த்தூளை வைத்துக்கட்டி தண்ணி ஊற்றினார்கள். "புலியைக் காட்டு" இதுதான் ஒவ்வொரு தடவையும் அவரிடம் கேக்கப்பட்டது. மானம் நிறைந்த நித்தியண்ணர் அவர்களிடம் திருப்பி ஒரு கேள்வி கேட்டார்.

"எங்கட பிள்ளையளுக்கு உதவி செய்யிறதைத் தடுக்க நீங்கள் யார்"

"இவனுக்கு திமிர் அடங்கேல்ல" என்று உறுமிய சிப்பாய்கள் அவரது ஆணுடம்பைத் தாக்கினர். ஆணுடம்பில் மின்சாரம் பாச்சினர். முழங்கால் சில்லை இடித்துடைத்து கூழாக்கினர். நித்தியானத்தண்ணரின் உயிர் பாதி போய்விட்டது. அப்பொழுதும் சிப்பாய்கள் விட்டார்களா? குதவாயிலில் பிளாஸ்ரிக் குழாயினை அடித்து இறுக்கினார்கள். நித்தியண்ணனின் மூச்சு குறையத் தொடங்கியது. பேசும் சக்தி இழந்துகிடந்த அவரது உள்ளம் பட்ட வேதனைகளை தமிழ்த் தாய் மட்டுமே அறிவாள். அதிகாலையில் அவரை வைத்தியசாலையில் கொண்டு வந்து போட்டனர் இந்தியப்படைகள். நித்தியண்ணன் வைத்திய சாலையில் கிடப்பதைக் கேள்விப்பட்டு பாவற்குளம் கிராமமே ஓடியது. ஆனால் எலும்புகளற்ற ஒரு இறப்பர் பொம்மையாய் அந்த மக்களின் பணியை முடித்துக்கிடந்தார் நித்தியண்ணன்.

நித்தியானந்தனின் கதை சொல்லி முடியவும் மோட்டார் சைக்கிள் கல்மடுக் கிராமத்துக்குள் நுழையவும் சரியாக இருந்தது.

திரும்பும் திசையெல்லாம் வயல்வெளிகள். வயல்வெளிகளை ஊடறுத்துச் செல்லும் கிறவல் வீதிகள். வைக்கலால் வேயப்பட்ட குளிர்ந்த குடிசைகள். கல்மடு அழகான கிராமம்தான்.

கல்மடு 2ம் படிவம். இரண்டு மூண்டுபேர் இருந்து படுத்தெழக்கூடிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறியவீடு, சின்னையாண்ணனின், இந்தச் சிறிய குடிசைக்குள் மிகப்பெரிய விடுதலையுணர்வு இருந்தது. மலையகத்திலிருந்து மடுவுக்கு வந்து குடியேறியவர் சின்னையாண்ணை. சுத்தமான ஒரு இந்து. வாழ்க்கை கிடைத்தும் வாழக் கிடைக்காத மனைவி கிறேஸ்மேரி. இவள் சுத்தமானொரு கிறிஸ்தவப்பெண்மணி.

மலையகத்தில் வளர்ந்ததால் சிங்களத்தை சரளமாகப் பேசும்திறமை சின்னையாண்ணனுக்கிருந்தது. வாழ்க்கை வண்டியை உருட்டுவதற்காக ஒரு குட்டிக் கடையை வெற்றிகரமாக நடத்தி வந்தார் வயிற்றுப் பாட்டுக்குக் குறைவில்லை. சிவகாமி, அசுவந்தா, றெபேக்கா என்று வரிசையாகப் பெற்ற பெண் குழந்தைகள் மூன்று சின்னையாண்ணையின் குட்டிக் கடையும் குட்டிக் குடிசையும் விடுதலைப் போரைக் கட்டி வளர்க்க உதவிய வரலாறு மிகப் பெரியது. வறுமையிலும் செழுமையான விடுதலைப் பற்று அவர்களின் மனங்களில் வளர்ந்திருந்தது. ஈழமக்கள் அறியாததொன்று ஆனால், அறிந்திருக்க வேண்டியதொன்று மாறுபட்ட அவர்களின் மதங்களில் ஒன்றுபட்ட வாழ்க்கைப் பயணம் விந்தையானது. 1984ம் ஆண்டு விடுதலைப் புலிகள் வன்னிக்குள் துளிர்த்த காலம். விடுதலை ஆழமாக வேரூன்ற உதவிய வீடுகள் விரல்விட்டு எண்ணக் கூடியளவில் மட்டுமே இருந்தன. சின்னையாண்யைின் வீட்டை உரசிச் செல்லும் கிறவல் வீதி. அது நேராக காட்டுக்குள் புலிகளின் பயிற்சிப் பாசறையைச் சென்றடையும்.

பயிற்சிக்காக இணையும் இளைஞர்கள் நேராக வந்து தங்கும் தளமாக இவரின் வீடு அமைந்தது. சுதந்திரமாய், உரிமையாய் உணவுண்டு தங்கி மகிழும் போராளிகளுக்கு அந்தக் குடிசை ஒரு மாளிகை பாதுகாப்பான உறைவிடம்.

அன்பாய் ஆதரவாய் சலிப்பின்றிச் சமைத்துக் கொடுக்கும் அந்தத் தாய் தந்தையின் மனம் விடுதலையின் கோபுரங்கள். வன்னியில் களம் நின்ற போராளிகளில் சின்னையாண்ணனை தெரியாதவர்கள் இல்லை. பயிற்சிப் பாசறையில் பயிற்சி முடிந்ததும் நேராக வந்து உணவுண்டு பசிதீர்த்த போராளிகளில் சிலர் இன்றில்லை. ஆனால் இவர்களின் ஆத்மா துயிலுமில்லத்திலிருந்து நிச்சயம் இவர் வீட்டுக்கு வந்துசெல்லும்.

சின்னையாண்ணை தன் வாழ்க்கை வண்டியை உருட்டப்போட்ட குட்டிக்கடை அவரது வாழ்க்கை வண்டியை உருட்டியதோ இல்லையோ விடுதலைப்புலிகளின் பிரதான களஞ்சியமாக அது அமைந்திருந்தது. போராளிகளுக்குத் தேவையான உணவுப் பொருட்களும், வேறுசில முக்கியமான பொருட்களுந்தான் அவர் கடையில் இருக்கும். தனக்காகக் கடைபோட்டாரென்பதைவிட போராளிகளுக்காக கடைபோட்டாரென்பதே பொருத்தமானது. சின்னையாண்ணனின் சிங்கள அறிவு முழுமையாகவே விடுதலைக்கு உதவியது. புலிகளுக்குத் தேவையான அந்தரங்கமான பொருட்களைக் கொழும்புவரை சென்று வாங்கி வந்தார். அப்பொழுதெல்லாம் சிங்கள மொழி அவருக்குக் கைகொடுத்தது.

விடுதலைப் போராட்ட ஆரம்பகால வரலாற்றில் கல்மடுக் கிராமத்துக்கு தனித்துவமானதோர் இடமிருந்தது. அந்தக் கிராமத்தில் புலிகள் இயக்கத்தைத் தவிர ஏனைய இயக்கத்தில் சேரவுமில்லை, உதவி செய்யவுமில்லை. இதனால் இராணுவத்துக்கோ, பின்னர் வந்த இந்தியச் சிப்பாய்களுக்கோ புலிகள் பற்றியும் புலிகளுக்கு உதவி வழங்குவோர் பற்றியும் தகவல் கொடுக்க எவரும் இல்லை. இதனால் இக்கிராமம் எதிரிகளின் அழிவிலிருந்து தப்பியது. 87ம் ஆண்டு இந்தியச் சிப்பாய்களின் சுவடுகள் ஈழமண்ணில் பதிந்த போது கல்மடுக் கிராமம் சில தடவைகள் சுற்றி வளைப்புக்குள்ளானது.

இந்தியச் சிப்பாய்களிடம் அகப்படாதிருப்பதற்காக போராளிகளுடனேயே காட்டில் மறைந்து இருந்தார். இவரது மனைவியும், பிள்ளைகளும்கூட இரவில் வீட்டில் தங்குவதை பலநாட்கள் தவிர்த்தனர். இந்திய சிப்பாய்கள் மேஜர் டேவிட்டை கைது செய்யத் துரத்திக்கொண்டு வந்தனர். டேவிட் தான்கொண்டு வந்த சைக்கிளைப் போட்டுவிட்டு ஓடித் தப்பிக்கொண்டான். அவன் கைவிட்டுச் சென்ற சைக்கிளை எடுத்துவர அவனுக்கு துணிவு இருக்கவில்லை. சின்னையாண்ணை துணிவாக நடந்தார். சுற்றும் முற்றும் ஒரு தடவை நோட்டம் விட்டபின் சைக்கிளை எடுத்து வந்துவிட்டார். இத்தகவல் சிப்பாய்களின் செவிக்கு எப்படியோ எட்டிவிட்டது.

சின்னையாண்ணனை முகாமிற்கு வருமாறு சொல்லி அனுப்பினான். அவர் இதைப் பொருட்படுத்தவேயில்லை. இத்தகைய இடர்களையும் தடைகளையும் தாண்டிப் பணிசெய்த சின்னையாண்ணனுக்கு இறுதியாக நடந்த துயரத்தை அறிந்துகொள்வதற்காக மூத்த போராளிகளுடன் சென்று கதிரையில் அமர்ந்துகொண்டேன்.

"வாருங்க தினேசு. நீங்க வந்திருக்கிறீங்களெண்டு கேள்விப்பட்டேன் எப்படியும் இங்க வராம போகமாட்டீங்களெண்டு நினைச்சன்".

நம்பிக்கை மிக்க எதிர்பார்ப்பு என்னை வியப்படையச் செய்தது. என்னை அந்த அம்மாவுக்கு அறிமுகம் செய்து வைத்தார் என்னுடன் வந்த போராளி.

சிறிய குடிசைக்குள் பெரிய மனம். அங்கிருந்த ஒரேயொரு கதிரை எனக்காக நகர்ந்தது. வீட்டினுள் சுற்றிலும் கண்களை ஓடவிட்டேன் குழந்தை றெபேக்கா ஒரு மைனாப் பறவையுடன் விளையாடிக்கொண்டிருந்தாள். மைனாவும் அவளும் ஏதோ தமக்குத் தெரிந்த கிள்ளை மொழிகளைப் பேசினர். "இதுதான் டேவிட் தம்பி குழந்தை றெபேக்காவுக்குக் கடைசியாகக் கொடுத்த பூச்செண்டு." என்று ஒரு சிறிய பூச்செண்டை எடுத்துக்காட்டினாள் அம்மா.

வாசலில் வந்துநின்ற மூத்த பெண்கள் இருவரிலும் வறுமைப்புயலின் தாக்கம் தெரிந்தது. மெதுவாக பேச்சைத் தொடங்கினேன். அம்மா இயக்கத்தில் நீங்கள் முதல்முதல் யாரைச் சந்திச்சனீங்கள்?

பிரசன்னாவையும் தினேஸ் தம்பியையும்தான் இயக்கமெண்டு முதல்ல சந்திச்சம். அதுக்கப்புறம் ஜெயந் தம்பியும் போனாப்புறம் கொஞ்சக்காலம் இயக்கப் பிள்ளைகளைக் காண முடியாமல் போச்சு. பிற்பாடு டேவிட் தம்பி இருந்தபோது அம்மா அம்மான்று அடிக்கடி வரும். அதுக்கப்புறம் யாருமே இந்தப் பக்கம் வாறதில்லை அதுதான் தம்பி சரியான கவலையாக இருக்கு.

சின்னையாண்ணன் செத்தது எப்படியம்மா உங்களுக்குத் தெரியவந்தது என அடுத்த கேள்வியைப் போட்டேன். வீட்டுக் கஸ்ரந்தான் அதால அவரு கருவாடு கட்டிக்கொண்டு வவுனியாவுக்குப் போய் வந்தாரு. இடைக்கிடை இயக்கத்துக்கு சாமான் வாங்கவும் அனுப்பினாங்க. கடைசியாக கருவாடு கொண்டுபோக வெளிக்கிட்டாங்க. அப்புறம் டேவிட் தம்பி வந்து சொல்லிச்சுது. இனிமே நீங்க உள்ளே போகாதீங்கன்னு.

ஆமாங்க தம்பி இந்த கருவாடை கொடுத்திட்டு போய் வாறதை நிற்பாட்டுவம் என்று சொல்லிட்டுப் போனவங்கதான் திரும்பவேயில்லை.

குழந்தை றெபேக்காவின் தலையை வருடியவாறு நின்ற கிறேஸ்மேரியின் கண்களில் நீர் முட்டி நின்றது.

1991ம் ஆண்டு, பங்குனி மாதம், 22ம் நாள் அந்தத் துயரம் நிகழ்ந்தது. வவுனியாவுக்கு போய் வர வரிசையில் போனவரைப் புளொட் காரங்க பிடிச்சிட்டாங்க. ஆனால் இது எனக்கு மறுநாள்தான் தெரிஞ்சது. புளொட்காரன்கள் கொண்டுபோய் சித்திரவதை போட்டாங்க. கல்மடு சின்னையா என்ட ஆளை தேசத்துரோகத்துக்காய் சுட்டதாய் வோட் தொங்க விட்டிருக்கிறாங்க என செய்தி வந்ததும் ஓடிப்போனேனுங்க. அங்க அவங்கட உடலைக்கூட காணமுடியல்ல. தூக்கிக்கொண்டு போய் எரிச்சிட்டாங்க. எனச் சொல்லிமுடிக்கும்போது கண்களில் நிரம்பி நின்ற கண்ணீர்த்துளிகள் சிந்திச் சிதறின.

தமிழின விடுதலையை நேசித்த அந்தப் புனிதனுக்கு நாசகாரிகள் கொடுத்த பட்டம் தேசத்துரோகி. அந்த வீரபுருசனின் எச்சிலுக்கும் கூட தகுதியற்ற (பேய்கள்) என்றோ ஒருநாள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

தமிழன்னையின் தண்டனைக்கு உட்படுவார்கள் என்ற சிந்தனையுடன் என் மனதின் ஆழத்திலிருந்து நெடு மூச்சொன்று சூடாக வெளிச்சென்றது.

கல்மடு கிராமத்துக்குச் சென்றால் இந்த வீரபுருசனின் மனைவியைக் காணலாம். ஒரு பெரும் வரலாற்றுண்மையைப் பெறலாம்.



# மன்னித்துவிடு



நடந்தவைகள் எல்லாம்
நான் எதிர்பார்த்தவைகள் அல்லவே
நீ ஒன்று நினைத்திருந்தாய்
அல்லது நினைத்திருக்கக்கூடும்
காலங்கள் நிலைமாறி உருமாறியிருக்கலாம்
உன் உணர்வுகளை
நான் அறியாதவன் அல்ல
உன் தேசத்திற்கான பணிதனை
வரித்துக்கொண்டவள் நீ
என்னை உன்னுள் நிறைத்தவளே!
அன்று உன் உதடுகளினூடே
உதிர்த்த வார்த்தைகள்தான்
என்னை சில்லிட வைத்தன,
இன்றும்கூட...
அந்தமதியெழும் மாலைப்பொழுதொன்றின்
மௌனப்பாடலை
மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டிருக்கிறேன்:
உன் மெய்யுருவினைத் தரிசித்தபடி,
நாளையோ அல்லது மறுதினத்திலோ
உன் கனவுகளில் அல்லது
நிஜத்தில் நான் இருப்பேன்.
அதுவரை காத்திருப்பாய்
அந்த நாட்களின் வாசலில்
எனை மன்னித்து...

இத்தாவில் க.சிவராசா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அணையாதீபம்



# மேஜர் தணிகா

(எதிர்ராசா கேமலதா)

தண்டுவான் நெடுங்கேணி
பிறப்பு: 26.10.1971
வீரச்சாவு: 03.06.1998



# தணியாத தணிகா

மாசியப்பிட்டியிலிருந்து சுன்னாகம் செல்லும் வீதியூடாக ஒரு வேவு அணி நகர்ந்துகொண்டிருந்தது. 1990 ஆம் ஆண்டு பலாலியில் தொடங்கிய இராணுவ ஆக்கிரமிப்பு நகர்வு, அளவெட்டி மல்லாகம் என நீளத் தொடங்கியதில், 04.08.1995 அன்றைய நகர்வு சுன்னாகத்தைப் பிடிப்பதாக இருந்தது. அன்றைய அந்த நகர்வைத் தடுத்து நிறுத்தி தாக்குதலைத் தொடுக்கவே வேவு அணியில் ஒருவராக இவளும் நகர்ந்துகொண்டிருந்தாள். ஓட்டம், நடை, 'பெண்ட்', நிலத்துடன் ஊர்ந்தபடி என நகர்வுகள் இருந்தன. சுன்னாகப் பகுதியைச் சூழ எமது படையணிகள் நிலைகொண்டிருந்தன.

நகர்வின் வேகத்தில் எக்கச்செக்கமாகப் போய் எதிரியின் பகுதிக்குள் முட்டுப்பட்டு நிமிர்ந்தார்கள். முதலில் தணிகாதான் இடது பக்கம் திரும்பினாள். திகைத்தாள். அவளில் 50 மீற்றருக்குள் இரண்டு டாங்கிகள் அவளுக்குப் புறமுதுகு காட்டி நின்றன. தணிகாவின் குரல் கட்டளையிடும் தொனியில் ஒலித்தது. "டேய் இஞ்ச பார் டாங்கிகள். பக்கத்தில நிக்கிறான். அதில நிக்கிற RPG யைக் கூப்பிடு வேகம் வேகமாக எடுத்துக்கொண்டு வா..."

அதற்கிடையிலே டாங்கிகள் எங்களைக் காணாமலேயே 10 மீற்றர் முன்னோக்கி நகர்ந்துவிட்டது. "அடியடா RPGயை, என்ன பாக்கிறாய், வேகமா அடி அடி, இல்லாட்டி தா நான் அடிக்கிறன். என்ன பாக்கிறாய் யோசிக்காமல் உடனே அடியடா. இல்லை என்னட்ட தா..."

"இல்லை அக்கா சமநிலைச் செட்டை விரிவதற்கு இடம் காணாது." "முதலில நீ ஒரு செல்லை அடி. அது எடுக்கிற பாதையூடாக மற்றதை குறிபிசக விடாது டாங்கிக்கு பக்கவாட்டாய் அடி" என்று கூற அந்த இடத்தில் சில கணங்கள் தாமதித்து டாங்கிகள் நகரத்தொடங்கின.

டாங்கிகளைத் தாக்கவில்லை என்பது அன்று தொடங்கி அவளுக்குத் தீராத கவலையாக இருந்தது. தணிகாவின் கனவுகளில் ஒன்று, தான் எப்படியாவது ஒரு டாங்கியையாவது அழிக்கவேண்டும் என்பது RPG தணிகாவுக்குப் பிடித்தமான ஓர் ஆயுதம். அதற்கு ஒரு காரணமும் இருந்தது. தணிகாவின் தம்பி லெப்ரினன் தர்மராசா வீரச்சாவடையும்போது 1993 பூநகரிச் சமருக்கு RPG யுடன் சென்று வீரச்சாவடைந்தான். தனக்காக தன் பாதையில் தனக்கு பின் வந்த தம்பி RPG யுடன் தாக்குதல்களில் ஈடுபட்டதால் அதே ஆயுதத்தால் தானும் சாதிக்க வேண்டும் என்று எண்ணியிருந்தாள். அதற்கேற்ப அதனைக் கையாள துல்லியமாகப் படித்தறிந்து பயிற்சியும் பெற்றிருந்தாள்.

சுன்னாகப் பகுதியில் அன்றைய சண்டையை முடித்து, மாசியப்பிட்டி நோக்கித் திரும்பும்போது ஸ்கந்தா பாடசாலையடியில் ஒரு சிறு புள்ளியைக் காட்டி அதைச் சுடுங்கோ என்று கூற தனது AKதுப்பாக்கியால் அவ் விலக்கை குறி வழுவாது சுட்டாள். அங்கு நின்ற ஒருவரைத் தவிர மற்றைய அனைவரும் ஆண் போராளிகள். சுடத் தெரியாத யாரும் பதுங்கிச்சுடும் துப்பாக்கியைத் தூக்கமாட்டார்கள் என்றாள் தணிகா. உறுதியும் ஆற்றலும் உள்ள திடமான போராளிதான் தணிகா.

* * *

1997 இல் கண்டி வீதியைப் பிடிப்பதற்கு இருமுனைகளில் இராணுவம் நகர்வைத் தொடங்கியதில், முதற்கட்ட நகர்வு உடங்கா பழம்பாசியூடாக வந்து நெடுங்கேணியைப் பிடிப்பதாக இருந்தது. நெடுங்கேணி தண்டுவான் வீதியே அவளது முகவரி.

சின்ன வயதிலேயே சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தாள். அடிக்கடி கடும் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தாள். அது அவள் தன்னைத் தானே பூரணமாக விளங்காத பருவத்தில் நடந்தவை. தணிகாவிற்கு ஒரு அண்ணா ஒரு அக்கா ஒரு தம்பி என அருமையான குடும்பம் அமைந்திருந்தது. வசதிகள், வறுமை என்று சொல்ல முடியாத வாழ்க்கை ஓடியது. தணிகா ஆரம்பக் கல்வியைத் தண்டுவான் மகாவித்தியாலயத்தில் முடித்தாள். படிப்பிலும் விளையாட்டுக்களிலும் புலியாக இருந்தாள்.

விளையாட்டுக்களில் பல சான்றிதழ்களையும் பெற்றிருந்தாள். உயர்தரம் வர்த்தகப்பிரிவில் நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் படித்தாள். நன்றாகக் கணக்குகளைச் செய்வாள். தணிகா கண்ணியமும், பேச்சு வன்மையும், வஞ்சகமற்ற சிரிப்பும் மனதை ஈர்க்கும் திடகாத்திரமான உடல் வலுவும் கொண்டவள்.

இந்திய இராணுவக் கெடுபிடிகள் அதிகமாக இடம்பெற்ற காலத்தில் வெவ்வேறு வழிகளிலும் பல்வேறுபட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உதவிகளையும் பங்களிப்புகளையும் விடுதலைப்புலிகளுக்குச் செய்து வந்தாள். ஒருநாள் இந்திய இராணுவத்திடம் மாட்டுப்பட்டுக்கொண்டாள். சாக்குப் போக்குச் சொல்லி ஒருவாறு தப்பிவிட்டாள். தந்தை எதிர்ராசா அன்று அடிகளை வாங்கி பின் தப்பினார். தணிகாவின் பாடசாலை வாழ்க்கை இனிமையானதாகவும் மகிழ்வானதாகவும் அமைந்திருந்தது.

* * *

1990 இல் இரண்டாம் ஈழப்போர் தொடங்கிய அடுத்த மாதமே 14.07.1990 அன்று தன்னை ஒரு விடுதலைப்புலியாக இணைத்துக்கொண்டாள். அப்போதும் அவள் தனித்து வரவில்லை. அவளது பள்ளித்தோழியையும் கூட்டிக்கொண்டே வந்தாள். மணலாற்றுக்காடு அவர்களை வரவேற்றது. காடு அருமையான வீடானது. மகளிரின் பன்னிரெண்டாவது பயிற்சிப் பாசறை சுறுசுறுப்பாகவும் வேகமாகவும் இயங்கிக்கொண்டிருந்தது. அதற்குக் காரணமே லெப். கேணல் மாதவியிடம் அவர்கள் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்ததே. பலர் ஒரு வயதை ஒத்தவர்களும் படித்தவர்களுமாக இருந்தனர். வனாந்திரப் பயிற்சியை முடித்துக்கொண்டு யாழ். சென்றவளுக்கு 1990 இல் நடந்த மாங்குளச்சமர் முதற்களமாக அமைந்தது. அதனைத் தொடர்ந்து பலாலி, சிலாபத்துறை. வவுனியா, ஆனையிறவு, பலவேகய-02 என களம் நீண்டது. 1991 இல் ஆனையிறவுச் சமரில் காயப்பட்டாள்.

தொடர்ந்து வந்த நாட்களில் மகளிரின் முதலாவது கண்ணிவெடிப் பாசறையில் பயிற்சிகள் பெறத் தெரிவு செய்யப்பட்டாள். கண்ணிவெடிகள் பற்றிய பயிற்சிகளையும் படிப்புகளையும் நுட்பமாகவும் அதிதிறமையாகவும் பயின்று முடித்தாள்.

பலவேகய-02, கண்ணிவெடிக் களமாக அமைந்தது. அதனைத் தொடர்ந்து அளவெட்டிப் பகுதியில் செயற்பட்டாள். பின் யாழ்தேவி என நகர்வெடுத்திருந்த இராணுவத்தின் கண்ணிவெடிகளை அகற்றினாள். அப்போது பல கண்ணிவெடிகளைக் கைப்பற்றினாள்.

தவளை நடவடிக்கையை அடுத்து விடுமுறையில் வீடு சென்றபோதே RPGயுடன் சென்று தம்பி வீரச்சாவடைந்த செய்தியை அறிந்தாள். அப்போதுதான் தம்பிக்காக தான் RPGயுடன் சாதிக்க வேண்டும் என்று திடம்கொண்டாள்.

தணிகா எப்போதுமே ஒரு தனிரகமாக இருந்தாள். பயிற்சிகள், படிப்புகள் என எல்லாவற்றிலும்தானே முதலிடம் வரவேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தாள். அதன்படியே அவள் மிகத் திறமையானவளாகச் செயற்பட்டாள். தணிகாவை தளபதி, ஆசிரியர் பிரிவுக்குத் தெரிவு செய்து விட்டார். அங்குதான் அவள் RPG பற்றி நன்கு தெரிந்துகொண்டாள். தொடர் பயிற்சியினால் ஒரு குறி வல்லுனராகத் தெரிவு செய்யப்பட்டாள். அதே காலப்பகுதியில் மண்டைதீவுச்சமர் நடைபெற்றது. தனது துப்பாக்கியுடனும் வெடிமருந்துப் பையுடனும் அச்சமருக்கு சென்று திரும்பினாள்.

அதன் பின் பதுங்கிச்சுடும் துப்பாக்கிக்கு (சினைப்பருக்கு) 'லோடரா'கத்

தெரிவு செய்யப்பட்டாள். பதுங்கிச்சுடும் துப்பாக்கியால் குறி தவறாது சுட்டு திறமையானதொரு சுடுவல்லுநரானாள்.

அளவெட்டிப்பகுதியே தணிகாவிற்கு முதலாவது பதுங்கிச்சுடும் தாக்குதலாக அமைந்தது. அங்கு பதுங்கிச்சுடும் துப்பாக்கியால் இராணுவத்தைச் சுட்டு வீழ்த்தத் தொடங்கியவள், இடிமின்னல், சூரியகதிர் -ஒன்று, இரண்டு என அதே துப்பாக்கியால் பல இராணுவத்தினரை வீழ்த்தினாள்.

ஓயாத அலை -01

தாக்குதலுக்குச் சென்றவள் இராணுவத்தை குறி வைத்து சுட்டுச் சுட்டு வீழ்த்தினாள். இராணுவ உடல்கள் குவிக்கப்பட்டபோதும் தணிகாவின் மனம் குளிரவில்லை. தேடித் தேடிச் சுட்டாள். எமக்கு இழப்பை தந்துகொண்டு மறைந்திருந்தவனையும் தேடிச் சுட்டு வீழ்த்தினாள். அதனைத் தொடர்ந்து வந்த சத்ஜெய, ஆனையிறவு பரந்தன் களங்களுக்கும் பதுங்கிச்சுடும் துப்பாக்கியுடன் சென்று தீவிரமாகச் செயற்பட்டாள்.

அடுத்த கட்டமாக தணிகாவிற்கு வேறு திசை காத்திருந்தது. விசேட தளபதி துப்பாக்கிகளுக்கு பூச்சிய வழுத்திருத்தம் செய்வதற்கான பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு விட்டிருந்தார். அதே காலகட்டத்தில் 'வெற்றி உறுதி' நடவடிக்கையை இராணுவம் முனைப்புடன் செயற்படுத்திக்கொண்டு இருந்தது. படிப்பு, பயிற்சியை முடித்துக்கொண்டு மீளவும் களம் திரும்பினாள் தணிகா.

புளியங்குளச் சமர்க்களத்தைச் சந்தித்தாள். அங்கு மேஜர் சந்திரிகாவின் அணிக்கு நிலைமை அறிவிப்பாளராகச் செயற்பட்டாள். அதைத் தொடர்ந்து 'கொம்பனி'க்கான பதில் பொறுப்பாளராக கிளிநொச்சி பரந்தன் சண்டைக்குச் சென்று நெஞ்சுப் பகுதியில் காயப்பட்டாள். காயம் மாறி மறுபடியும் சமர்க்களம் சென்றாள். அப்போதுகூட தணிகாவின் எண்ணம் முழுவதும் தான் RPG யால் எதிரிக்கு அடி கொடுக்க வேண்டும் என்பதே.

சதா சாதிக்க வேண்டும் என்ற நினைவும், உறுதியும், எல்லோரிலும் ஒரே நிலையில் அன்பு வைக்கும் பண்பும் தணிகாவிற்கு தனித்துவமாக அமைந்திருந்தது. எப்போதுமே எதையாவது புதிது புதிதாக அறிய வேண்டும் என்ற தேடல் இருந்தது.

தணிகாவுடன் இருந்தவர்களுக்கு அவளுடன் பழகும் நாட்கள் இனிமையானதாக அமைந்திருக்கும். தானே உணவு தயாரிப்பாள். கடுமையான வேலைகளைச் சாதாரணமாக செய்து முடிப்பாள். ஒரு தடவை தணிகாவின் தோழி கப்டன் பரணிதா வயிற்றில் காயப்பட்டாள். அப்போது இவள் அவளருகில் இருந்தாள். பரணிதாவிற்குத் தொலைவில் இருந்து வந்த ரவை தாக்கிவிட்டதே என்று துடியாய்த் துடித்தாள். அது அவளிற்கு கடும் வேதனையாக இருந்தது. "பரணிக்கு பதிலாக நான் காயப்பட்டிருக்கலாம்" என்றாள். சூட்டுப் பயிற்சிகள் நடைபெறும்போது அவள் சுட்ட ரவை குறி பிசகவில்லை என்றால் பளிச்சென முகத்தில் தெரியும். கறுத்த உருண்ட முகமென்றாலும் சிரிப்பில் குழந்தைத் தன்மை வெளிப்படும்.

தணிகா அம்பகாமப்பகுதிக்குப் பொறுப்பாக அணிகளை வழிநடத்திக் கொண்டிருந்தாள். அன்றும் வழமை போலவே முன்னரங்க நிலைகளை அவதானித்துவிட்டு பிள்ளைகளைக் கதைத்துவிட்டு மருத்துவ நிலைக்குச் சென்றுகொண்டிருந்தாள். அந்தக் கணத்தில் ஏற்பட்ட விமானத் தாக்குதலில் 03.06.1998 அன்று லெப் தர்மராசாவுடன் இணைந்து கொண்டாள். RPG யால் அடிக்க வேண்டும் என்பதுதான் தணிகாவிற்கு கனவாகவே போய்விட்டது.

**அ. காந்தா**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தீச்சுடர்

## தீச்சுடர்—6



இலக்குகளைக் கவனமாகப் பார்த்து துப்பாக்கி இயக்கி ரவைகளை ஏவிக்கொண்டிருந்த நளாயினியை இரண்டு ரவைகள் பதம் பார்த்தன. இரண்டும் இடப்புறமிருந்து பாய்ந்து வந்தவைதான். அருகருகே வயிற்றையும் தொடையையும் கீறிப்பாய்ந்தன ரவைகள். குபுகுபுவெனப் பாய்ந்த குருதி வயிற்றைப் பொத்திய கைகளினூடாக உடைகளை நனைத்து விரல்களினூடாக வழிந்தது.

இதற்குள் பாய்ந்து வந்த போராளிகள் அவளைப் படுதாவில் கிடத்தி தரையோடு தரையாக பின்புறம் நோக்கி இழுத்தனர் . "இழு" "இழு" என்ற கட்டளை நளாயினிக்குத் தெளிவாகக் கேட்டது.

"விடுங்கோ ... விடுங்கோ... எனக்கொண்டுமில்லை. விடுங்கோ. விடு..." என்றவாறே நளாயினி மௌனமானாள். மயக்கமடைந்த நளாயினியை வேகமாக இழுத்த வழங்கல் குழுவினர், ரவைகள் பாயும் தூரத்தைக் கடந்ததும் அவளைப் படுதாவுடன் தோளில் தூக்கியவாறு எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாகப் புலவனாவூர் செல்லும் ஆற்றில் இறங்கி நடந்தனர்.

முன்புறம் நீர் வற்றிய ஆற்றின் இரு மருங்கும் நீர்க்கொடிகள் மண்டியிருந்தன. மணல் அள்ளியதால் ஏற்பட்ட ஒரு குடைவில் மேலும் இரு போராளிகள் கிடத்தப் பட்டிருந்தனர்.

www.tamilarangam.net

அங்கு முதலுதவி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

நளாயினி முன்னேறி நின்ற இடத்தின் வழியாகவே இராணுவம் கால்நடையாக முன்னேறி வந்ததால் அங்கு எதிர்ப்பும் பலமாக இருந்தது. அதே சமயம் மேலதிகப்படை நித்திநகர் வழியாக ராமயகல்லுக்கும், அம்மன் கோயில் வழியாக குருக்களூருக்கும் இறங்கியது.

ஏற்கனவே இவ்வழிகளில் இராணுவம் வரும் என போராளிகள் எதிர்பார்த்தே நின்றனர். ஏனெனில் மன்னார் வீதிக்கு இராணுவம் வரக்கூடிய முன்னணி தரைவழியும் ஒரு மேட்டு நிலம் குளக்கட்டுகள் பெருவனமறைப்புகளடங்கிய இடம் இதுவாகும். இன்னும் செட்டி குளம் பறையனாளங்குளம் சந்தி என்பன ஒரு கேந்திரங்களாகும்.

எதிர்பார்த்தபடி இராணுவம் வந்தபோது உள்ளே புகவிட்டு மும்முனைகளில் புலிகள் உக்கிரமான தாக்குதலை ஆரம்பிக்கவே இராணுவம் பாரிய இழப்புகளுடன் பின்வாங்கியது. பூவரசங்குளத்தைக் கைப்பற்றினாலும், குருக்களூரில் நிற்கவே முடியாமல் இராணுவம் சிதறி யோடியது. பூவரசங்குளத்தில் நின்ற இராணுவமும் பின்வாங்க வேண்டியதாயிற்று.

நான்கு நாட்களில், முடிந்த இந்தச் சமர் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையே என "லங்கா புவத்" அழுதது.

"பூவரசங்குளத்துக்க ஆமி வந்திட்டானாம், பூவரசங்குளத்துக்க ஆமி வந்திட்டானாம்" என்றபடி ஓடி வந்த சனம் காட்டினூடே வந்த ஒரே வழியான இரணை இலுப்பைக்குளம் தெருவிலிறங்கி புலவனாவூர் மடுக்குளம் வந்து அவ்விடத்தில் திரும்பி சின்னத்தம்பனை பெரியதம்பனை வழியாக பெரியபண்டிவிரிச்சான் கடந்து மடுவை அடைந்தனர். மடுத் தேவாலயத்தில் அடைக்கலம் புகுந்தனர். இவர்கள் மடுக்குளம் சந்திவரை வந்த பார்வதி யோசித்தாள்.

"இது எத்தனையாவது தரம் மக்கள் அகதியாய்ப் போறது... ஆனையிறவுக்கங்கால போடா. தலை தொட்டு மணந்து பார்த்து நல்லெண்ணை மணத்தால் தமிழன் என்று கண்டு ஆனையிறவுக் கங்கால போடா. மசால் வடே தோசே அப்பிட்ட எப்பா" என்று கலைத்த ஆயிரத்து தொளாயிரத்து அம்பத்தெட்டு, தொட்டிலில் போட்ட குழந்தையைத் தூக்குவதாக எண்ணி பயத்தால் ஏற்பட்ட பதற்றத்தில் தலையணையைத் தூக்கிக்கொண்டு ஓடிவந்து ஊர் கடந்தபின் பாலூட்டப் பிள்ளையைக் கேட்ட மனைவிக்குத் தலையணையை நீட்டிய கணவன் மீண்டும் கதறியபடியே ஊருக்குள் ஓடி தூங்கிக்கொண்டிருந்த பிள்ளையைத் தூக்கிக் கொண்டு வந்தது, ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தியேழு இப்போதும் கண்ணுக்குள் நிற்கும் காட்சியது.

இப்போது பூவரசங் குளத்துக்குள் இருந்த சனம் அள்ளுப்பட்டு ஓடிவந்து கொண்டிருந்தது. "என்ன பிரச்சினையாம்"

"பூவரசங்குளத்துக்க ஆமி வந்திட்டானாம் என்றபடி மிதிவண்டிகளில் ஓடும் ஆண்கள். இவர்களைத் தொடர்ந்து ஒரு உழவியந்திரப் பெட்டி நிறைய இளம் பெண்களை ஏற்றியவாறு வந்த உழவியந்திரம் சிவநகர் அறிவிப்புப் பலகையைக் கடந்தது. அதனருகே வந்த உழவியந்திரம் தண்ணீர் குடிப்பதற்காக நின்றது. தம்பிராசா வீட்டுக்காரர் ஒரு பானையில் தண்ணீர் நிரப்பி வைத்திருந்தனர். பார்வதியும் ஒரு பெரிய நீர்ப்பானையை நிரப்பி வைத்திருந்தாள். மக்கள் வீடுகளை விட்டு அவலப்பட்டுக்கொண்டு ஓடிவரும் காட்சி மிகப் பரிதாபமானது. "இன்றைக்கா நேற்றா" பார்வதி நீர்ப்பானையில் நீரை வார்த்தபோது ஓடிவந்துகொண்டிருந்த மக்களில், இரண்டு வயது மதிக்கத்தக்க ஒரு குழந்தை தாயிடம் தண்ணீர்கேட்டு அழுதது. அவள் தண்ணீரை அள்ளப் பாத்திரமின்றி பார்வதியைப் பார்க்க இவள் கையிலிருந்த செம்பைக்கொடுத்தாள். பிள்ளை அவதிப் பட்டு கையை நீட்டியபோதுதான் பார்த்தாள் கையில் எதுவோ பிரண்டு காய்ந்து போயிருந்தது. "அ... என்ன கையெல்லாம் என்னவோ பிரண்டிருக்கு..." என்றாள் பார்வதி. கேள்வி தாயைப் புலம்பவைத்தது. அவள் விம்மியவாறே "பிள்ளை சாப்பிட்டுக் கொண்டிருந்தது. ஆமி வாறானெண்டு போட்டிட்டு ஓடிவாறம்" என்றாள்.

மருதனும் அவன் மனைவி ரஞ்சிதமும் வயல் வரப்பு வழியே ஓடிவந்தார்களாம். ஆமி விரட்டிக்கொண்டே வந்து மருதனைப் பிடித்துவிட்டார்களாம். நல்ல வேளை அவன் மனைவி ரஞ்சிதம் மட்டும் தப்பி வந்திருந்தாள். அவள் அழுதுகொண்டு நின்றாள். "அவர் ஓடு ஓடு" எண்டு கத்தினதால நான் விட்டுட்டு ஓடிவந்திட்டன். அவர என்ன செய்யிறாங்களோ..." என்று பிலாக்கணம் வைத்தாள். பானையில் நீர் குறைந்தது. பார்வதி வீட்டை நோக்கி உரத்த குரலில்,

"பானைக்க தண்ணி முடியுது. கொண்டு வாங்கோ காணாது" என்று சத்தமிட்டாள். சின்னமகன் ஒரு வாளியைத் தூக்க மாட்டாமல் தூக்கிவர,


"தம்பி உதைக்கொண்டு போ நான் பானைக்க அள்ளிக் கொண்டு வாறன்" என்றவாறு அவனை விலத்திவிட்டு கிணற்றடி நோக்கி ஓடினாள் அவள். ரெண்டு வளவுக்கு அயலில் இருந்தது கிணற்றடி.

"இப்படித்தான் அம்பத்தெட்டில அப்பநான் சின்னன். சனமெல்லாம் அத்துப்பட்டு யாழ்ப்பாணம் ஓடினதுகள்."

"

தொட்டிலில் போட்ட குழந்தையைத் தூக்குவதாக எண்ணி பயத்தால் ஏற்பட்ட பதற்றத்தில் தலையணையைத் தூக்கிக்கொண்டு ஓடிவந்து ஊர் கடந்தபின் பாலூட்டப் பிள்ளையைக் கேட்ட மனைவிக்குத் தலையணையை நீட்டிய கணவன் மீண்டும் கதறியபடியே ஊருக்குள் ஓடி தூங்கிக்கொண்டிருந்த பிள்ளையைத் தூக்கிக் கொண்டு வந்தது. ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தியேழு இப்போதும் கண்ணுக்குள் நிற்கும் காட்சியது

"



தமிழ்க்கவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்வதி தனக்குள் பேசிக்கொண்டே நீரை வார, உழண்டி கிறிச்சு கிறிச்சென்று ஒல மிட்டது. கதையைக் கேட்டுக்கொண்டு அருகில் நின்ற தர்மலிங்கம் தனது நினைவை மீட்டினார்.

"அப்ப நம்ப தோட்டம் தலவாக்கொலயில. நாம காடு வழியா ஓடி கால் நடையாகவே வந்தில்ல தப்பிச்சோம்" என்றவர் தானும் ஒரு வாளியில் தண்ணீர் அள்ளி எடுத்தவாறு வந்தார்.

வீதியில் நின்ற உழவுயந்திரத்தைக் கவனித்தவர் "நம்பு மனேச்சர் வீட்டு ரக்ரரில பொம்பிளப் பிள்ளைங்க போல" என்றார்.

"ம்... ம்" என்ற பார்வதி "மெய்யே தர்மலிங்கண்ணை, இந்தத் தண்ணி அள்ளி ரோட்டில பானையில் வைக்கிறது எங்கட ஊர் வழக்கம்... அங்க வசுவில்ல. சனம் கால்நடையாத்தான் அங்கால இஞ்சால போகும். தண்ணி விடாச்சா வீட்டுக்காரரக் கூப்பிடாம மர நிழலில உள்ள பானையில குடிச்சிட்டு கொஞ்சம் காலாறிப் போகுங்கள்" என்றவள் தொடர்ந்து இப்ப நரல் பெருகி வாகனங்களும் வந்து கடைகண்ணியளும் ஊருக்க வந்திட்டுது. இப்பத் தண்ணி வைக்கிறேல்ல" என்றவள் தொடர்ந்து வரும் உழவுயந்திரத்தையும் அதிலும் வரும் இளம்பெண்களையும் பார்த்து "நல்...லதுதான்" என்று ஆரம்பித்தவள் தொண்டைக்குள் வந்த கதையை வாய்க்குள்ளேயே அடக்கிக் கொண்டாள். இப்படியே நான்கு உழவியந்திரங்கள் போய் முடிந்தன. இப்போது நான்கு உழவியந்திரங்களின் பின் வந்த தங்கவேலு மாஸ்ரர் தள்ளாடிய படி வந்து மரத்தடியில் குந்தினார்.

"என்ன மாஸ்ரர் நாலு பெட்டியிலலையும் வெறும் பொம்பிளைங்களாப் போகுது. மத்தாளுங்கெல்லாம் எங்க" என்றார் தர்மலிங்கம் அடக்கமாட்டாதவராக.

"உதென்ன கதை ஆமி வந்திட்டான் பொம்பிளப் பிள்ளையள அதுக்கவைச்சிருக்கேலுமே. ஆம்பிளையளே அடியோட தப்ப... அதுகள முன்னுக்கு அனுப்பிப் போட்டு மற்றவை பின்னால வருவினை"

"ஹ...ஹ... உதை நேரத்தோடை நினைச்சு பயிற்சி எடுத்த பொம்பிளப் பிள்ளைகள் ஒரு ரக்ரர் பெட்டியோடதான் ஆமியோட சண்டைக்குப் போயிருக்குதுகள்... ம்... இதுகளும் பயிற்சி எடுத்திருந்தா இப்பிடி ஓடவருமே" என்ற தர்மலிங்கத்தை ஏளனமாக நோக்கிய தங்கவேலு மாஸ்ரர்,

"அவையளும் இவையளும் ஒண்டே..." என்று கூறிவிட்டு நகர்ந்தார்.

இப்போது அந்த ஒரு ரக்ரர் பெட்டியில் பூவரசங்குளம் போன பெண் புலிகள் அணி வெற்றிகரமாகப் பங்களிப்புச் செய்து, நான்கு பெண்கள் வீரச்சாவைத் தழுவினாலும் போராட்டம் வெற்றிகரமாக முடிந்திருந்தது.

சனம் போய்முடிந்து வீதி வெறிச்சோடியது. "ம்... நாலு ரக்ரர் பெட்டையளும் பயிற்சி எடுத்திருந்தா..." அங்கலாய்த்தாள் பார்வதி. "என்னாத்துக்கு வலயங்கட்டும் விளாத்திக் குளமும் பாயுறாளுங்க" என்று முடித்தார் தர்மலிங்கம்.



சண்டை நடந்து முடிந்தாலும், சனம் போய் முடிந்தாலும், போராளிகள் நடமாட்டம் அங்கிருந்தது. சிவநகர்ச் சந்தியில் சுசி மாமாவுடைய குழு வந்து நின்றது. அருகில் சிறுவர் பாடசாலைக்கென போடப்பட்ட கொட்டில் இருந்தது. அதுவே போராளிகள் தங்கிடமாக மாறி விட்டிருந்தது.

அங்கிருந்து பூவரசங்குளம் செல்லப் புறப்பட்ட குழுவிலிருந்து போராளி மஞ்சுதன் ஓடிவந்தான்.

"என்ன தம்பி ஆமி போட்டானே" என்று கேட்டனர் சிலர். "இல்ல சும்மா கொஞ்ச இடம் பின்வாங்கியிருக்கிறான்"

"அப்ப...பெடியள் விட்டிருவாங்களோ"

"ச்சா... அப்பிடி விடுறாங்களோ..."

"நளாயினியும் குறுப்போட போனதெல்லே"

"அ... அவ முதல்நாளே காயப்பட்டிட்டா..."

"ஆ...பெரியகாயமே...."

"பெரிசெண்டுதான் சொல்லிகினம். வயித்துக் காயமாம்"

"கடவுளே.... நல்ல பிள்ள... வேற ஆருக்கும் காயமே"

"ஆரார் வீரச்சாவு..."

அவன் யாருக்கும் பதிலளிக்காமல்

"இந்தா இந்தக் 'கானு'க்க தண்ணி தாங்கோ" என்று தண்ணீரை வாங்கினான்.

"சாப்பாடு வரும் எடுத்து வையுங்கோ பார்வதி அம்மா பிறகு வாறம்" என்றபடியே ஓடினான்.

"என்னடாப்பா சத்தத்தக் காணேல்ல. ஆமி போட்டானோ..." என்றவாறே ஊர்பார்க்கப்புறப்பட்டு வந்தவர்களைச் சிவநகர்ச் சந்தியில் போராளிகள் மறித்தனர்.

"அவன் போகையில்ல பம்மிற்றான். ஒருவரும் போக வேண்டாம்" என்றனர்.

அவர்கள் போய்விட்டதாகக் கருதிய இராணுவம் மீண்டும் பெருமெடுப்பில் மோதினான். இப்போது பாதையை மாற்றி ஆண்டியா புளியங்குளம் நேரியகுளம் வழியாக நீலியா மோட்டையை அடைந்ததும் கூழாங்குளம் கன்னாட்டியை அடுத்தும், பறையனாலங்குளம் வழியாகவும் மன்னார் வீதியைத் தொட்டது இராணுவம். இப்போது எறிகணைத் தாக்குதல்களும் உலங்கு வானூர்திகளின் தாக்குதல்களும் வலுக்கவே மடுக்குளம் சின்னத்தம்பனை வேலங்குளம் பெரிய தம்பனை போன்ற கிராமமக்களும் இடம்பெயர்ந்தனர். எனினும் போராளிகளின் வசதிகளைக் கவனிப்பதற்காக பார்வதி தர்மலிங்கம் ராயப்பன் போன்றோரின் குடும்பங்கள் அங்கேயே சிவநகரில் தங்கிவிட்டனர். வெடிச் சத்தங்களால் மிரட்சியடைந்த காட்டு யானைகள் தறிகெட்டு திடீரென சிவநகருள் புகுந்தன.

(இன்னும் வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புலம் பெயர் நாடுகளில் உலகத் தொழிலாளர் நாள் மே 1



நெதர்லாந்து






சுவீடன்






விற்சலாந்து






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நினைவுக்குறிப்பு



## சிங்களம் மட்டும் சட்டம்

05.06.1956 இல் எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்க ஆட்சிக்காலத்தில் சிங்களம் மட்டும் என்னும் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டது. இதன்மூலம் தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக்கப்பட்டனர்.

## அம்பாறைப் படுகொலை

அம்பாறையில் 1956 யூன் 10-11 ஆகிய இரு தினங்களில் 150ற்கும் மேற்பட்ட தமிழர்கள் சிங்கள அரசினாலும், அதன் கைக்கூலிகளாலும் கொன்றொழிக்கப்பட்டார்கள்.






*சிங்களப் பொலிசாரின் முற்றுகைக்குட்பட்டபோது, தியாகி சிவகுமாரன் அவர்கள் 05.06.1974 அன்று முதன்முதலாக தனது உயிரை விடுதலைப் போருக்காக விதையாக்கிக்கொண்டார்.*

## காரைநகரில் விமானத் தகர்ப்பு

காரைநகர் பருத்தியடைப்பில் சிறீலங்கா கடற்படையினரின் விமானமொன்று 15.06.1984இல் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது.

## ஆறாம் கட்டை, தம்பலகாமம், கட்டைபறிச்சான் படுகொலைகள்

26.06.1986இல் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 6ஆம் கட்டை என்னும் இடத்தில் 6 தமிழர்கள் சிங்கள இராணுவத்தினரால் வெட்டிக்கொல்லப்பட்டார்கள். அத்துடன் அங்கிருந்த 70ற்கும் மேற்பட்ட கடைகளும், வீடுகளும் சூறையாடப்பட்ட பின்னர் எரித்துச் சாம்பலாக்கப்பட்டன. தம்பலகாமம் என்னும் இடத்தில் 30 தமிழர்கள் சிங்கள ஊர்காவல் படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டு பின்னர் வில்ப்பத்து என்னும் இடத்தில் கொலைசெய்யப்பட்டார்கள். திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கட்டைபறிச்சான் என்னும் இடத்தில் 30 பொதுமக்கள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டார்கள். இவர்களில் 6 பேர் பின்னர் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டார்கள்.

## இரண்டாம் ஈழப்போர் ஆரம்பம்

சிறீலங்காவுக்கு எதிராக 10.06.1990இல் மீண்டும் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமானது.

## கொண்டச்சி இராணுவ முகாம் தகர்ப்பு

மன்னாரில் சிங்களக் குடியேற்றங்களுக்கு ஒரு பகுதியில் காவலாய் இருந்த கொண்டச்சி இராணுவ முகாம் 21.06.1990 இல் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது. இத்தாக்குதலில் பவள் கவச வண்டியொன்று முதன்முதலில் கைப்பற்றப்பட்டது.

## வந்தாறுமூலைப் படுகொலைகள்

ஆர்.பிரேமதாசா ஆட்சிக்காலத்தில் வந்தாறுமூலையில் சிறீலங்கா இராணுவத்தினரால் 25 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டனர். 08.06.1991இல் நடைபெற்ற இச்சம்பவத்தில் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குப்பின் படுகொலை செய்யப்பட்டனர்.



## கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள்

12-13.06.1991 ஆகிய இரு தினங்களில் வீடுகள், பாடசாலைகள், அரிசி ஆலைகளில் தங்கியிருந்த மக்களை சுட்டும் வெட்டியும், பாலியல் வல்லுறவிற்குப்பின் படுகொலை செய்யப்பட்டுமென 185 தமிழர்கள் கொல்லப்பட்டனர். சிறீலங்கா விசேட அதிரடிப்படையின் இவ்வெறியாட்டத்தினால் கொல்லப்பட்டவர் தவிர 300 பேர் படுகாயப்படுத்தப்பட்டும், 1500 பேர்வரை காடுகளுக்குள் துரத்தப்பட்டனர்.

## மண்டைதீவு அதிரடித்தாக்குதல்

மண்டைதீவில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் மீது ஆச்சரியமூட்டக்கூடிய வகையில், விடுதலைப் புலிகள் 26.06.1995 இல் நடாத்திய தாக்குதலில், இராணுவ லெப்.கேணல் உட்பட 110இற்கும் அதிகமான சிறீலங்காப் படையினர் கொல்லப்பட்டு பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

## சுதந்திரபுரப் படுகொலைகள்

வன்னியின் சுதந்திரபுரம் எனும் இடத்தில் சிறீலங்கா விமானப்படையினரின் கிபீர் குண்டுவீச்சு விமானங்களினாலும், ஆனையிறவு படைத்தளத்தில் இருந்து ஏவிய ஆட்லறி செல்களினாலும் 29 தமிழர்கள் கொல்லப்பட்டனர். 10.06.1998 இல் சந்திரிகா ஆட்சிக்காலத்தில் நடாத்தப்பட்ட இந்த மிலேச்சத்தனமான செயலினால், 60 பேருக்குமேல் படுகாயமடைந்ததுடன் பெறுமதிமிக்க சொத்துக்களும் வளங்களும் நாசமாகின.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மீள்பார்வை

## 02.04.2004

02.04.2004 அன்று சிறீலங்காவின் பதின்மூன்றாவது பாராளுமன்றத் பொதுத் தேர்தல் நடைபெற்றது , தமிழ்மக்கள், மிகுந்த ஆர்வத்துடன், விழிப் புணர்வுடன் கலந்துகொண்டு வாக்களித்தனர்.

பாராளுமன்றத் தேர்தலில் வெளிவந்துள்ள முடிவுகளின்படி, சந்திரிகா தலைமையிலான மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி முன்னணியிலும், ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி இரண்டாம் இடத் திற்கும் தள்ளப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அமோக வெற்றியைப் பெற்றுள்ளது. அளிக்கப்பட்ட வாக்குகளில், தொன்னூறு வீதத் திற்கும் மேலான வாக்குகளைப் பெற்று, அதிக இடங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றுள்ளது.

## 05.04.2004



05.04.2004 அன்று, ஜெனீவாவில் இடம்பெற்ற பொங்கு தமிழ்ப் பேரணி யில், பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் கலந்துகொண்டனர். ஜெனீவா நகரின் போக்குவரத்தையே ஸ்தம்பிக்கச் செய்யும் அளவிற்கு, தமிழ்மக் களின் பொங்கு தமிழ்ப் பேரணி, நகரின் வீதிகளை முற்றாக அடைத்துக் கொண்டதுடன், ஐ.நா மன்றத்திடலையும் வியாபித்து நின்றது. சுமார் பதினையாயிரம் வரையிலான தமிழ்மக்கள் கலந்துகொண்டனர் எனத் தெரி விக்கப்படுகின்றது.

## 06.04.2004

சிறீலங்காவின் புதிய பிரதமராக, மகிந்த இராஜபக்ஸ்ச பதவியேற்றுள்ளார். சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா முன்னிலையில், அவர் 06.04.2004 அன்று பதவிப்பிரமாணம் செய்துள்ளார்.

## 09.04.2004

மட்டக்களப்பில், கருணாவின் பிடியில் இருந்து, போராளிகளையும் பொது மக்களையும் மீட்கும் நடவடிக்கை தமிழீழ விடுதலைப் புலிகளால் 09.04.2004 அன்று அதிகாலை ஆரம்பிக்கப்பட்டது.

## 12.04.2004

12.04.2004 அன்று மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்கள், விடுதலைப் புலிகளால் முற்றாக மீட்கப்பட்டுள்ளன. கருணா குழு மாவட்டத்தின் எல் லைப் பகுதியிலுள்ள காட்டுப்பகுதிக்கு தப்பியோடியுள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது. மீட்கப்பட்ட பகுதிகளில் எல்லாம் பொதுமக்கள், விடு தலைப் புலிகளை வரவேற்று தமது மகிழ்ச்சிகளைத் தெரிவித்தனர்.

## 19.04.2004

அன்னை பூபதியின் 16ம் ஆண்டு நினைவெழுச்சிநாள் நிகழ்வுகள், 19.04.2004 அன்று தாயகம் தழுவிய ரீதியில் பேரெழுச்சியுடன் நடை பெற்றன. தாயகத்தின் அனைத்துப் பகுதிகளிலும், எழுச்சிக்கூட்டங்கள், கருத்தரங்குகள், கலைநிகழ்ச்சிகள், மற்றும் சமூகநலச் செயற்பாடுகள் நடைபெற்றன. அடையாள உண்ணாவிரதப் போராட்டங்கள் நடை பெற்றன. வழிபாட்டிடங்களில், விசேட வழிபாட்டுநிகழ்வுகளும் இடம் பெற்றன. தாயகத்தின் அனைத்துப் பகுதிகளும், மஞ்சள் சிகப்பு வர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு, விடுதலைப்பாடல்கள் ஒலிக்க உணர் வெழுச்சியுடன் காணப்பட்டன.

## 20.04.2004



20.04.2004 அன்று, கிளிநொச்சி சென்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

பொதுத்தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைந்த வெற்றி, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு வழங்கப்பட்ட மாபெரும் அங்கீகாரம் என, தேசியத் தலைவர் அவர்கள், தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில் தெரிவித் தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின் பின்னர், மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ. சந்திர சேகரன் அவர்களும், மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் அவர்களும் தமிழீழத் தேசியத் தலைவரைச் சந்தித்து கலந்து ரையாடினர்.

## 25.04.2004

மட்டக்களப்பு மாவட்டத்தில், சிறீலங்கா வவுணதீவு இராணுவ முகாம் பக்கமாக இருந்து சென்ற குழு எனக் கருதப்படும், இனந்தெரியாத குழு ஒன்றால் மேற்கொள்ளப்பட்ட வன்முறை வெறியாட்டத்தில், ஏழு விடு தலைப் புலி வீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர். இவ்வன்முறை வெறியாட் டம் 25.04.2004 அன்று நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

## 28.04.2004

நுவரெலியா, கந்தப்பொல என்ற இடத்தில் சிறீலங்காப் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், மூன்று தமிழர்கள் கொல்லப் பட்டுள்ளனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர். 28.04.2004 அன்று மாலை இடம்பெற்ற வீதி விபத்தொன்றையடுத்து, ஏற்பட்ட முறுகல் நிலை, தமிழ் சிங்கள மக்களுக்கிடையிலான மோதலாக உருவெடுத்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## உலகத் தொழிலாளர் நாள்:

தமிழீழத்திலும், தமிழீழத்திற்கு வெளியே புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் எல்லாம் தமிழீழ மக்கள், உலகத் தொழிலாளர் நாளை, வெகு சிறப்பாகவும் எழுச்சியுடனும் கொண்டாடியுள்ளனர்.

தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும், பேரணிகள், பொதுக்கூட்டங்கள் என்பன நடைபெற்றன.

பிரான்ஸ், நோர்வே, சுவிஸ், கொலன்ட் போன்ற நாடுகளில், உலகத் தொழிலாளர் அமைப்புக்களுடன் இணைந்து, தமிழீழ மக்கள், பேரணிகள் எழுச்சிக் கூட்டங்கள் என்பனவற்றை நடத்தியுள்ளனர்.

தமிழர் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பனவற்றை வலியுறுத்தும் வகையிலேயே, தமிழ்மக்களால் பேரணிகள் பொதுக்கூட்டங்கள் என்பன நடத்தப்பட்டன.

மலையகத்தில், இந்நாள், கறுப்புநாளாக அனுட்டிக்கப்பட்டுள்ளது. கந்தப்பொலவில் தமிழ்மக்கள் மீது சிங்களக் காடையர்களும், சிங்களப் பொலிசாரும் தாக்குதல் நடத்தியதைக் கண்டித்தே, தொழிலாளர் நாளை கறுப்புநாளாக மலையக மக்கள் அனுட்டித்துள்ளனர்.

## நோர்வேயின் சமாதானச் சிறப்புத்தூதுவர், அரசியல்துறைப் பொறுப்பாளர் சந்திப்பு:

நோர்வேயின் சமாதானச் சிறப்புத்தூதுவர் எரிக் சுல்கைம் மற்றும் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் கான்ஸ் பிராஸ்கர் மற்றும் வெளிவிவகார அமைச்சக அதிகாரிகள் ஆகியோர் 03.05.2004 அன்று கிளிநொச்சி சென்று, தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களுடன் கலந்துரையாடியுள்ளனர்.

சமாதான முன்னெடுப்புக்களை மீண்டும் மேற்கொள்வது குறித்த, சிறீலங்கா அரசின் நிலைப்பாட்டை, சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களுடனான சந்திப்பில், நோர்வே தரப்பினர் எடுத்துக்கூறியுள்ளனர்.

பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டும் என, கூடுதல் கரிசனையுடன் சிறீலங்கா அரசு இருப்பதாக, நோர்வே தரப்பினர், தம்மிடம் எடுத்துக்கூறியதாக, தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

## மலையகத்தில் கர்த்தால் போராட்டம்:

நுவரெலியா கந்தப்பொலவில் தமிழ்மக்கள் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து, 03.05.2004 அன்று மலையகத்தில், தோட்டத் தொழிலாளர்கள், கர்த்தால் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்நாளை கறுப்பு நாளாக அனுட்டித்த மலையக மக்கள், வீதிகள் தோறும், கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டனர். இதேவேளை, முக்கிய நகரங்களில், சிறீலங்காப் பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

## மட்டக்களப்பில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை:

மட்டக்களப்பு களுவங்கேணியில், 05.05.2004 அன்று செல்லையா குமாரசூரியம் என்ற குடும்பஸ்தர், இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அவரது வீட்டுக்குச் சென்ற இருவர், அவரை பேசவருமாறு அழைத்து, பின் சுட்டுவிட்டுச் சென்றுள்ளனர் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

## மட்டக்களப்பில், விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருவர் படுகொலை:

மட்டக்களப்பில், 06.05.2004 அன்று பிற்பகல், விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருவர், இனந்தெரியாத ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். சிறீலங்காப் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில், மட்டக்களப்பு வாழைச்சேனை வீதி தன்னாமுனையில் பட்டப்பகலில், இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு நகரில் இருந்து கரடியனாறு நோக்கி மோட்டார் சைக்கிளில் இவர்கள் இருவரும் சென்று கொண்டிருந்த வேளை, அடையாளம் தெரியாத நாசகாரிகள், இவர்களை வழிமறித்து சுட்டுக்கொன்றுள்ளனர் எனத் தெரியவருகின்றது.



## தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களை, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் சந்தித்தார்:

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களை, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் 07.05.2004 அன்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

புதிய அரசு பதவியில் அமர்ந்துள்ள நிலையில், புதிய சூழ்நிலையில் மேற்கொள்ளப்படவுள்ள சமாதான நடவடிக்கைகளில், விடுதலைப் புலிகளின் நகர்வுகள், நிலைப்பாடுகள் என்பன குறித்து, தேசியத் தலைவருடன் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் ஆலோசனை நடத்தியிருந்தார்.

## நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர், தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களைச் சந்தித்தார்:

11.05.2004 அன்று, கிளிநொச்சி சென்ற நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் அவர்கள், தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களைச் சந்தித்து, கலந்துரையாடியுள்ளார்.

கிளிநொச்சி சென்ற நோர்வே வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான நோர்வேயின் சமாதான உயர்மட்டக் குழுவினர் தேசியத் தலைவருடன், விரிவான பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

அன்றைய சந்திப்பில், தேசியத் தலைவர் அவர்களுடன், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களும் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

தமிழ் மக்கள் தேர்தல் மூலம் வழங்கிய ஆணையின் பிரகாரம், நாம் முன்னெடுக்கும் பேச்சுவார்த்தை வரையறைகளை ஏற்றுக்கொண்டு பேச்சுவார்த்தை நடாத்த சிறீலங்கா அரசு தயார் என்றால், பேச்சுக்களில் கலந்துகொள்ள விடுதலைப் புலிகள் எப்போதும் தயாராகவே இருக்கின்றனர் என, தேசியத் தலைவர் அவர்கள், நோர்வே தரப்பினரிடம் எடுத்துக்கூறியுள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பதிவுகள்



எதன் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு, தொடரப்படவேண்டும் என, விடுதலைப் புலிகள் இயக்கம் எதிர்பார்க்கின்றது என்பதை தேசியத் தலைவர் அவர்கள் நோர்வே தரப்பிற்கு தெளிவாக எடுத்து விளக்கியுள்ளார்.

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை ஏற்றுக்கொண்டு, சிறீலங்கா அரசு பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் என்பதையும், இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதையும் தேசியத் தலைவர் அவர்கள் அன்றைய கலந்துரையாடலில் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், முன்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் தொடர்ச்சியாக, அதன் நடைமுறைகளை ஒட்டியே பேச்சுவார்த்தைகள் நடாத்தப்படவேண்டும் என்பதையும், அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை சர்வதேச நாடுகளிலேயே நடத்தப்பட வேண்டும் என்பதையும் தலைவர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

அன்றைய பேச்சுவார்த்தையின் பின்னராக, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் ஊடகவியலாளர்களைச் சந்தித்து அன்றைய கலந்துரையாடல் குறித்து விளக்கமளித்தார்.



## மட்டக்களப்பில், விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்காப் படையதிகாரிகளுக்கும் இடையே சந்திப்பு:

மட்டக்களப்பு வவுணதீவில், விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்காப் படையதிகாரிகளுக்கும் இடையே 11.05.2004 அன்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. அங்கு, அண்மைக்காலமாகத் தொடரும், விடுதலைப் புலிகளுக்கும் பொதுமக்களுக்கும் எதிரான வன்முறைச் செயற்பாடுகள், சமாதான நடவடிக்கைக்கு பெரும் அச்சுறுத்தலாக உருமாறிவருகின்றது என, விடுதலைப் புலிகளாலும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினராலும் எச்சரிக்கப்பட்டுவந்துள்ள நிலையில், அன்றைய இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் திரோன் புறாவ் கோவ்டே அவர்களின் தலைமையில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது. விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி ரமேஸ் தலைமையில் விடுதலைப் புலிகள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். மட்டக்களப்பில் தொடரும் வன்சம்பவங்கள் உடன் நிறுத்தப்படுவதுடன், இது சம்பந்தமாக, இரு தரப்பும் இணைந்து ஆராய்ந்து, துப்புத்துலக்கி குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதென இணக்கம்காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



நோர்வேயின் தூதுக்குழுவினர், விடுதலைப் புலிகள் தரப்பு சந்திப்பு:

சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கு உண்டான வரையறைகள் வழிமுறைகள் குறித்து விடுதலைப் புலிகள் வலியுறுத்திய விடயங்கள் தொடர்பாக, சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவின் நிலைப்பாட்டை விடுதலைப் புலிகளுக்குத் தெரிவிப்பதற்காக, நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்கேசன் தலைமையிலான நோர்வேயின் தூதுக்குழுவினர் 13.05.2004 அன்று வன்னி சென்றனர்.

சமாதானச் செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில், விடுதலைப் புலிகள் தரப்பில், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## குமுதினிப் படகு படுகொலை நிகழ்வின் 19ம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள்:

நெடுந்தீவில், சிங்களப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட குமுதினிப் படகு படுகொலை நிகழ்வின் 19ம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள், யாழ்ப்பாணத்திலும், குறிப்பாக நெடுந்தீவிலும் நடைபெற்றுள்ளன.

1985ம் ஆண்டு, நெடுந்தீவுக் கடற்பரப்பில், பொதுமக்கள் பயணம் செய்த குமுதினிப் படகை சுற்றிவளைத்த சிங்களப்படையினர் அதில் பயணம் செய்த பொதுமக்களில், முப்பத்தியாறு பேரை, சுட்டும் வெட்டியும் கோரமாகப் படுகொலை செய்தனர். ஏனையோரைப் படுகாயப்படுத்தினர்.

சிங்களப்படையால் படுகொலை செய்யப்பட்ட மக்களின் நினைவாக, நெடுந்தீவுக் கடற்பரப்பில், விசேடமாக அமைக்கப்பட்ட மிதக்கும் மேடையில் சுடர்கள் ஏற்றப்பட்டு, வணக்கம் செலுத்தப்பட்டது. நெடுந்தீவில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டு, துக்கநாளாக இந்நாள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.




## 'விடுதலை' கட்டுரைத் தொகுப்பு நூலின் வெளியீட்டு விழா:

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எழுதிய, 'விடுதலை' கட்டுரைத் தொகுப்பு நூலின் வெளியீட்டு விழா 16.05.2004 அன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது. யாழ் பல்கலைக்கழகத்தில் கைலாசபதி கலையரங்கில், இவ்வெளியீட்டுவிழா இடம்பெற்றுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பதிவுகள்

### சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டவருக்கு மரண தண்டனை:

யாழ் குடாநாட்டில், பல சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்ட ஒருவருக்கு, எல்லாளன் படை 15.05.2004 அன்றிரவு மரண தண்டனை வழங்கியுள்ளது. யாழ் ஐந்து சந்தியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சந்திரலலித் என்பவரே தண்டனைக்கு உள்ளானவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.



### யப்பானின் சிறப்புத் தூதுவர், தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சந்திப்பு:

18.05.2004 அன்று, கிளிநொச்சி சென்ற யப்பானின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாசி அவர்கள், தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

புதிய அரசு பொறுப்பேற்றுள்ள நிலையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முன்னெடுப்புக்கள் சம்பந்தமாகவும், தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் சம்பந்தமாகவும் இன்றைய சந்திப்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதாக, தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள், சந்திப்பின் பின்னராக ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார். பேச்சுவார்த்தைகள் விரைவாக ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதும் மிக விரைவில் சுமூகமான சூழல் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதும் யசூசி அகாசியின் அதீத அக்கறையாக இருந்தது எனத் தெரிவித்த தமிழ்ச்செல்வன் அவர்கள், இது தொடர்பான தங்களுடைய கரிசனையையும் அவர் வெளிப்படுத்தினார் எனவும் தெரிவித்தார்.

### சிறீலங்கா பொலிஸ் புலனாய்வுப் பிரிவு உத்தியோகஸ்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்:

மட்டக்களப்பில், 19.05.2004 அன்று, சிறீலங்கா பொலிஸ் புலனாய்வுப் பிரிவு உத்தியோகஸ்தர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்துகொண்டிருந்த மேற்படி புலனாய்வுப் பிரிவு உத்தியோகஸ்தரை, உப தபால் கந்தோர் பகுதியில் வைத்து இனந்தெரியாதோர், துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### விடுதலைப் புலிகளுக்கு எதிராக இனந்தெரியாத நாசகாரிகள் தாக்குதல்:

மட்டக்களப்பில், 20.05.2004 அன்று, விடுதலைப் புலிகளுக்கு எதிராக இனந்தெரியாத நாசகாரிகள் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில், விடுதலைப் புலி வீரர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், மேலும் இருவர் காயமடைந்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட்ட விரிவுரையாளர், சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்:

மட்டக்களப்பில், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட்ட விரிவுரையாளர், குமாரவேல் தம்பையா, 24.05.2004 அன்று, இனந்தெரியாத ஆயுததாரிகளால், அவரது வீட்டில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். மட்டக்களப்பில் ஞானசூரியம் சதுக்கத்தில் உள்ள, அவரது வீட்டுக்கு சென்ற ஆயுததாரிகள், அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டு, தப்பிச் சென்றுள்ளனர். வவுனியா ஆசிக்குளத்தைச் சேர்ந்த, விரிவுரையாளர் குமாரவேல் தம்பையா, கருணா கும்பல் மட்டக்களப்பில் குழப்பம் விளைவித்த காலத்தில், கருணா கும்பலால் வெளியேற்றப்பட்டிருந்தார் எனவும், கருணா கும்பலிடம் இருந்து மட்டக்களப்பு மீட்கப்பட்ட பின்னர் அவர், மீண்டும், மட்டக்



களப்பு சென்று, தனது விரிவுரையாளர் பணியைத் தொடர்ந்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



### நோர்வே சமாதானத் தூதுக்குழுவினர், தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சந்திப்பு:

26.05.2004 அன்று, கிளிநொச்சி சென்ற, நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சுல்கைம் தலைமையிலான நோர்வே சமாதானத் தூதுக் குழுவினர், தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து, அன்றைய பேச்சுக்களில் முக்கியமாக ஆராயப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதில், விடுதலைப் புலிகள் ஆர்வமாக இருப்பதை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழச்செல்வன், நோர்வே தரப்பினருக்கு தெளிவுபடுத்தியதுடன், பேச்சுக்கள், முதலில், இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை அமைப்பது தொடர்பாகவே அமையவேண்டும் எனவும், இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அமைக்கப்பட்ட பின்னர், இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு பற்றிப் பேசமுடியும் எனவும் தெரிவித்துள்ளார்.



### கிழக்குப் பல்கலைக்கழக சிரேஸ்ட்ட விரிவுரையாளரின் பூதவுடல், தகனம்:

மட்டக்களப்பில், இனந்தெரியாத நாசகாரிகளால் படுகொலை செய்யப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழக சிரேஸ்ட்ட விரிவுரையாளர் குமாரவேல் தம்பையா அவர்களின் பூதவுடல், 25.05.2004 அன்று, அவரது சொந்த இடமான வவுனியா ஆசிக்குளத்தில் தகனம் செய்யப்பட்டது. இறுதி நிகழ்வில், பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், கல்விச் சமூகத்தினர், பொதுமக்கள் எனப் பெருமளவிலானோர் கலந்துகொண்டு, நாசகாரிகளால் அநியாயமாகப் பலிகொள்ளப்பட்ட விரிவுரையாளருக்கு இறுதி வணக்கம் செலுத்தினர். விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களும், இறுதிவணக்க நிகழ்வில் கலந்துகொண்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எரிமலை


பண்பாட்டு
சமூக சஞ்சிகை

விடுதலை வேட்கை மிக்க
எழுச்சிப் படைப்புக்கள்,
ஒடுக்குமுறைக்கு எதிரான
ஆவேசக்குரல்,
போர்க்கால இலக்கியத்தின்
யதார்த்தப் பதிவு,
மண்ணின் மணத்தோடு
மன உணர்வுகளை
வெளிப்படுத்தும் உன்னத
இலக்கியமாக எரிமலை

ERIMALAI,
C/O T.C.C France, 341, Rue Des Pyrenees,
75020 Paris, FRANCE.
Fax: (33) 1 43 58 11 91

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்